


# தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com





CHENNAI | Volume- 3 | Issue:264 | 09-04-2026 | வியாழக்கிழமை | Free E- Paper | ●சென்னை ●மதுரை ●கோவை ●திருச்சி


## இன்றைய பஞ்சாங்கம்

09.04.2026 பங்குனி 26
வியாழக்கிழமை

சூரிய உதயம் 6.06

திதி:
இன்று இரவு 7.32 வரை சப்தமி பின்பு அஷ்டமி.

நட்சத்திரம்:
இன்று காலை 7.17 வரை மூலம் பின்பு பூராடம்.

யோகம் :
இன்று மாலை 4.18 வரை பரிகம் பின்பு சிவம்.

கரணம்
இன்று காலை 6.40 வரை பத்திரை பின்பு இரவு 7.32 வரை பவம் பின்பு பாலவம்.

அமிர்தாதி யோகம் :
இன்று காலை 6.08 வரை யோகம் சரியில்லை பின்பு சித்த யோகம்.

சந்திராஷ்டமம் :
இன்று காலை 7.17 வரை கார்த்திகை பின்பு ரோகிணி.

நல்ல நேரம்
காலை 10.30 – 11.30.
மாலை 12.30 – 1.30

இராகு காலம்
பிற்பகல் 1.30 – 3.00.

எமகண்டம்
காலை 6.00 – 7.30.

குளிகை
காலை 9.00 – 10.30.

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
இராமமூர்த்தி
செல்: 8189908040

## ரூ.80,000 கோடியில் பச்சபத்ரா எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை! ஏப்.21–ல் திறந்துவைக்கிறார் பிரதமர் மோடி!

**பல்டோரா, ஏப்.9:**

பல்டோரா மாவட்டத்தில் உள்ள பச்சபத்ரா நகரத்தில் ரூ.80,000 கோடி மதிப்பீட்டில் புதிய கச்சா எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை உருவாக்கப்பட்டுள்ளது. இந்தப் புதிய ஆலையின் மூலம் சுமார் 50,000 பேருக்கு வேலை வாய்ப்பு உருவாகும் எனவும், நாட்டின் பொருளாதாரத்தில் பெரும் முன்னேற்றம் ஏற்படும் எனவும் கூறப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து, பச்சபத்ரா எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையின் திறப்பு விழா குறித்து ஆலோசனை மேற்கொள்ள ராஜஸ்தான் முதல்வர் பஜன்லால் சர்மா தில்லி சென்றிருந்தார். பிரதமர் மோடி, பாஜக தலைவர் நிதின் நபீன் மற்றும் மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் ஆகியோரை நேரில் சந்தித்து அவர் உரையாடினார்.

இந்த நிலையில், நாட்டின் முதல் ஒருங்கிணைந்த பெட்ரோகெமிக்கல் வளாகமாகக் கருதப்படும் பச்சபத்ரா சுத்திகரிப்பு ஆலையை வரும் ஏப்.21 அன்று பிரதமர் மோடி திறந்துவைப்பதாக, அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும், இந்த நிகழ்ச்சியில் பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த சுமார் 2 லட்சம் பேர் கலந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

# தமிழக தலைமைச் செயலர் முருகானந்தம் அதிரடி மாற்றம்

**சென்னை, ஏப்.9:**

தமிழக தலைமைச் செயலர் முருகானந்தம் அதிரடியாக மாற்றப்பட்டார். அதேபோல், லஞ்ச ஒழிப்புத் துறை டிஜிபியும் மாற்றப்பட்டார்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் ஏப்ரல் 23-ம் தேதி நடைபெறுகிறது. இந்நிலையில், தமிழக தலைமைச் செயலர் மற்றும் லஞ்ச ஒழிப்புத் துறை டிஜிபியை மாற்றி தேர்தல் ஆணையம் அதிரடி நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.



புதிய தலைமைச் செயலராக சாய்குமார் ஐஏஎஸ் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் தமிழ்நாடு செய்திக் காகித நிறுவனத் தலைவராக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. அதேபோல், இவர் முன்னாள் முதல்வர் எடப்பாடி பழனிசாமியின் தனிச் செயலாளராகவும் இருந்துள்ளார் என்றும் கூறப்படுகிறது.

தமிழக தலைமைச் செயலர் தவிர ஆயுதப்படை, லஞ்ச ஒழிப்புத் துறை டிஜிபியும் மாற்றப்பட்டுள்ளார். புதிய டிஜிபியாக சந்தீப் மிட்டலை நியமனம் செய்து இந்திய தலைமைத் தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

மேலும், இந்த உத்தரவை உடனடியாக அமல்படுத்தி சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பணியில் இணைந்தது தொடர்பாக மாலை 6 மணிக்குள் அறிக்கை சமர்ப்பிக்கும்படியும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தேர்தலுக்கு முன்னர் அதிகாரிகள் மாற்றம் என்பது வழக்கமாக நடைபெறுவதுதான் என்றாலும்கூட, தேர்தலுக்கு 2 வாரங்களே உள்ள நிலையில், தமிழக தலைமைச் செயலரையே அதிரடியாக மாற்றி உத்தரவிட்டுள்ளது கவனம் பெற்றுள்ளது.

## தேர்தல் ஆணையத்துக்கு ஸ்டாலின் கண்டனம்

தமிழ்நாட்டில் பாஜக, அதிமுகவுடன் கைகோத்து நடத்த இருக்கும் தேர்தல் முறைகேடுகளுக்குத் துணை போகத் துடியாய்த் துடிப்பது தேர்தல் ஆணையத்திற்கு அழகு அல்ல. ஆணையத்தின் அலுவலர்கள் இன்று இருக்கலாம். நாளை பதவியிலிருந்து போய் விடலாம். ஆனால் நாட்டு மக்களின் நம்பிக்கையைப் பெறும் வகையில் நம் அரசியல்சட்ட முன்னோர்களால் உருவாக்கப்பட்ட தேர்தல் ஆணையத்தின் நடுநிலைமை நடுத்தெருவில் கொண்டு வந்து நிறுத்தப்படுவது நம் நாட்டிற்கும் - சுதந்திரமான நியாயமான தேர்தலுக்கும் பேராபத்து.

உச்ச நீதிமன்றத் தீர்ப்பை மீறி, தலைமைத் தேர்தல் ஆணையரை நானே தேர்வு செய்வேன் என்று புதிய சட்டத் திருத்தம் கொண்டு வந்த பிரதமர் அவர்களுக்கோ அல்லது அவர் வழிநடத்தும் ஒன்றிய பாஜக அரசுக்கோ தேர்தல் ஆணையத்தின் புனித்தன்மை புரியப் போவதில்லை என்பதைத் தமிழ்நாடு உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களில் மட்டும் 'தலைமைச் செயலாளர்',



'டிஜிபி' ஆகியோரை மாற்ற பாஜக தூண்டி விடும் காட்டு தர்பார் பிரதிபலிக்கிறது. ஜனநாயகத்தின் கடைசி நம்பிக்கையாக இருக்கும் தேர்தல் ஆணையமும் காவிமயமாகி விட்டது என்பதையே இந்த நடவடிக்கைகள் எல்லாம் காட்டுகின்றன.

எத்தனை அதிகாரிகளை மாற்றினாலும் தமிழ்நாட்டில் பாஜக படுதோல்வியில் மண்ணைக் கவ்வப் போவது உறுதி. சீப்பை ஒளித்து வைத்து விட்டால் திருமணத்தை நிறுத்திவிடலாம் என்பது போல் அதிமுக - பா.ஜ.க. அடங்கிய என்டிஏ கூட்டணிக்காகத் தேர்தல் ஆணையம் செய்யும் அதிகார அத்துமீறல் ஆணவத்தின் உச்சகட்டம்!" இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## இன்று முதல் 29-ம் தேதி வரை கருத்து கணிப்புகள் வெளியிடத் தடை

**புதுடெல்லி, ஏப்.9:**

தமிழ்நாடு, கேரளா, புதுச்சேரி, அசாம் மற்றும் மேற்கு வங்காளம் ஆகிய 5 மாநிலங்களுக்கான சட்டசபை தேர்தல் இந்த மாதத்தில் நடைபெற உள்ளது. அதனுடன் சேர்த்து, 6 மாநிலங்களில் இடைத்தேர்தல் நடைபெற உள்ளது. இதில், கேரளா மற்றும் அசாம் ஆகிய இரு மாநிலங்களுக்கும், புதுச்சேரி யூனியன் பிரதேசத்திற்கும் நாளை (ஏப்ரல் 9-ந்தேதி) ஒரே கட்டத்தில் தேர்தல் நடத்தப்படும். இதற்கான வாக்கு எண்ணிக்கை மே 4-ந்தேதி நடைபெறும்.

மேற்கு வங்காளத்தில் 2 கட்டங்களாக தேர்தல் நடைபெறுகிறது. இதன்படி, ஏப்ரல் 23-ந்தேதி முதல் கட்ட தேர்தலும், 29-ந்தேதி 2-ம் கட்ட தேர்தலும் நடத்தப்படுகிறது. வாக்கு எண்ணிக்கை மே 4-ந்தேதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டு உள்ளது. இதேபோன்று தமிழகத்திற்கு ஏப்ரல் 23-ந்தேதி ஒரே கட்டத்தில் தேர்தல் நடத்தி முடிக்கப்படும். இதற்கான வாக்கு எண்ணிக்கை மே 4-ந்தேதி நடைபெறும். தேர்தலை முன்னிட்டு தேர்தல் நடத்தை விதிகள் அமலுக்கு வந்துள்ளன.சட்டசபை தோதல் தொடங்க உள்ள நிலையில், நாளை (ஏப்ரல் 9-ம் தேதி) காலை 7 மணி முதல் ஏப்ரல் 29 மாலை 6.30 மணி வரை கருத்து கணிப்புகளை நடத்தவோ அல்லது வெளியிடவோ தடை விதிக்கப்படுவதாக தோதல் ஆணையம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில், 5 மாநில சட்டசபை தேர்தலை முன்னிட்டு ஏப்ரல் 9-ந்தேதி காலை 7 மணி முதல் ஏப்ரல் 29-ந்தேதி மாலை 6.30 மணி வரை தேர்தலுக்கு பிந்தைய கருத்து கணிப்புகளை மேற்கொள்ளவோ அல்லது அவற்றை வெளியிடவோ கூடாது. இந்த காலகட்டத்தில் கருத்து கணிப்புகளை நடத்துவது அல்லது அவற்றை வெளியிடுவது என்பது, மக்கள் பிரதிநிதித்துவ சட்டம், 1951-ன் 126-ஏ பிரிவை மீறுவது ஆகும். இதற்கு, 2 ஆண்டுகளுக்கு சிறை தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டும் சேர்த்து தண்டனையாக விதிக்கப்படும் என்று எச்சரித்துள்ளது.

வாக்குப்பதிவு நிறைவு பெறுவதற்கு 48 மணி நேரத்துக்கு முன்பாக, தோதல் நடைபெறும் தொகுதி அல்லது மாநிலங்களில் தோதல் பிரசாரத்தை கட்சியினா நிறைவு செய்ய வேண்டும். அதன்படி, அசாமில் நேற்று மாலை 5 மணிக்கும், கேரளம், புதுச்சேரியில் நேற்று மாலை 6 மணிக்கும் அரசியல் கட்சிகளின் பிரசாரம் நிறைவுற்றது.இந்த நிலையில், கருத்து கணிப்புகளை வெளியிடுவதற்கான கட்டுப்பாடுகள் தொடாபான அறிவுறுத்தலை தோதல் ஆணையம் வெளியிட்டுள்ளது.

## தமிழக தலைமைச் செயலர், லஞ்ச ஒழிப்புத் துறை டிஜிபி மாற்றம்!

**சென்னை, ஏப்.9:**

தமிழக தலைமைச் செயலர் முருகானந்தத்தை மாற்றி தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது. புதிய தலைமைச் செயலராக சாய் குமார் ஐஏஎஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

லஞ்ச ஒழிப்புத் துறை டிஜிபியாக இருந்த டேவிட்சன் தேவாசீர்வாதத்தை மாற்றி, ஆயுதப்படை மற்றும் லஞ்ச ஒழிப்புத்துறை டிஜிபியாக சந்தீப் மித்தல் நியமிக்கப்பட்டுள்ளார்.

உத்தரவை உடனே அமல்படுத்தி பணியில் சேர்ந்தது குறித்து மாலைக்குள் அறிக்கை சமர்பிக்க வேண்டும் என்று தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

இடமாற்றம் செய்யப்பட்ட அதிகாரிகள் இருவரையும், தேர்தல்கள் நிறைவடையும் வரை தேர்தல் தொடர்பான எந்தப் பதவியிலும் நியமிக்கப்படக்கூடாது என்று தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.






தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவன தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநராக இருந்தவர் சாய் குமார் ஐஏஎஸ். இவர், முன்னாள் முதல்வர் எடப்பாடி பழனிசாமியின் தனிச் செயலராகவும் இருந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

முன்னதாக, தமிழக காவல் துறையின் புதிய தலைமை இயக்குநராக (டிஜிபி) சந்தீப் ராய் ரத்தோர் ஏப். 2 ஆம் தேதி நியமனம் செய்யப்பட்டார்.

மேலும், தாம்பரம், மதுரை மாநகரக் காவல் ஆணையர்கள், மேற்கு மண்டல ஐஜி ஆகியோர் இடமாற்றம் செய்யப்பட்டனர்.

சட்டப்பேரவைத் தேர்தல் காரணமாக தமிழக காவல் துறையில் உயர் அதிகாரிகளை தேர்தல் ஆணையம் கடந்த இரு வாரங்களாக மாற்றி வருகிறது. இதன் ஒரு பகுதியாக தமிழக காவல் துறையின் பொறுப்பு தலைமை இயக்குநராக இருந்த ஜி.வெங்கடராமனை மாற்றிய நிலையில், தமிழக தலைமைச் செயலர், லஞ்ச ஒழிப்புத் துறை டிஜிபி ஆகியோரையும் மாற்றி இந்திய தேர்தல் ஆணையம் இன்று(ஏப். 8) உத்தரவிட்டுள்ளது.

## ஈரான் - அமெரிக்கா போர் நிறுத்தம்: இந்தியா வரவேற்பு

**புதுடில்லி, ஏப்.9:**



ஈரானுக்கும், அமெரிக்கா - இஸ்ரேலுக்கும் இடையிலான போர் ஒரு மாதத்திற்கும் மேலாக நீடித்து வந்தது.ஹார்முஸ் நீரிணையை 6-ந்தேதி இரவுக்குள் திறக்காவிட்டால், ஈரானில் மின்சார நிலையங்கள், பாலங்கள் போன்ற சிவில் உள்கட்டமைப்புகளை தகர்ப்போம் என்று அமெரிக்க அதிபர் டிரம்ப் மிரட்டல் விடுத்திருந்தார். இந்த கெடுவை இரவு 8 மணிவரை (அமெரிக்க நேரப்படி) டிரம்ப் நீடித்தார்.

இந்த கெடு முடிந்த பிறகும் போர் நிறுத்த ஒப்பந்தத்தை ஏற்காவிட்டால் ஈரான் நாகரிகம் இன்றிரவு அழிக்கப்படும். அவர்களால் மீண்டெழ முடியாது. இதை நான் விரும்பவில்லை. ஆனால் இதை தவிர வேறு வழியில்லை. ஈரானில் முழுமையான ஆட்சி மாற்றம் ஏற்படும். மதவாத சக்திகள் அழிக்கப்படும். அந்த நாட்டில் புதிய புரட்சி மலரும். ஈரானின் 47 ஆண்டு கால அராஜகத்துக்கு நிரந்தரமாக முற்றுப்புள்ளி வைக்கப்படும்" என்று அறிவித்து இருந்தார். அமெரிக்காவின் தாக்குதலை எதிர்கொள்ள மின் நிலையங்கள் முன்பாக ஈரான் மனித சங்கிலியாக அணி திரண்டனர்.

அமெரிக்காவின் கெடு முடிய சுமார் 90 நிமிடங்கள் மட்டுமே இருந்தது. இந்திய நேரப்படி அதிகாலை 5.30 மணிக்கு ஈரான் மீது தாக்குதல் நடத்த அமெரிக்கா தயாராக இருந்தது. இந்த நிலையில் இடைக்கால போர் நிறுத்த முயற்சியில் பாகிஸ்தான் தீவிரமாக செயல்பட்டது. அந்நாட்டு பிரதமர் ஷெபாஸ் ஷெரீப். அமெரிக்கா மற்றும் ஈரான் தலைவர்களுடன் தொலைபேசி வழியாக அவர் பேச்சுவார்த்தை மேற்கொண்டதாக தகவல் வெளியானது. இதையடுத்து அமெரிக்கா - ஈரான் இடையே போர் நிறுத்தம் ஏற்பட்டது. இரண்டு வார காலத்திற்கு தற்காலிகமாக போர் நிறுத்தம் ஏற்பட்ட நிலையில் பாகிஸ்தானில் இருநாடுகளும் பேச்சுவார்த்தை நடத்தவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அமெரிக்கா - ஈரான் இடையே ஏற்பட்டுள்ள இந்த தற்காலிக போர் நிறுத்தத்தை பல்வேறு நாடுகளும் வரவேற்றுள்ளன. அந்த வகையில், இந்தியாவும் வரவேற்பு தெரிவித்துள்ளது. இந்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் இது தொடர்பாக கூறியிருப்பதாவது: ஈரான் மற்றும் அமெரிக்கா இடையிலான போர் நிறுத்தத்தை இந்தியா வரவேற்கிறது. இது மேற்கு ஆசியாவில் நிலையான அமைதிக்கு வழிவகுக்கும். மத்திய கிழக்கு போர் உலகளாவிய எரிசக்தி விநியோகம், வர்த்தக வலைப்பின்னல்களை சீர்குலைத்துள்ளது. ஆகவே ஹார்முஸ் ஜலசந்தி வழியாக தடையற்ற கப்பல் போக்குவரத்தை எதிர்பார்க்கிறோம்" என்று தெரிவித்துள்ளது.







# திருக்குறள் குறள்-584

வினைசெய்வார் தஞ்சுற்றம் வேண்டாதா
ரென்றாங்கனைவரையும் ஆராய்வ தொற்று



தம்முடைய தொழிலைச் செய்கின்றவர், தம் சுற்றத்தார், தம் பகைவர் என்றுக்கூறப்படும் எல்லாரையும் ஆராய்வதே ஒற்றரின் தொழிலாகும்.

## சிந்திக்க ஒரு நொடி



நட்புகளுடனும் உறவுகளிடமும் நலம் விசாரிப்பதோடு வார்த்தைகளை முடித்துக்கொண்டால்..... அவர்களின் உறவுகள் அதிக நாட்கள் நீடித்து நிலைத்து நிற்கும்.

**உஷா முத்துராமன்**

## ஜனநாயக திருவிழா தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026




**திருவண்ணாமலை, ஏப்.09:** திருவண்ணாமலை மாவட்டம் கீழ்பென்னாத்தூர் 2026 பொதுத்தேர்தலை முன்னிட்டு சட்டமன்ற தொகுதி வேட்பாளர் திரு. கு.பிச்சாண்டி அவர்களை ஆதரித்து தலைமைக் கழகப் பேச்சாளர், நடிகர் திரு. போஸ் வெங்கட் அவர்கள் கீழ்பென்னாத்தூரில் பிரச்சாரம் மேற்கொண்டார். உடன் ஒன்றிய செயலாளர் ஆரஞ்சி ஆறுமுகம் அவர்கள், நகரச் செயலாளர் சி. கே.அன்பு அவர்கள் மற்றும் கழகத் தோழர்கள், பொதுமக்கள் அனைவரும் பிரச்சாரக் கூட்டத்தில் கலந்து கொண்டார்கள். **தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## மரியாதை நிமித்தமாக சந்தித்து வாழ்த்து



திருவண்ணாமலை மாவட்டம் ஆரணி அஇ அதிமுக கூட்டணி கட்சியான பாரதிய ஜனதா கட்சியின் தமிழ்நாடு மாநிலத்தலைவர் உயர்திரு. நைனார் நாகேந்திரன் அவர்களை, வந்தவாசி சட்டமன்றத் தொகுதி பொறுப்பாளர் எம்ஜிஆர் மன்ற மாநில துணைச் செயலாளர் வழக்கறிஞர் B. ஜாகிர் உசேன் M.S.c ;B.L அவர்கள் மரியாதை நிமித்தமாக நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றார். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## அ.தி.மு.க வேட்பாளர் T.S வேலு வாக்கு சேகரிப்பு



திருவண்ணாமலை மாவட்டம் தண்டராம்பட்டு ஒன்றியம் தானியப்பாடி பகுதிகளில் செங்கம் (தனி) தொகுதி அ.தி.மு.க வேட்பாளர் T.S வேலு தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டபோது நிர்வாகிகள் வெற்றிவேல் , வீரவேல் கையில் கொடுத்து உற்சாக வரவேற்பு அளித்து தீவிரவாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர். இதில் தேர்தல் பொறுப்பாளர் துரை செந்தில், ஒன்றிய செயலாளர் அருள் குமார்,கார்த்திகேயன் மற்றும் பாமக,பாஜக, அ.ம.மு.க உள்ளிட்ட தேசிய ஜனநாயகக் கூட்டணிக் கட்சிகளை சார்ந்த நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## கீழக்கிடாரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி மாணவர்கள் தேசிய திறனாய்வுத் தேர்வில் சாதனை..!




**இராமநாதபுரம், ஏப்.09:** இராமநாதபுரம் மாவட்டம் கடலாடி ஒன்றியம் கீழக்கிடாரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி மாணவர்கள் 2025 - 2026 ஆம் ஆண்டிற்கான தேசிய திறனாய்வுத் தேர்வில் 6 பேர் வெற்றி பெற்று சாதனை படைத்துள்ளனர்.

ஈ.ஜுமைலத் பாத்திமா, சா.சாமிநாதன், ச.ஆஃபியா நூரா, மு.சஞ்சீவ், சே.முகம்மது ஜியாத், செய்யது இபுராஹிம் ஆகிய 6 மாணவர்கள் வெற்றி பெற்று வருடம் தலா ₹12000 வீதம் 4 வருடங்களுக்கு ₹48000 பெற உள்ளார்கள். தேசிய திறனாய்வுத் தேர்வில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளை தலைமை ஆசிரியை L.கலைச்செல்வி, ஆசிரியர்கள், கல்விக் குழு உறுப்பினர்கள், பெற்றோர்கள் மற்றும் கிராமப் பொதுமக்கள் பாராட்டினர்.

## தென்னாங்கூர் அரசு கலைக் கல்லூரியில் சட்ட விழிப்புணர்வு கருத்தரங்கம்...!

**வந்தவாசி, ஏப் 09:** திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசி அடுத்த தென்னாங்கூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் சட்ட விழிப்புணர்வு கருத்தரங்கம் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் முனைவர் ர.மணிமுருகன், வணிகவியல் துறைத்தலைவர் வரவேற்புரையாற்றினார். கல்லூரி முதல்வர் முனைவர் சித.ரவிச்சந்திரன் தலைமை தாங்கினார்.

மாணவர்கள் கல்வி மூலமே சமுதாயத்தின் ஒரு உயர்ந்த நிலையை எட்ட முடியும் , ஆகவே மாணவர்கள் படிக்கும் காலத்தில் உங்களுடைய கல்வியை நல்லபடியாக கற்று சமுதாயத்தில் உயர்ந்த நிலையை எட்ட முடியும் என்று அவர் உரையாற்றினார். சிறப்பு அழைப்பாளராக, வந்தவாசி நீதிமன்ற சார்பு நீதிபதி ச.சரண்யா பங்கேற்று, அடிப்படை உரிமைகள் மற்றும் கடமைகள், இந்திய அரசியலமைப்பு சட்டம் குடிமக்களுக்கு வழங்கியுள்ள அடிப்படை உரிமைகள் மற்றும் மாணவர்கள் பின்பற்ற வேண்டிய கடமைகள் குறித்து விளக்கினார்.

மேலும் நாட்டின் சட்டதிட்டங்களுக்குக் கட்டுப்பட்டு நடப்பது ஒவ்வொரு மாணவரின் முதல் கடமையாகும். மாணவர்கள் தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள கல்வி கற்கும் வாய்ப்பைச் சரியாகப் பயன்படுத்தி, சிறந்த அறிவாற்றலைப் பெற வேண்டும்.


சட்ட உதவி தேவைப்படும் மாணவர்கள் அல்லது ஏழை எளிய மக்கள் நீதிமன்றத்தில் உள்ள சட்டப்பணிகள் ஆணைக் குழுவை அணுகலாம் என்றும், அங்கு இலவச சட்ட ஆலோசனைகள் மற்றும் உதவிகள் வழங்கப்படும் என்றும் குறிப்பிட்டார். இதில் வழக்கறிஞர் சா.ரா.மணி பங்கேற்று கருத்துரைகளை வழங்கினார்.

முனைவர் நா.மனோகரன், கணினி அறிவியல் துறைத் தலைவர், முனைவர் ப.மோகனவள்ளி, உடற்கல்வி இயக்குனர் & விலங்கியல் துறைத் தலைவர், முனைவர் இரா. பெரியசாமி, கல்லூரி நூலகர் & இயற்பியல் துறைத் தலைவர், முதுமுனைவர் ஏ.எழில்வசந்தன், தமிழ் துறைத்தலைவர், தா.சுகந்தி உதவிப் பேராசிரியர் தமிழ் துறை & உயிர் வேதியியல் துறைத் தலைவர் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

இரா.சுமதி ஆங்கில துறைத்தலைவர் தொகுத்து வழங்கினார். முனைவர் வ.சந்திரசேகர் கணித துறைத்தலைவர் நன்றி கூறினார்.

**பா. சீனிவாசன், வந்தவாசி.**

## ஸ்ரீஆதிகேசவ பெருமாள் பிரமோற்சவம்



மயிலாப்பூர் ஸ்ரீஆதிகேசவ பெருமாள் பிரமோற்சவம் நாள் 5 காலை பல்லக்கு

## மாண்புமிகு தமிழக முதல்வர் திருவண்ணாமலையில் வாக்கு சேகரிப்பு



**திருவண்ணாமலை, ஏப்.09:** திருவண்ணாமலை மார்க்கெட்டில் நடைப்பயிற்சி சென்றபடி வாக்கு சேகரித்தார். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் திமுக சார்பில் போட்டியிடும் மாண்புமிகு அமைச்சர் எ.வ.வேலு அவர்களுக்கு ஆதரவாக காய்கறி வியாபாரிகளிடம் வாக்கு சேகரித்தார். **தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## பொதுத் தேர்தல் 2026 வாக்காளர்களுக்கு விழிப்புணர்வு, உறுதிமொழி ஏற்பு



**திருவண்ணாமலை, ஏப்.09:** திருவண்ணாமலை மாவட்டம் சேத்துப்பட்டு வட்டாட்சியர் அலுவலகத்தில் தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் 2026 நடைபெறவுள்ளதை முன்னிட்டு வாக்காளர்களுக்கு தேர்தல் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் திருவண்ணாமலை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் உயர்திரு. க. தர்ப்பகராஜ் இ. ஆ. ப. அவர்கள் வண்ண பலூன்களை பறக்கவிட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தினார் மற்றும் வாக்காளர் விழிப்புணர்வு உறுதிமொழியையும் ஏற்றுக்கொண்டார். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை.



**திருவண்ணாமலை, ஏப்.09:** திருவண்ணாமலை மாவட்டம் கலசபாக்கம் கலைஞர் சிலை அருகில் நடைபெற்ற மாபெரும் தேர்தல் பரப்புரையில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியில் திமுக துணை பொதுச்செயலாளர் திருமதி. கனிமொழி MP,அவர்கள் கலசப்பாக்கம் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிடும் உயர்திரு. பெ. சு. தி. சரவணன் அவர்களை ஆதரித்து பிரச்சாரம் மேற்கொண்டார்.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி வெற்றி வேட்பாளர் திரு.Dr.சுபேர்கான் தேர்தல் பிரச்சாரம்



சட்டமன்ற தேர்தலையொட்டி ராயபுரம் சட்டமன்ற தொகுதியில் போட்டியிடும் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி வெற்றி வேட்பாளர் திரு.Dr.சுபேர்கான் நேற்று 08/04/2026 காலை ராயபுரம் 3வது சர்க்கிள், 48வது வட்டத்தில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டார். இந்நிகழ்வில் வடசென்னை கிழக்கு மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர் திருமதி.மதாரம்மா கனி பாரூக் அவர்கள் உட்பட ராயபுரம் தொகுதிக்கு உட்பட்ட சர்க்கிள் தலைவர் M.நஜ்மா ஷெரிப், வட்ட தலைவர்கள் A.நியமத்துல்லா, S.I.சாகுல் ரஹிமான் உட்பட அனைத்து நிலை காங்கிரஸ் பேரியக்க நிர்வாகிகளுடன் கலந்து கொண்டு பொதுமக்களிடம் வாக்கு சேகரித்தார்.

## வேலூர் விண்ணரசி மாதா தேவாலயத்தில் தவெக வேட்பாளர் வினோத் கண்ணன் பிரசாரம்!

**வேலூர், ஏப். 09:** வேலூர் தொகுதி தவெக வேட்பாளர் வினோத் கண்ணன், 8ம் தேதி காலை விண்ணரசி மாதா தேவாலயத்திற்கு சென்று பாதிரியாரிடம் ஆசி பெற்று வாக்கு சேகரித்தார்.



நடிகர் விஜய்யின் தமிழக வெற்றி கழகத்தின் வேலூர் சட்டமன்ற தொகுதி வேட்பாளராக கட்சியின் மாவட்ட செயற்குழு உறுப்பினர் எம். வினோத் கண்ணன் போட்டியிடுகிறார். பட்டதாரியான இவர் சமூக அக்கறையும், மக்களுக்கு சேவை செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் வேலூர் நகரம் முழுவதும் தினமும் வாக்கு சேகரித்து வருகிறார்.

8ம் தேதி காலை வேலூர் விண்ணரசி மாதா தேவாலயத்துக்கு கட்சி நிர்வாகிகளுடன் சென்ற வேட்பாளர் வினோத் கண்ணன் அங்கு கத்தோலிக்க பாதிரியார் ராய் லாசரை சந்தித்து ஆசி பெற்றார். வேலூர் மக்களுக்கு சேவை செய்ய தனக்கு வாய்ப்பு வழங்கும்படி கிறிஸ்தவ மக்களுக்கு வேண்டுகோள் விடுத்தார். இதைத் தொடர்ந்து வினோத் கண்ணனுக்கு பாதிரியார் ராய் லாசர் ஆசீர்வதித்து வாழ்த்து தெரிவித்தார். இந்நிகழ்ச்சியில் விண்ணரசி மாதா தேவாலய பாதிரியார்கள் பிரபு, ஜோசப், அந்தோனி ராஜ், ஞானமணி, ஜெபமணி, தமிழக வெற்றிக் கழக பகுதி செயலாளர் நிதின், ஆல்பர்ட் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இதைத்தொடர்ந்து தமிழக வெற்றி கழக வேட்பாளர் வினோத் கண்ணன் வேலூர் மக்கான் பகுதியில் பொதுமக்களை சந்தித்து வாக்கு சேகரித்தார்.

## ஸ்ரீவாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் ஆலயத்தில் 108 குத்துவிளக்கு பூஜை



தர்மபுரி மாவட்டம் பாலக்கோடு ஸ்ரீவாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் ஆலயத்தில் மண்டல பூஜை முன்னிட்டு 44 நாள் பூஜை 108 குத்துவிளக்கு பூஜை வெகு சிறப்பாக நடைபெற்றது.ஆர்ய வைஸ்ய ஆண்கள், பெண்கள் அனைவரும் பூஜையில் கலந்து கொண்டு வாசவி அம்மனை வேண்டி அருள் பெற்றனர். குத்துவிளக்கு பூஜையை ஏற்பாடு செய்தவர்கள் மகிளா சபாவினர் பாலக்கோடு.**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**




## தேர்தல் களப்பணியில்...

### விஜய் சிலையுடன் திருவெறும்பூர் தொகுதி வேட்பாளர் பிரச்சாரம்



திருவெறும்பூர் தொகுதி தவெக வேட்பாளர் நவல்பட்டு விஜய், விஜய் சிலையுடன் ஓட்டுவேட்டையாடி வருவது சமூக வலைத்தளங்களில் பேசுபொருளாகி இருக்கிறது.

தவெக தலைவர் விஜய் தேர்தல் சுற்றுப்பயணத்துக்கு பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்படுவதாகவும், அதை மீறி தேர்தல் பிரச்சாரத்துக்க வந்தால் அவர் மீது வழக்குகள் பதியப்படுவதாகவும் அக்கட்சியினர் குற்றம்சாட்டுகின்றனர்.

இந்நிலையில், விஜய் தேர்தல் பிரச்சாரத்துக்கு செல்வதில் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளதால், திருச்சி திருவெறும்பூர் தவெக வேட்பாளர் நவல்பட்டு விஜி, ஒரு நூதன முறையை கையாண்டு அனைவரின் கவனத்தையும் ஈர்க்கிறார். தனது வேட்புமனு தாக்கலின்போது விஜய் அருகில் இருக்கவேண்டும். வேட்புமனு தாக்கல் முடிந்த கையுடன், அவர் தனக்கு பிரச்சாரம் செய்யவேண்டும் என்று எண்ணிய அவர், விஜய் போலவே ஒரு சிலையை செய்து தனது பிரச்சார வேனில் ஏற்றிக் கொண்டார்.

வேட்புமனு தாக்கல் செய்ய சென்றபோது அந்த சிலையுடன் வேனில் சென்றார். வேட்புமனு தாக்கல் செய்த கையோடு அந்த சிலையுடன் திருவெறும்பூர் தொகுதியில் வலம் வந்து தீவிர பிரச்சாரத்திலும் ஈடுபட்டார். விஜய்க்கு பதில் பொம்மை செய்து ஓட்டுவேட்டையாடி வரும் திருவெறும்பூர் தொகுதி வேட்பாளரின் ஐடியா, சமூக வலைத்தளங்களில் வேகமாக பரவி, வாழ்த்துகளையும், விமர்சனங்களையும் ஒருசேர அள்ளிக்குவித்து வருகிறது.

### பேசுபொருளான முதல்வரின் நலத்திட்டங்கள்: வீரபாண்டியன் சொல்கிறார்

சென்னையில் சைதாப்பேட்டை, விருகம்பாக்கம் தொகுதிகளில் போட்டியிடும் திமுக கூட்டணி வேட்பாளர்களான மா.சுப்பிரமணியன் மற்றும் ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா ஆகியோரை ஆதரித்து இந்திய கம்யூனிஸ்ட் மாநில செயலாளர் மு.வீரபாண்டியன் நேற்று பிரச்சாரம் மேற்கொண்டார்.

பின்னர் செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: கடந்த 6 தினங்களாக தென் மாவட்டங்களில் பிரச்சாரத்தில் ஈடுபட்டிருந்தேன். அப்போது பல கிராமங்களுக்கு சென்றேன். அங்குள்ள மக்களின் மனநிலை திமுக கூட்டணிக்கு வாக்கு செலுத்த வேண்டும் என்பதாகவே இருக்கிறது. வரலாறு காணாத வெற்றியை திமுக கூட்டணி பதிவு செய்யும். அதற்கு காரணம் மக்களிடையே முதல்வரின் நலத்திட்டங்கள், தேர்தல் அறிக்கை என அனைத்தும் பேசுபொருளாகியிருப்பது தான்.

சென்னையை பொறுத்தவரை இது திமுகவின் கோட்டை. சென்னை மக்கள் எப்போது சாதி, மத அரசியலை, பதற்ற அரசியலை விரும்பமாட்டார்கள். உலகில் எங்கிருந்து வந்தாலும் எல்லோரையும் கூடி அரவணைத்து கொள்கிற பழக்கம் சென்னைக்கு உண்டு. இங்கு பிளவுவாத கருத்தாளர்களுக்கு இடமில்லை. அவர்களை தோற்கடிப்பார்கள். அந்தவகையில் அதிமுக - பாஜக கூட்டணிக்கு தோல்வி உறுதி.இவ்வாறு அவர் கூறினார்.

### பெரம்பூர் தொகுதியில் விஜய் பெயரில் 4 சுயேச்சை வேட்பாளர்கள் மனுதாக்கல்



**சென்னை, ஏப்.9:**

தமிழக சட்டமன்ற தேர்தல் வருகிற 23-ந்தேதி நடைபெற உள்ளது. இதையொட்டி, தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்புமனு தாக்கல் நேற்று முன்தினம் முடிவடைந்தது. சென்னை மாவட்டத்தை பொறுத்தவரையில், 16 சட்டமன்ற தொகுதிகளில் போட்டியிடுவதற்காக 628 வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

பெரம்பூர் தொகுதியில் தமிழக வெற்றிக்கழகம் தலைவர் விஜய் போட்டியிடுகிறார். இவர் வேட்புமனுவில் தனது பெயரை சி.ஜோசப் விஜய் என்று குறிப்பிட்டுள்ளார். பெரம்பூர் தொகுதியில் விஜய்க்கு போட்டியாக விஜய் என்ற பெயரில் மேலும் 2 பேரும், ஜோசப் என்ற பெயரில் 2 பேரும் மனுதாக்கல் செய்துள்ளனர். அதாவது, ஜி.விஜய், கே.விஜய், எம்.ஜோசப், எஸ்.ஜோசப் என 4 சுயேச்சை வேட்பாளர்கள் மனுதாக்கல் செய்துள்ளனர்.

# அதிமுகவை பாஜக குத்தகைக்கு எடுத்துள்ளது; முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் கடும் விமர்சனம்



தமிழக சட்டசபை தேர்தல் வரும் 23ம் தேதி நடைபெற உள்ளது. தேர்தலில் பதிவாகும் வாக்குகள் மே 4ம் தேதி எண்ணப்பட்டு அன்றே முடிவுகள் அறிவிக்கப்பட உள்ளன. தேர்தல் நெருங்கி வரும் நிலையில் அரசியல் கட்சியினர் தீவிர வாக்குசேகரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், திமுக தலைவரும், முதல்-அமைச்சருமான மு.க.ஸ்டாலின் மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழியில் பிரசாரத்தில் ஈடுபட்டு வருகிறார்.

பிரசார கூட்டத்தில் மு.க.ஸ்டாலின் பேசியதாவது,

முதல்-அமைச்சராக ஆவதற்கு முன்பே நான் உங்கள் ஊர் மாப்பிள்ளை. இப்போது மருமகனாக வாக்கு கேட்டு வந்துள்ளேன்.

தேர்தலில் எடப்பாடி பழனிசாமியை தமிழ்நாட்டு மக்கள் துடைத்து எறிவார்கள். பேசுவதற்கு எதுவும் இல்லாமல் எடப்பாடி பழனிசாமி கண்டபடி பேசி வருகிறார். எடப்பாடி பழனிசாமி எந்த வகையிலும் முதல்-அமைச்சர் பதவிக்கு தகுதியானவர் இல்லை என்பது அவரின் பேச்சின் மூலமே தெரிகிறது.

தோல்வி பயத்தில் பழனிசாமியின் தரம் கீழே சென்று கொண்டிருக்கிறது. அவதூறு பேச்சுக்களால் தன்னையும் தனது கட்சியையும் மக்களிடம் அசிங்கப்படுத்திக்கொண்டிருக்கிறார்.

மத்திய அரசின் உட்கட்டமைப்பு திட்டங்கள் அதிகமாக நடக்கிற மாநிலங்களின் டாப் 10 பட்டியலில் தமிழ்நாடே இல்லை. இந்தியாவின் வளர்ச்சி எஞ்சின் தமிழ்நாட்டை மத்திய அரசு எந்த அளவுக்கு வஞ்சிக்கிறது என்பதற்கு இதைவிட வேறு சான்று வேண்டுமா?

தென்மாநிலங்களை பாதிக்கும் தொகுதி மறுவரையறை உள்ளிட்ட முக்கிய பிரச்சினைகள் பற்றி பேச எடப்பாடி பழனிசாமி வக்கில்லாமல் இருக்கிறார். அதிமுகவை குத்தகைக்கு எடுத்துள்ள பாஜக மீதான பயம்தான் காரணம். அதிமுகவையும், பழனிசாமியையும் பாஜக குத்தகைக்கு எடுத்துள்ளது. அதிமுக ஆட்சியாக இருந்திருந்தால் எடப்பாடி பழனிசாமி தமிழ்நாட்டையே கூறுபோட்டு விற்றிருப்பார்.

மதுரையில் பாஜக வெற்றிபெற வைத்தால்தான் மெட்ரோ ரெயில் வழங்குவோம் என மராட்டிய முதல்-மந்திரி தேவேந்திர பட்னாவிஸ் வெளிப்படையாக கட்ட பஞ்சாயத்து செய்கிறார். இப்படி மிரட்டுவதற்கு உங்களுக்கு வெட்கமாக இல்லையா?

தேசிய நெடுஞ்சாலையில் கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள பாலம் இடிந்து விழுந்துள்ளது. மத்திய அரசின் ஊழலும், பொறுப்பின்மையுமே இதற்கு காரணம்.

செய்திருப்பதை சொல்லி, செய்ய இருப்பதையும் சொல்லி வாக்கு கேட்டால் அது திராவிட மாடல் அரசு. பொய்களையும், அவதூறுகளையும் மட்டும் சொல்லி வாக்கு கேட்டால் அது பழனிசாமி மாடல்

இவ்வாறு தெரிவித்துள்ளார்.

## சட்டமன்ற தேர்தல்: காங்கிரஸ் கட்சியின் நட்சத்திர பேச்சாளர்கள் பட்டியல் வெளியீடு



தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலுக்கான காங்கிரஸ் கட்சியின் நட்சத்திர பேச்சாளர்கள் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் வாக்குப்பதிவு வருகிற 23-ந்தேதி நடைபெறுகிறது. இந்த தேர்தல் களத்தில் திமுக கூட்டணி, அதிமுக கூட்டணி, நாம் தமிழர் கட்சி, தமிழக வெற்றிக் கழகம் என 4 முனை போட்டி நிலவுகிறது. தேர்தலை முன்னிட்டு வேட்பாளர்கள் வீதி வீதியாக சென்று தீவிர வாக்கு வேட்டையில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்களை ஆதரித்து அந்தந்த கட்சி தலைவர்களும், முக்கிய நிர்வாகிகளும் சூறாவளி பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

திமுக கூட்டணியில் இடம்பெற்றுள்ள காங்கிரஸ் கட்சி 28 இடங்களில் போட்டியிடுகிறது. இந்த நிலையில் தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலுக்கான காங்கிரஸ் கட்சியின் நட்சத்திர பேச்சாளர்கள் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. அதில் 40 நட்சத்திர பேச்சாளர்களின் பெயர்கள் இடம்பெற்றுள்ளன.

## முதல்வர் ஸ்டாலின் கருத்தை திரித்து சொல்லக்கூடியவர்: நயினார் நாகேந்திரன்

சாத்தூர் சட்டப்பேரவைத் தொகுதியில் போட்டியிடும் பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன், செவ்வாய்க்கிழமை அன்று முக்கிய பிரமுகர்களை சந்தித்து வாக்கு சேகரித்தார். அதைத்தொடர்ந்து, கோட்டாட்சியர் அலுவலகத்தில் வேட்புமனுக்கள் மீதான பரிசீலனையின்போது கலந்துகொண்டார்.

அதன்பின் செய்தியாளர்களை சந்தித்த அவர் கூறியதாவது: நாளை முதல் பிரசாரத்தை துவங்க இருக்கிறேன்.

முதல்வர் ஸ்டாலின் வார்த்தை ஜாலங்களால் எப்போதுமே கருத்தை திரித்து சொல்லக்கூடியவர். சட்டப்பேரவைத் தொகுதியை கொடுத்தால் மத்திய அரசின் எந்த திட்டங்களானாலும் உங்களுக்கும் வந்து சேரும் என்ற பாணியில் தான் மகாராஷ்டிரா முதல்வர் மதுரையில் பேசினார்.

மெட்ரோ திட்டத்திற்கு விரிவான தகவல் திட்ட அறிக்கை கேட்டபோது தமிழக அரசு தவறான திட்ட அறிக்கையை கொடுத்தது.

சரியான திட்ட அறிக்கையை கூட வழங்க முடியாத அரசாக தமிழக அரசு உள்ளது. கஞ்சா போதையில்தான் கவனத்தை செலுத்துகிறார்கள். நாட்டின் வளர்ச்சிக்காக கவனம் செலுத்துவதில்லை. போதைப்பொருள் விற்றவர்கள் எல்லோரும் தற்போது ரெட் ஜெயின்ட் மூவிஸ் மூலம் சினிமா தயாரித்து கொண்டு இருக்கிறார்கள்.

மெட்ரோ ரயில் திட்டத்திற்கு திட்ட வரைவு போட முடியாத அளவுக்குத்தான் இந்த அரசு உள்ளது.

சாத்தூர் தொகுதியில் முழு கவனத்தை செலுத்தப் போகிறேன். வெடிமருந்து தொழிற்சாலைகளை பாதுகாக்க ஒற்றை சாளரை முறை வேண்டும் என்று இப்பகுதி மக்கள் கேட்டுள்ளார்கள். இங்கு நிறைய பொய் வழக்குகள் போடப்படுகின்றன. வெம்பக்கோட்டையில் தீக்காய சிகிச்சைப் பிரிவு வேண்டும் என மக்கள் கேட்டுள்ளார்கள். சாத்தூர் தொகுதி மக்களுக்காக நிச்சயம் இதையெல்லாம் நான் செய்து தருவேன்.

சுதந்திர இந்தியாவில் யார் எங்கு வேண்டுமானாலும் பிரச்சாரம் செய்யலாம். அதற்கான உரிமை எல்லோருக்கும் உள்ளது. எல்லோரும் இந்நாட்டு மன்னர்கள்தான் என்றார்.

## மாம்பழம் சின்னம் விவகாரம்: அவசர வழக்காக விசாரிக்க சென்னை ஐகோர்ட்டு மறுப்பு



பாமக, உள்கட்சி பிரச்சினை தொடர்பாக நிலுவையில் உள்ள உரிமையியல் வழக்கு முடியும் வரை மாம்பழம் சின்னத்தை முடக்கி வைக்க வேண்டும் என ராமதாஸ் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவை, சென்னை உரிமையியல் நீதிமன்றம் கடந்த மாதம் 26-ந்தேதி தள்ளுபடி செய்தது.

அந்த உத்தரவில், "சட்டம் அனுமதித்தால், இந்த விவகாரம் தொடர்பாக டாக்டர் ராமதாஸ், தேர்தல் ஆணையத்தை அணுகலாம். அவரது கோரிக்கையை தேர்தல் ஆணையம் சட்டப்படி பரிசீலித்து முடிவெடுக்கலாம்" என்றும் கூறியிருந்தது. இந்த உத்தரவை எதிர்த்து ராமதாஸ் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை விசாரித்த சுப்ரீம் கோர்ட்டு, இதுசம்பந்தமாக சென்னை ஐகோர்ட்டை அணுகும்படி உத்தரவிட்டிருந்தது.

இதனையடுத்து, சென்னை ஐகோர்ட்டு தலைமை நீதிபதி எஸ்.ஏ.தர் மாதிகாரி, நீதிபதி ஜி.அருள்முருகன் ஆகியோர் முன்பு டாக்டர் ராமதாஸ் தரப்பில், சுப்ரீம் கோர்ட்டு உத்தரவை சுட்டிக்காட்டி, சின்னம் தொடர்பாக தாக்கல் செய்யப்படும் வழக்கை அவசர வழக்காக விசாரிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டது. அதற்கு நீதிபதிகள், மனுவாக தாக்கல் செய்தால் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று கூறினர்.

இந்த நிலையில், தலைமை நீதிபதி எஸ்.ஏ.தர்மாதிகாரி மற்றும் நீதிபதி ஜி.அருள்முருகன் அமர்வில், ராமதாஸ் தரப்பில் இன்று மீண்டும் முறையீடு செய்யப்பட்டது. தங்கள் வழக்கை இன்று பிற்பகல் அவசர வழக்காக விசாரிக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டது. இதை ஏற்க மறுத்த நீதிபதிகள், மனு எண்ணிடப்படாமல் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது. எண்ணிடப்பட்டால் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என திட்டவட்டமாக தெரிவித்தனர்.

## விருப்ப மனு கட்டணத்தொகையை திரும்பப் பெற்று கொள்ளலாம் - மக்கள் நீதி மய்யம் அறிவிப்பு



தமிழக சட்டசபை தேர்தல் வரும் 23ம் தேதி நடைபெற உள்ளது. தேர்தலில் பதிவாகும் வாக்குகள் மே 4ம் தேதி எண்ணப்பட்டு அன்றே முடிவுகள் அறிவிக்கப்பட உள்ளன. தேர்தல் நெருங்கி வரும் நிலையில் அரசியல் கட்சியினர் தீவிர வாக்குசேகரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதனிடையே, தேர்தலில் திமுக கூட்டணியில் மக்கள் நீதி மய்யம் இடம்பெற்றுள்ளது. அதேவேளை, போட்டியிட மக்கள் நீதி மய்யம் விருப்பமனு விநியோகம் செய்தது. விருப்ப மனு கட்டணம் ரூ. 50 ஆயிரமாக நிர்ணயம் செய்யப்பட்டது. இதையடுத்து, தேர்தலில் போட்டியிட விருப்பமுள்ள மக்கள் நீதி மய்யம் கட்சியினர் ரூ. 50 ஆயிரம் கட்டணம் செலுத்தி விருப்ப மனு பெற்றுச்சென்றனர். மொத்தம் 60 பேர் விருப்ப மனு தாக்கல் செய்துள்ளனர்.

அதேவேளை, தேர்தலில் மக்கள் நீதி மய்யம் போட்டியிடவில்லை என்று அக்கட்சியின் தலைவர் கமல்ஹாசன் அறிவித்தார். மேலும், தேர்தலில் திமுகவுக்கு ஆதரவு அளிப்பதாகவும் கூறினார். இதையடுத்து, விருப்ப மனு கட்டணம் செலுத்தி விருப்பமனு வாங்கியவர்களுக்கு அந்த பணம் ரூ. 50 ஆயிரம் திரும்பி வழங்கப்படும் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், விருப்ப மனு கட்டணம் ரூ. 50 ஆயிரம் செலுத்தி மொத்தம் 60 பேர் விருப்ப மனு வாங்கியுள்ள நிலையில் அந்த பணம் கட்சி நிதிக்கு சென்றுவிட்டதாக மக்கள் நீதி மய்யம் நிர்வாகிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. இதற்கு மக்கள் நீதி மய்யம் கட்சியினர், விருப்பமனு வாங்கியவர்கள் தரப்பில் கடும் எதிர்ப்பு எழுந்தது. இந்நிலையில், தேர்தலில் மக்கள் நீதி மய்யம் சார்பாகப் போட்டியிட விருப்ப மனு தாக்கல் செய்திருந்தவர்கள், தாங்கள் செலுத்திய கட்டணத் தொகையை (ரூ. 50 ஆயிரம்) தலைமை அலுவலகத்தில் நாளை முதல் வரும் 16-ம் தேதிக்குள் நேரில் வந்து திரும்பப் பெற்றுக்கொள்ளலாம் என்று அக்கட்சி தலைமை அறிவித்துள்ளது.

## பிரதமர் மோடி, அமித்ஷா அவசர அழைப்பு... தனி விமானத்தில் டில்லி சென்ற அண்ணாமலை!

**சென்னை, ஏப்.9:**

பிரதமர் நரேந்திர மோடி, உள்துறை அமைச்சர் அமித்ஷாவின் அவசர அழைப்பின் பேரில் தமிழக பாஜக முன்னாள் தலைவர் கே.அண்ணாமலை சென்னையில் இருந்து தனி விமானத்தில் தில்லி புறப்பட்டு சென்றார்.

காரைக்கால் மாவட்டத்தில் போட்டியிடும் பாஜக வேட்பாளருக்கு ஆதரவுக்கோரி பிரசாரத்தில் ஈடுபட்டிருந்த பாஜக தமிழக முன்னாள் தலைவர் கே.அண்ணாமலைக்கு பாஜக தலைமையில் இருந்து அவசரமாக டில்லிக்கு வரும்படி அழைப்பு வந்துள்ளது. இதையடுத்து அண்ணாமலை காரைக்கால் பிரசார களத்தில் இருந்து தனி ஹெலிகாப்டரில் செவ்வாய்க்கிழமை மாலை 6.30 மணியளவில் சென்னை விமான நிலையம் வந்து சேர்ந்தார். அங்கிருந்து தனி விமானத்தில் இரவு 7.20 மணியளவில் தில்லி புறப்பட்டு சென்றார்.

பிரதமர் நரேந்திர மோடி மற்றும் உள்துறை அமைச்சர் அமித்ஷாவின் அழைப்பின் பேரில், அண்ணாமலை தனி விமானத்தில் தில்லி புறப்பட்டு சென்றதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

தமிழக பாஜக தலைமைக்கும், அண்ணாமலைக்கும் சுமுகமான உறவு இல்லாத நிலையில், அண்ணாமலையின் திடீர்டல்லி பயணம் தமிழக அரசியல் வட்டாரம் மற்றும் தேர்தல் களத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## தூத்துக்குடி மாவட்டத்தில் 121 வேட்புமனுக்கள் ஏற்பு; 67 மனுக்கள் தள்ளுபடி

**தூத்துக்குடி, ஏப்.9:**

தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள விளாத்திகுளம் சட்டமன்ற தொகுதியில் தாக்கல் செய்யப்பட்ட 28 வேட்பு மனுக்களில் 18 மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன; 10 மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன. தூத்துக்குடி சட்டமன்ற தொகுதியில் தாக்கல் செய்யப்பட்ட 33 வேட்பு மனுக்களில் 27 மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன; 6 மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன. திருச்செந்தூர் சட்டமன்ற தொகுதியில் தாக்கல் செய்யப்பட்ட 35 வேட்பு மனுக்களில் 14 மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன; 21 மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன.

ஸ்ரீவைகுண்டம் சட்டமன்ற தொகுதியில் தாக்கல் செய்யப்பட்ட 28 வேட்பு மனுக்களில் 18 மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன; 10 மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன. ஓட்டப்பிடாரம் சட்டமன்ற தொகுதியில் தாக்கல்செய்யப்பட்ட 28 வேட்புமனுக்களில் 21 மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன; 7 மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன. கோவில்பட்டி சட்டமன்ற தொகுதியில் தாக்கல் செய்யப்பட்டுள்ள 36 வேட்பு மனுக்களில் 23 மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன; 13 மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன. இவ்வாறு தூத்துக்குடி மாவட்டத்தில் தாக்கல் செய்யப்பட்ட மொத்த வேட்பு மனுக்கள் 188-ல் 121 மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன;67 மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன.

## திருக்குறுங்குடி பங்குனி திருவிழா.. சித்தர்களுக்கு காட்சி கொடுத்த நம்பி சுவாமிகள்

**களக்காடு, ஏப்.9:**



களக்காடு அருகே உள்ள திருக்குறுங்குடியில் 1500 ஆண்டுகள் பழமை வாய்ந்த அழகியநம்பிராயர் கோவில் உள்ளது. 108 வைணவ திவ்ய தேசங்களில் ஒன்றாக திகழும் இந்த கோவில் ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பட்ட சிறப்பு வாய்ந்ததாகும்.

ஆண்டு தோறும் இக்கோவிலில் பங்குனி மாதம் பிரம்மோற்சவ திருவிழா வெகுவிமரிசையாக நடப்பது வழக்கம். அதன்படி இந்த ஆண்டின் பங்குனி பிரம்மோற்சவ திருவிழா கடந்த 2ம் தேதி திருக்கொடி ஏற்றத்துடன் தொடங்கி நடந்து வருகிறது. விழா நாட்களில் தினசரி நம்பி சுவாமிகள் பல்வேறு வாகனங்களில் எழுந்தருளி திருவீதி உலா வரும் நிகழ்ச்சி நடைபெற்று வருகிறது.

விழாவின் முக்கிய நிகழ்வாக, 5 நம்பி சுவாமிகள் சித்தர்களுக்கு காட்சி கொடுக்கும் வைபவம் நேற்று (6ம் தேதி) இரவில் கோலாகலத்துடன் தொடங்கியது. இதையொட்டி நம்பி சுவாமிகளுக்கு சிறப்பு திருமஞ்சனம் நடத்தப்பட்டது. அதனைதொடர்ந்து இரவில் கோவிலில் இருந்து நின்ற நம்பி, அமர்ந்த நம்பி, பள்ளி கொண்ட நம்பி, திருமலைநம்பி, திருப்பாற்கடல் நம்பி ஆகிய 5 நம்பி சுவாமிகளும் தனித்தனியாக 5 கருட வாகனங்களில் எழுந்தருளி நிகழ்ச்சிக்காக புறப்பட்டனர்.

ரதவீதிகள் வழியாக, திருவீதி உலா வந்த 5 நம்பிகளும் இன்று அதிகாலை 2.50 மணிக்கு மேல ரதவீதியில் மேற்கு நோக்கி எழுந்தருளி, மகேந்திரகிரி மலையை கடாஷித்து அங்கு வாழும் தேவகந்தர்வ சித்தர்களுக்கு திருக்காட்சி அளித்தனர். அப்போது நம்பி சுவாமிகளுக்கு சிறப்பு தீபாராதனை நடைபெற்றது.

இந்நிகழ்வில் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து வந்திருந்த ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர். சித்தர்களுக்கு காட்சி கொடுத்த நம்பி சுவாமிகள், கோவிலுக்கு புறப்பட்டு சென்றனர். கோவில் வாசலில் நம்பி சுவாமிகளை திருக்குறுங்குடி ஜீயர் தொழுது வரவேற்றார். திருக்குறுங்குடி போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர். விழாவின் 10ம் நாளான ஏப்ரல் 11ம் தேதி தேரோட்டம் நடைபெறுகிறது. அன்று காலை திருத்தேர் வடம் பிடித்து இழுக்கப்படுகிறது.

## விருதுநகர் பராசக்தி மாரியம்மன் கோவில் திருவிழா: அக்னி சட்டி எடுத்து நேர்த்திக்கடன் செலுத்திய பக்தர்கள்

**விருதுநகர், ஏப்.9:**



விருதுநகரில் பிரசித்தி பெற்ற பராசக்தி மாரியம்மன் கோவில் உள்ளது. ஆண்டுதோறும் இந்த கோவிலில் பங்குனி பொங்கல் திருவிழா நடைபெறுவது வழக்கம். அதேபோல இந்த ஆண்டு பங்குனி பொங்கல் திருவிழா கடந்த 29-ந் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது.

விழாவின் முக்கிய நிகழ்ச்சியான பொங்கல் திருவிழா நேற்று முன்தினம் நடைபெற்றது. நேற்று அக்னி சட்டி மற்றும் கயிறு குத்து திருவிழா நடைபெற்றது. இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு அம்மனுக்கு 21 அக்னி சட்டி, 51 அக்னி சட்டி, பிள்ளைத்தொட்டில், கரும்பு தொட்டில், அலகு குத்தி ரதம் இழுத்தல் உள்ளிட்ட பல்வேறு நேர்த்திக்கடன்களை செலுத்தினர்.

மழையில் நனைந்தபடியே கரும்பு தொட்டில் சுமந்து வந்த பக்தர்

திருவிழாவின்போது சிறிது நேரம் மழை பெய்தது. பக்தர்கள் மழையில் நனைந்தபடியே தங்களது நேர்த்திக்கடன்களை செலுத்தினர். வெயிலுகந்தம்மன், பராசக்தி மாரியம்மன் வெள்ளி ரிஷப வாகனத்தில் வீற்றிருந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தனர்.

திருவிழாவில் இன்று (செவ்வாய்க்கிழமை) மாலை தேரோட்டம் நடைபெறுகிறது. நாளை தேர் சுவடு நோக்கி வரும் நிகழ்ச்சியும், நாளை மறுநாள் மஞ்சள் நீராடலுடன் திருவிழா நிறைவு பெறுகிறது.

திருவிழாவை முன்னிட்டு தினமும் இன்னிசை, வில்லிசை, சொற்பொழிவு, பல்சுவை கதம்ப நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

## வாழ்மங்கலம் மழை மாரியம்மன் கோவிலில் தீமிதி திருவிழா

**நாகர்கோவில், ஏப்.9:**

நாகப்பட்டினம் மாவட்டம் திருமருகல் ஒன்றியம், வாழ்மங்கலம் கிராமத்தில் மழை மாரியம்மன் கோவில் அமைந்துள்ளது. இந்த கோவிலில் ஆண்டுதோறும் தீமிதி திருவிழா நடைபெறுவது வழக்கம். அவ்வகையில் இந்த ஆண்டுக்கான திருவிழா விமரிசையாக நடைபெற்று வருகிறது.

பந்தக்கால் முகூர்த்தம், கஞ்சி வார்த்தல், பூச்சொரிதல் நிகழ்ச்சியுடன் தொடங்கிய இந்த விழாவில், தினமும் சிறப்பு பூஜைகள் நடைபெறுகினற்ன.

அம்மனுக்கு மஞ்சள், பால், பன்னீர், தயிர், தேன், இளநீர், மாப்பொடி, திரவியப்பொடி உள்ளிட்ட பொருட்களால் சிறப்பு அபிஷேகம் மற்றும் சந்தனகாப்பு அலங்காரம் நடைபெற்றது.

விழாவின் முக்கிய நிகழ்ச்சியான தீமிதி திருவிழா நேற்று நடைபெற்றது. இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு குண்டத்தில் இறங்கி தீமிதித்து நேர்த்திக்கடன் செலுத்தினர்.

பின்னர் அம்மன் சிறப்பு அலங்காரத்துடன் அன்ன வாகனத்தில் எழுந்தருளி வீதியுலா வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார்.






## நலம் தரும் மருத்துவம்

## பொன்னான நன்மைகள் தரும் பொன்னாங்கண்ணி கீரை!

'கீரைகளுக்கெல்லாம்ராஜா' என்றுசொல்லப்படுவதுதான் இந்த பொன்னாங்கண்ணி. பொன்னாங்கண்ணி கீரையில் நார்ச்சத்து அதிக அளவில் உள்ளது. மேலும், இரும்பு சத்து, பாஸ்பரஸ், கால்சியம், வைட்டமின் ஏ, வைட்டமின் சி, வைட்டமின் பி, தாதுக்கள் போன்றவை வளமான அளவில் உள்ளன.

பாசிப்பருப்புடன் சேர்த்து இந்த கீரையை சாப்பிட்டு வந்தால், சருமப் பொலிவு கிடைக்கும். சருமத்தில் சுருக்கங்கள் ஏற்படுவது தடுக்கப்படும். அழகு மேம்படும். பொன் போன்ற சருமம் மின்னிட இந்த பொன்னாங்கண்ணி கீரையே போதும் என்பார்கள்.

பொன்னாங்கன்னி கீரையை வாரம் இரணடு முறை சமைத்து சாப்பிட்டு வந்தால், இதயம் மற்றும் மூளை புத்துணர்வு பெறுகிறது. இந்தக் கீரை மற்றும் இதன் தண்டுகளை சாப்பிடுவது பாலூட்டும் தாய்மார்களுக்கு உதவுகிறது. இது கல்லீரலின் ஆரோக்கியத்தை பராமரிப்பதோடு தாய்ப்பால் சுரப்பை அதிகரிக்க உதவுகிறது.

இந்தக் கீரையில் உள்ள சிறப்பு என்னவென்றால், உடல் எடையை குறைக்கவும், உடல் எடையை கூட்டவும் இந்த ஒரே கீரை பயன்படுகிறது. எடை குறைவாக இருப்பவர்களுக்கு, பொன்னாங்கண்ணி இலையை துவரம் பருப்புடன் நெய் சேர்த்து பிசைந்து கொடுத்தால் உடல் எடை ஆரோக்கியமாக அதிகரிக்கும். அதே சமயம், உடல் பருமனாக இருப்பவர்கள், இந்த கீரையில் உப்பு மற்றும் மிளகு சேர்த்து சமைத்து சாப்பிட்டால், உடல் எடையை குறைக்க உதவுமாம்.


சிறுநீர் எரிச்சல் நீங்கவும், சிறுநீரகம் நன்கு செயல்படவும் பொன்னாங்கண்ணியை அடிக்கடி உணவில் சேர்த்துக் கொள்ளலாம். பொன்னாங்கன்னி கீரையை பொடிப் பொடியாக நறுக்கி, அதனுடன் பாசிப்பருப்பு, சின்ன வெங்காயம், சீரகம், பூண்டு, மிளகுத்தூள் சேர்த்து வேகவைத்து மசியல் செய்து சாப்பிட்டு வந்தால் உடலில் இரத்த விருத்தி மற்றும் தூய்மை அடையும்.

பொன்னாங்கண்ணி இலைகளை பொடியாக்கி பூச்சிகள் கடித்த இடத்தில் வெளிப்புறமாக பூசினால் விஷக்கடி நீங்கும். வைட்டமின் ஏ சத்து நிறைந்த இந்த கீரையை நெய்யில் வதக்கி, வெள்ளை துணியில் வைத்து கண்களில் வைத்து கட்டினால், கண் பார்வை தெளிவுபெறும்.. இந்த இலையிலிருந்து எடுக்கப்படும் எண்ணெய்யை உச்சந்தலையில் தேய்த்து குளித்தால், கண்கள் பொலிவு பெறும். உடல் உஷ்ணம் தணியும். மாலை கண் நோய்க்கு, இந்தக் கீரையை வெண்ணெயுடன் சேர்த்து சாப்பிட்டு வந்தால் தீர்வு கிடைக்கும்.

பொன்னாங்கண்ணி கீரையில் கால்சியம் சத்து அதிகம் உள்ளது. அதனால் எலும்புகள் மற்றும் பற்களுக்கு வலிமை கிடைக்கிறது.

## காயம் பட்டால் கைரேகை மாறுமா? இதோ வியப்பூட்டும் தகவல்கள்!

மனித உடலின் மிகவும் வியக்கத்தக்க பாகங்களில் ஒன்று கைரேகைகள். குற்றப் புலனாய்வு முதல் ஸ்மார்ட்போன்களைத் திறப்பது வரை, இன்று கைரேகை என்பது ஒருவரின் அடையாள அட்டையாகவே மாறிவிட்டது. இருவருக்கு ஒரே மாதிரியான கைரேகை இருக்க முடியுமா? குறிப்பாக, இரட்டையர்களின் கைரேகைகள் எப்படி இருக்கும்? வாருங்கள், இதற்கு பின்னால் உள்ள அறிவியலைப் பார்ப்போம்.







கைரேகைகள் எவ்வாறு உருவாகின்றன?

நாம் பிறப்பதற்கு முன்பே, கருப்பையில்இருக்கும்போதே நமது கைரேகைகள் உருவாகின்றன.கருஉருவான 10 முதல் 15 வாரங்களுக்குள் விரல் நுனிகளில் உள்ள சரும மடிப்புகள் (FRICTION RIDGES) வளரத் தொடங்குகின்றன.

இந்த சரும மடிப்புகள் உருவாவதற்கு இரண்டு முக்கிய காரணங்கள் உள்ளன.

1. மரபணுக்கள்: நமது டி.என்.ஏ (DNA) கைரேகையின் பொதுவான வடிவத்தைத் தீர்மானிக்கிறது.

2. சூழல் காரணிகள்: கருப்பையில் உள்ள அம்னியோடிக் திரவத்தின் அழுத்தம், குழந்தையின் அசைவு, தொப்புள்கொடியின் நீளம்மற்றும்ஊட்டச்சத்துக்கள் கைரேகையின் நுணுக்கமான மாற்றங்களை உருவாக்குகின்றன.

கைரேகைகளின் வகைகள்: அறிவியலாளர்கள் கைரேகைகளை மூன்று முக்கிய பிரிவுகளாகப் பிரிக்கின்றனர்:

லூப்கள்: இது 60-70% மக்களிடம் காணப்படும் பொதுவான வடிவம். கோடுகள் ஒரு பக்கமாகத் தொடங்கி மீண்டும் அதே பக்கம் வளையும்.

வோர்ல்கள்: 25-35% மக்களிடம் காணப்படும். இவை வட்ட வடிவில் அமைந்திருக்கும்.

ஆர்ச்சுகள்: இது மிகவும் அரிதானது. கோடுகள் ஒரு பக்கத்திலிருந்து தொடங்கி மலைப்பாதை போல உயர்ந்து மறுபக்கம் செல்லும்.

இருவருக்கு ஒரே ரேகை இருக்க முடியுமா?

அறிவியல் ரீதியாக, இருவருக்கு ஒரே மாதிரியான கைரேகை இருப்பதற்கான வாய்ப்பு மிக அரிதானது. இதுவரை அறிவியல்பூர்வமாக நிரூபிக்கப்படவில்லை. அதாவது, இந்த பூமியில் இதுவரை வாழ்ந்த மற்றும் வாழப்போகும் மனிதர்களில் இருவருக்கு ஒரே மாதிரியான ரேகை இருப்பது நடைமுறையில் சாத்தியமற்றது. கைரேகையில் உள்ள 'லூப்' (LOOP), 'வோர்ல்' (WHORL) மற்றும் 'ஆர்ச்' (ARCH) போன்ற வடிவங்கள் ஒருவருக்கு இருப்பது போலவே மற்றொருவருக்கு அமைந்தாலும், அவற்றின் நுணுக்கமான முடிச்சுகள் எப்போதும் மாறுபடும். இரட்டையர்களின் கைரேகைகள் ஒரே மாதிரியானவையா?

இது ஒரு பொதுவான கட்டுக்கதை. 'ஒரே மாதிரியான இரட்டையர்கள்' (IDENTICAL TWINS) ஒரே மாதிரியான டி.என்.ஏ-வை பகிர்ந்துகொள்கிறார்கள். அவர்களின் முக அமைப்பும், குணாதிசயங்களும் ஒன்றாக இருக்கலாம். ஆனால் அவர்களின் கைரேகைகள் கண்டிப்பாக வேறானவை.

ஒரே மாதிரியான இரட்டையர்கள் ஒரே கருப்பையில் வளர்ந்தாலும், ஒவ்வொரு குழந்தையும் வெவ்வேறு நேரங்களில் நகர்கிறது, வெவ்வேறு இடங்களில் கருப்பையைத் தொடுகிறது. இந்த சிறிய அழுத்த மாறுபாடுகள், அவர்களின் விரல் நுனிகளில் தனித்துவமான கோடுகளை உருவாக்குகின்றன. எனவே, பொதுவான DNA சோதனையில் இரட்டையர்களை வேறுபடுத்துவது கடினம் என்றாலும், கைரேகை மூலம் அவர்களை மிக எளிதாக வேறுபடுத்தி அறிய முடியும்.

கைரேகைகள் மாறுமா?

நமது வாழ்நாள் முழுவதும் கைரேகைகள் மாறுவதே இல்லை.

ஒருவருக்குக் காயம் ஏற்பட்டால் கூட, புதிய சருமம் வளரும்போது பழைய ரேகையே மீண்டும் உருவாகும். ஆனால், ஆழமான காயங்கள் ஏற்பட்டால் கைரேகை நிரந்தரமாக மாறக்கூடும். ஒருவரது உடல் எடை கூடினாலோ அல்லது குறைந்தாலோ ரேகையின் அளவு மாறலாமே தவிர, அதன் வடிவம் மாறாது.

கைரேகை என்பது வெறும் அடையாளம் மட்டுமல்ல, ஒவ்வொரு மனிதனும் இந்த உலகில் தனித்துவமானவன் என்பதற்கான உயிரியல் சான்று. நவீனத் தொழில் நுட்பங்கள் எவ்வளவு வளர்ந்தாலும், ஒரு சிறு விரல் நுனியில் ஒளிந்துள்ள இந்த சிக்கலான அறிவியலை மிஞ்ச எவராலும் முடியாது.

# "நொடிகள் மாறும்"



மாலை நேரம். வீட்டில் சண்டை கொஞ்சமாய் ஓய்ந்திருந்தது.
"எப்பவும் நீ சொல்றதுதான் சரின்னு நெனைக்காதே!" சொல்லி விட்டுக் கோபத்துடன் வெளியேறினார் மீனாவின் கணவர்.
வீட்டிற்குள் அவஸ்தையான அமைதி.
மீனாவால் பீறிக் கொண்டு வந்த கண்ணீர் தடுக்க முடியவில்லை.
மேலே பார்த்தாள், வழக்கமாக அமைதியாய்ச் சுழலும் சீலிங் ஃபேன் ஏனோ "கரா...முரா" வென்ற சத்தத்தோடு சுழன்றது.
அவள் மனதில் ஒரு முடிவு தோன்றி நின்றது.
"வேற வழியில்லை.. இதுதான் முடிவு..."
நாற்காலியை இழுத்தாள்.
ஒரு புடவையை எடுத்தாள். கயிறு போல் சுற்றினாள். கைகள் நடுங்கின.
அந்த நேரம் ஃபேன் இன்னும் வேகமாகச் சுழன்றது. " வேண்டாம்... வேண்டாம்" என்று யாரோ கத்துவது போலிருந்தது அதன் ஓசை.
அவள் நாற்காலி மேலே ஏறிய அந்த நொடி, "டமார்"
ஃபேன் திடீரென்று கழன்று தரையில் விழுந்தது. அதிர்ச்சியுடன் அவள் நாற்காலியிலிருந்து குதித்தாள்.
இதயம் பலமாக துடித்தது.
சில விநாடிகள்... அமைதி.
அவள் கீழே விழுந்த ஃபேனைப் பார்த்தாள்.
அந்த விநாடி அவளுக்குள் வேறொரு எண்ணம். உணர்த்தியது:
"ச்சை... நான் எவ்வளவு பெரிய தவறு செய்ய இருந்தேன்!"
அவள் குழந்தையின் சிரிப்பு நினைவில் வந்து போனது.
"அம்மா..." என்ற மழலைக் குரல் மனதில் ஒலித்தது.
தரையில் உட்கார்ந்தாள்.
"நான் போனால்... என் குழந்தையின் கதி?"
அந்தக் கேள்வி அவள் முடிவை உடைத்தது.
வாசல் திறந்தது. கணவன் திரும்பி வந்தார். கோபம் குறைந்திருந்தது.
மீனா பார்த்தாள். "நாம பேசலாம்..." என்று தனக்குள் சொல்லிக் கொண்டு அருகில் சென்றாள்.
அந்த வீட்டில் மீண்டும் அன்பு நதி ஓடியது.
கீழே கிடந்த ஃபேன் திருப்தியாய்ச் சாய்ந்தது.



**-முகில் தினகரன்**
கோயமுத்தூர்.

# மளிகை கடை...




திருநெல்வேலியில் இருந்து ரஹீம் வாப்பா தன்மகன் இலியாசை அழைத்துக் கொண்டு சென்னையில் உள்ள கருப்பையாவின் வீட்டுக்கு வந்திருந்தார்... சற்றும் எதிர்பாராமல் ரஹீம் வாப்பாவை தன் வீட்டு வாசலில் பார்த்ததும் கருப்பையாவுக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை. காரணம் ரஹீம் வாப்பாவும் கருப்பையாவும், திருநெல்வேலியில் ஒரு கிராமத்தைச்சேர்ந்தவர்கள் அந்த கிராமத்தில் கருப்பையா குடும்பமும் ரஹீம்வாப்பாவின் குடும்பமும் மிகவும் அன்னியோன்யமாக மிக நெருக்கமான பழக்கத்தில் உள்ளவர்கள் திடீரென்று ரஹீம் வாப்பா தன் வீட்டுக்கு வந்திருப்பது, அண்ணாச்சிக்கு பெரு மகிழ்ச்சியாய் இருந்தது கூடவே அவர் மகன் இலியாசையும் கண்டதும் என்னவோ ஏதுவோ என்று சற்று கிலியாகவும் இருந்தது கருப்பையாவுக்கு. கருப்பையாவின் தடுமாற்றத்தை கண்ட ரஹிம்வாப்பா அவரே பேச தொடங்கினார்.

"அது ஒன்னும் இல்ல கருப்பையா நம்ம பையன் இலியாசுக்கு படிப்பு மண்டையில ஏற மாட்டேங்குது ஏதாவது தொழிலை கத்துக் கொடுக்கலாம் என்று பார்த்தால் திருநெல்வேலியில் வச்சிருந்தா பையன் கெட்டு போயிடுவானோன்னு பயமா இருக்குது அதனாலதான் அவனை அழைத்துக்கொண்டு உன்கிட்ட வந்தேன் ....நீ உன் பிள்ளை மாதிரி அவனை வைத்து பார்த்துக் கொள்" என்றார் மிகவும் அன்போடு

"அட என்னங்க வாப்பா நான் கூட என்னவோ ஏதோன்னு கொஞ்சம் பயந்து போயிட்டேன் அவ்வளவுதான். என்ன சமாச்சாரம்னு இதை நீங்க போன்ல சொல்லிட்டு அவன மட்டும் அனுப்பி வைத்திருந்தாலே போதுமானது தானே... நீங்க ஏன் வயசான காலத்துல இவ்வளவு தூரம் பஸ் ஏறி வந்து கஷ்டப்பட்டுகிட்டு இருக்கணும்...? என்கிட்ட கூட்டி வந்து விட்டுட்டீங்கல்ல இனிமே அவ என் வீட்டு பையன் நீங்க அவனை பத்தி எப்பவும் எந்த கவலையும் பட வேண்டாம் அவன பாத்துக்க வேண்டியது என்னுடைய பொறுப்பு"

என்று மிகவும் உரிமையோடும் தன்மையோடும் கூறிய கருப்பையா அண்ணாச்சியின், கைகளை இருகபற்றிய வாப்பா "இது போதும் கருப்பையா நான் நிம்மதியா ஊருக்கு போவேன் என் பையன் எப்படியும் நல்லபடியா ஆளாயிடுவான்னு எனக்கு நம்பிக்கை வந்துருச்சு " என்று முகமெல்லாம் மகிழ்ச்சியாக கூறினார். அதற்குள் வீட்டுக்குள் இருந்து வெளியே வந்த கருப்பையாவின் மனைவி மல்லிகா வாப்பாவை பார்த்த அளவில்லாத மகிழ்ச்சியில் "எங்கே வாப்பா... பையனை விட்டுட்டு உடனே கிளம்பிடலாம்னு பார்த்தீங்களா இரண்டு நாளைக்கு இருந்துட்டு தான் போகணும் எங்க வீட்டுக்கு வந்துட்டு உடனே கிளம்பி போலாம்னு பார்த்தா நாங்க விடுவோமா வாப்பா நாங்க ஆக்கி போடுற சாப்பாட்ட ரெண்டு நாளைக்கு சாப்பிட்டுவிட்டு தான் போகணும்"

என்று முகமெல்லாம் மலர்ச்சியாக சொன்ன மல்லிகாவை பார்த்து, "இல்லடாம்மா மல்லிகா, ஊருல ஒருபாடு வேலையெல்லாம் கிடக்கு ஆடு மாடெல்லாம் அப்படியே அப்படியே விட்டுட்டு வந்துட்டேன் என் பையன் இலியாசை உங்ககிட்ட ஒப்படைச்சிட்டேன் நான் இவ்வளவு தூரம் வந்ததற்காக ஒரு வேலையாவது சாப்பிட்டுட்டுதான் போவேன் "என்றார் மிகவும் உரிமையோடுவாப்பா.

கருப்பையாவின் மளிகை கடையில் ஏற்கனவே கருப்பையாவின் அக்காள்மகன் குமரன் வேலை பார்த்து வந்தான். குமரனுக்கும் இலியாசுக்கும் கிட்டத்தட்ட இருபதுவயதுதான் இருக்கும் இருவருமே சிறு பிள்ளையிலிருந்து நன்கு அறிமுகமானவர்கள் என்பதால் கடையில் வேலை பார்க்கவும் தொழிலை கற்றுக் கொள்ளவும் இலியாசுக்கு மிகவும் ஈசியாக இருக்கும் என்று நினைத்தார் கருப்பையா. ஆனால் பள்ளி பருவத்திலிருந்தே குமரனுக்கு இலியாசைக்கண்டால் பிடிக்காது. இலியாஸ் எதை செய்தாலும் ஏட்டிக்கு போட்டியாகவே நடந்து கொள்வான் குமரன். இந்த விஷயம் ஓரளவுக்கு இலியாசுக்கும் கூட தெரியும். ஆனாலும் இலியாசை பொறுத்தவரை குமரனை தன் நண்பனென்றுதான் நினைத்தான்.
எல்லாம் முடிந்த நிலையில் திருமண மேடைக்கு வந்த இலியாஸ், தனது பாக்கெட்டில் இருந்து ஒரு பெரிய அளவிலான மோதிரத்தை எடுத்து குமரனின் கரங்களில் அணிவித்து கட்டிப்பிடித்து தனது வாழ்த்துக்களை சொன்னான். இலியாஸின் இந்த செயலால் தடுமாறிப்போன குமரனுக்கு, என்ன பேசுவது என்ன செய்வது என்று தெரியாமல் இலியாசையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தான்.

"ஏண்டா குமரா என்னை அப்படி பார்க்கிறாய்... நீ என்னுடைய நண்பன் உனக்கு என்னால் ஆன சிறிய அன்பளிப்பு இதுதான் இதை விட பெரிதாக செய்ய என்னிடம் ஏதுமில்லை " என்று தனது அன்பின் ஆதங்கத்தை வெளிப்படுத்தினான் இலியாஸ்.

இலியாஸ் அணிவித்துவிட்ட மோதிரத்தையும் இலியாசையும் மாறி மாறி பார்த்தான் குமரன். குமரனுக்கு மிகவும் குழப்பமாய் இருந்தது இலியாஸ் இந்த கடைக்கு வந்து ஐந்து ஆண்டுகள் முடிந்து விட்டது இந்த ஐந்தாண்டுகளில் இலியாஸ் கடையில் தனக்கு சம்பளமாக வாங்கிய தொகையே இந்த மோதிரத்தின் மதிப்பு தான் இருக்கும் அப்படியானால் இந்த ஐந்து ஆண்டின் சம்பளத்தை எனக்கு அன்பளிப்பாக அளித்திருக்கிறான் இலியாஸ் என்றால் .... அவன் இப்போது மட்டுமல்ல எப்போதுமே தன்னை மிகவும் நெருக்கமான நண்பனாக மட்டுமே நினைத்துக் கொண்டிருந்தான் என்பது குமரனுக்கு புரிய வந்தது... இலியாசனுடைய இந்த அர்ப்பணிப்பு மிகுந்த நட்பை... இதை புரிந்து கொள்ளாமல் நாம் அவனை எப்படி எல்லாம் மனம் நோகும்படி பேசி விட்டோம் என்று தனக்குள் நொந்து நூலாகிக்கொண்டிருந்தான் குமரன். அதேசமயம் இலியாசை இருக அணைத்து ஆற தழுவியபடி தன்னை மன்னித்து விடும்படி கண்ணீரால் கோறினான் குமரன்.

திருமண மேடையில் குமரனுக்கும் இலியாசுக்கும் நடந்து கொண்டிருந்த இந்த மனப் போராட்டத்தையும், குமரனின் முகத்தில் தெரிந்த வெட்கி தலைகுணியும் படியான முக பாவனைகளையும் தூர நின்று கவனித்தபடியும், இலியாஸின் இந்த செய்கையினால் குமரனுக்குள் ஏற்பட்டுக் கொண்டிருந்த மன மாற்றங்களையும் கண்டு, மனதுக்குள் மகிழ்ந்து கொண்டிருந்தார்கள் கருப்பையாவும் மல்லிகாவும்.

திருமணத்திற்கு வந்திருந்த ரஹீம்வாப்பா, இங்கே நடந்த மனப்போராட்டங்கள் எதையுமே அறிந்திறுக்கவில்லை... எனவே இலியாசுக்கும் குமரனுக்கும் இருக்கின்ற இந்த நேசமிகுந்த நட்பையும், கருப்பையா மல்லிகாவின் இனம் புரியாத மகிழ்ச்சியையும் கண்டு தன்னை மறந்து ஆனந்தகண்ணீரோடு நின்று கொண்டிருந்தார் வாப்பா.



**- முத்தையாமோகன்**
கோயமுத்தூர்.

# Boomer to Gen Z

பாகம் 25



**வி.பிரபாவதி**
**மடிப்பாக்கம்.**

கோமதிதான் போன் செய்தாள். "அடியே மாலு அப்பாக்கு ரொம்ப முடீலடி. டவுன் ஆஸ்பத்திரிக்கு கூட்டிண்டு போறோம். ஹரி போன் எடுக்கல. நேக்கு கையும் ஓடல, காலும் ஓடல. மணியக்காரர் பேரன் வந்துருந்தான். அவன் கார்லதான் போறோம்" கோமதி அழுதவாறே பேசினாள்.

மாலு அதிர்ச்சியானாள். அதற்குள் கடைக்குப் போயிருந்த வாசுவும் வந்துடவே, விஷயத்தைச் சொல்லிக் கொண்டே அழ ஆரம்பித்தாள்.

தகவல் கிடைத்ததும் ஹரி கிளம்பிவிட்டான்.

மாலுவும் வாசுவும் தனியாக காரில் கிளம்பினார்கள். பக்கத்து வீட்டு தங்கவேல் செட்டியார் வீட்டாரிடம் சொல்லிவிட்டு சாவியைக் கொடுத்துவிட்டு கிளம்பினர்.

ஹரியும், மாலுவும் கொஞ்சம் ஒரு அரைமணி நேரம் இடைவெளியில் ஆஸ்பத்திரிக்கு வந்தனர். ஆனால் வரதன் மாரடைப்பால் மிகவும் அவஸ்தைப்பட்டு அதிகாலை ஐந்து மணிக்கே இறைவனடி சேர்ந்து விட்டார். இவர்களைக் கண்டதும் சுந்தரி அழுதுக் கொண்டே ஓடி வந்துக் கட்டிக் கொண்டாள்.

ஆண்டாண்டு காலம் அழுது புரண்டாலும் மாண்டார் வருவதில்லையே. எந்தத் தொழில் நுட்பமும் செய்யமுடியாத ஒன்று.

கோமதி கலங்கி நின்றாள். "இப்பிடி எல்லாரையும் வாரிக் குடுத்துட்டு நா என்னத்தக் கொண்டு போப்போறேன்? கடவுளே என்னை ஏன் இப்பிடி தண்டிக்கிறப்பா? இறைந்து கத்திக் கதறினாள். "நிமிஷமா போய்ட்டாரே என்னைத் தனியாத் தவிக்க விட்டுட்டு" அழுது தீர்த்தாள் கோமளம்.

பதிமூன்று நாட்கள் ஓடிப்போனது. ஹரி கொஞ்ச நாட்கள் இருந்து வயல், வாய்க்கால், இடம், வீடு எல்லாத்தையும் செட்டில் பண்ணிட்டு அம்மாவை அழைத்துச் செல்ல நினைத்தான். சித்ராவிற்கு திக்கென்றது.

மாலு சொன்னாள் "ஹரி, நீயும் சித்துவும் இங்க வந்துடுங்கோளேன்.




புள்ள மாட்டுப்பொண்ணு சென்னைலேயே இருக்கட்டும். கொஞ்சம் அம்மா மனசையும் ஒடம்பையும் தேத்திக்கட்டுமே" என்றாள்.

"ஏன், நீ வரது. அடுத்தவாளுக்குன்னா அள்ளி விடுவேளே" இது சித்ராவின் மானசீக கேள்வி. நேரில் கேட்க முடியுமா? அவளுக்கு இந்த சொத்து, பராமரிப்பு இதெல்லாம் தெரியாது. கிராமம் என்றாலே கசக்கும். அடுப்படியிலேயே வேகணும். யாராவது வந்துண்டே இருப்பா. காபியும் சாப்பாடும் சரியா இருக்கும். பொறந்தாம்னு இதுகள் வேற ஸீவுக்கு வந்துடுங்கள். கடவுளே இது என்ன சோதனை? யோசித்துக் கொண்டிருக்கும் போதே. "சித்து நம்ப ரெண்டு பேரும் அப்பாவோட ஆப்தீகம் வரைக்கும் இருந்து எல்லாம் செட்டில் பண்ணிட்டு வீட்டை கொஞ்சம் சீர் பண்ணிட்டு வாடகைக்கு விட்டுட்டுப் போகலாம்" என்றான்.

தூக்கிவாரிப் போட்டது. நன்றாக தெரியும் எதுவும் மாறப்போறதில்லன்னு. சரி என்று தலையாட்டினாள்.

மாலுவும் சுந்தரியும் ஹரியிடமே பொறுப்பைக் கொடுத்துவிட்டு "நீ பாத்து ஒனக்குத் தோணினத செய்ப்பா. அம்மாட்டக் கேட்டுக்கோ" என்றனர்.

கோமளம் எல்லாம் தலைகீழானதை நினைத்து கலங்கியிருந்தாள்.

எத்தனை எத்தனை உறவுகள்! உன்னதமான உறவுகள்! எதிர் வீடு, பக்கத்து வீடு, கோடி வீடு, தெற்காத்து மாமா, மணியக்காரர், என்று எத்தனைக் குடும்பங்கள். எத்தனை ஒற்றுமை. எங்கே போனார்கள்? பலரது குடும்பம் ஊரிலேயே இல்லை. வெளிநாடு சென்றுவிட்டார்கள். வேரோடு பிடுங்கிப் போட்டாற்போல் அல்லவா ஆகிவிட்டது.

மனதைத் தேற்றிக்கொள்ளவாவது? மாமனார், மாமியார், நாத்தனார், குழந் தைகள், பண்ணையாட்கள் என ஏகபோகமாக வாழ்ந்து வந்த கோமளம் தனியானாள். பிள்ளைகள் படிப்பு வேலை நிமித்தம் பட்டணம் சென்று விட்டார்கள். பேரப்பிள்ளைகள் அதையும் தாண்டி வெளிநாடு செல்ல ஆரம்பித்தனர். என்ன உலகம் என்றானது கோமளத்திற்கு.

அடுப்புக்கிட்ட (கேஸ் ஸ்டவ்தான்) போகக் கூடாது என்பதால் சித்ராதான் சமையல் எல்லாம் பார்த்துக் கொண்டாள். கோமளம், ஹரி இருவருமே உதவி செய்தார்கள்.
கோமளத்தின் உறவுக்காரர் ஒருவரின் மகனுக்கு இந்த ஊரில் போஸ்டாபீஸில் வேலை கிடைத்தது. அவர்கள் வந்து கோமதியையும் பார்த்துவிட்டு அடுத்த வாரம் வேலையில் சேர வேண்டும் என்று சொன்னார்கள்.

தொடரும்...

# 16 வகை லட்சுமிகள்



1. ஸ்ரீதனலட்சுமி:- நாம் எல்லா உயிர்களிடத்திலும் அன்புடன் இருக்க வேண்டும், போதும் என்ற மனதோடு நேர்மையுடன் வாழ்ந்தால் தனலட்சுமியின் அருளை பரிபூரணமாகப் பெறலாம்.

2. ஸ்ரீவித்யாலட்சுமி:- எல்லா உயிரினங்களிலும் தேவியானவள் புத்தி உருவில் இருப்பதால் நாம் நம் புத்தியை நல்ல முறையில் பயன்படுத்த வேண்டும். அன்பாகவும், இனிமையாகவும் பேச வேண்டும். யார் மனதையும் புண்படுத்தாமல் நடந்து கொண்டால் ஸ்ரீவித்யாலட்சுமியின் அருளைப் பெறலாம்.

3. ஸ்ரீதான்யலட்சுமி:- ஸ்ரீதேவியானவள் பசி நீக்கும் தான்ய உருவில் இருப்பதால் பசியோடு, நம் வீட்டிற்கு வருபவர்களுக்கு உணவளித்து உபசரித்தல் வேண்டும். தானத்தில் சிறந்த அன்னதானத்தைச் செய்து ஸ்ரீதான் யட்சுமியின் அருளை நிச்சயம் பெறலாம்.

4. ஸ்ரீவரலட்சுமி:- உடல் பலம் மட்டும் வீரமாகாது மனதில் உறுதி வேண்டும், ஒவ்வொருவரும் தாங்கள் செய்த தவறுகளையும் பாவங்களையும் தைரியமாக ஒப்புக் கொள்ள வேண்டும், நம்மால் பாதிக்கப்பட்டவர்களிடம் மன்னிப்பு கேட்க வேண்டும், செய்த பாவங்களுக்காக மனம் வருந்தி, இனி தவறு செய்ய மாட்டேன் என்ற மன உறுதியுடன் ஸ்ரீவரலட்சுமியை வேண்டினால் நன்மை உண்டாகும்.

5. ஸ்ரீசவுபாக்யலட்சுமி:- ஸ்ரீதேவி எங்கும் எதிலும் மகிழ்ச்சி உருவில் இருக்கின்றாள். நாம் எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருந்து கொண்டு மற்றவர்களின் மகிழ்ச்சிக்கும் காரணமாக இருக்க வேண்டும். பிறர் மனது நோகாமல் நடந்தால் சவுபாக்கிய லட்சுமியின் அருளைப் பெற்று மகிழலாம்.

6. ஸ்ரீசந்தானலட்சுமி:- எல்லா குழந்தைகளையும் தன் குழந்தையாக பாவிக்கும் தாய்மை உணர்வு எல்லோருக்கும் வேண் டும். தாயன்புடன் ஸ்ரீசந்தான லட்சுமியை துதித்தால் நிச்சயம் பலன் உண்டு.

7. ஸ்ரீகாருண்யலட்சுமி:- எல்லா உயிர்களிடமும் கருணையோடு பழக வேண்டும், உயிர்வதை கூடாது, உயிர்களை அழிக்க நமக்கு உரிமை இல்லை, ஜீவ காருண்ய ஒழுக்கத்தை கடை பிடித்தால் ஸ்ரீ காருண்ய லட்சுமியின் அருளைப் பெறலாம்.

8. ஸ்ரீமகாலட்சுமி:- நாம் நம்மால் முடிந்ததை மற்றவர் களுக்கு கொடுக்க வேண்டும் என்றுமே நம் உள்ளத் தில் உதவ வேண்டும் என்ற எண்ணம் உறுதியாக இருந்தால் நமக்கு ஒரு குறையும் வராது. மேலும் ஸ்ரீ மகாலட்சுமி நம்மை பிறருக்கு கொடுத்து உதவும் படியாக நிறைந்த செல்வங்களை வழங்குவாள்.

9. ஸ்ரீசக்திலட்சுமி:- எந்த வேலையும் என்னால் முடி யாது என்ற சொல்லாமல் எதையும் சிந்தித்து நம்மால் முடியும் என்ற நம்பிக்கையுடன் செய்தால் ஸ்ரீசக்தி லட்சுமி நமக்கு என்றும் சக்தியைக் கொடுப்பாள்.

10. ஸ்ரீசாந்திலட்சுமி:- நாம் ஒவ்வொருவரும் வாழ்வில் வரும் இன்ப துன்பங்களை சமமாக பாவித்து வாழ பழக வேண்டும். நிம்மதி என்பது வெளியில் இல்லை. நம் மனதை இருக்குமிடத்திலேயே நாம் சாந்தப்படுத்த முடியும். ஸ்ரீசாந்தி லட்சுமியை தியானம் செய்தால் எப்பொழுதும் நிம்மதியாக வாழலாம்.

11. ஸ்ரீசாயாலட்சுமி:- நாம் சம்சார பந்தத்திலிருந்தாலும் தாமரை இலை தண்ணீர் போல கடமையை செய்து பலனை எதிர்பாராமல் மனதை பக்தி மார்க்கத்தில் சாய்ந்து ஸ்ரீசாயாலட்சுமியை தியானித்து அருளைப் பெற வேண்டும்.

12. ஸ்ரீத்ருஷ்ணாலட்சுமி:- எப்போதும் நாம் பக்தி வேட்கையுடன் இருக்க வேண்டும், பிறருக்கு உதவ வேண்டும், ஞானம் பெற வேண்டும், பிறவிப் பிணித் தீர வேண்டும் என்ற வேட்கையுடன் ஸ்ரீத்ருஷ்ணாலட்சுமியைத் துதித்து நலம் அடையலாம்.

13. ஸ்ரீசாந்தலட்சுமி:- பொறுமை கடலினும் பெரிது. பொறுத்தார் பூமியை ஆள்வார். பொறுமையுடனிருந்தால் சாந்தலட்சுமியின் அருள் கிடைக்கும்.

14. ஸ்ரீகிருத்திலட்சுமி:- நாம் செய்யும் ஒவ்வொரு செயலையும், மனதை ஒரு நிலைப்படுத்தி நேர்த்தியுடன் செய்தால், புகழ் தானாக வரும். மேலும் ஸ்ரீகீர்த்தி லட்சுமியின் அருள் நிச்சயம் கிடைக்கும்.

15. ஸ்ரீவிஜயலட்சுமி:- விடாத முயற்சியும் உழைப்பும், நம்பிக்கையும் இருந்தால் நமக்கு எல்லா காரியங்களிலும் வெற்றி தான். ஸ்ரீவிஜயலட்சுமி எப்பொழுதும் நம்முடன் இருப்பாள்.

16. ஸ்ரீஆரோக்கிய லட்சுமி:- நாம் நம் உடல் ஆரோக்கியத்தை கவனித்தால் மட்டும் போதாது, உள்ளமும் ஆரோக்கியமாக இருக்க வேண்டும், கோபம், பொறுமை, காமம், பேராசை போன்ற நோய்க் கிருமிகள் நம் மனதில் புகுந்து விடாமல் இருக்க ஸ்ரீஆரோக்கிய லட்சுமியை வணங்க வேண்டும்.

துயரம் நீக்கும் துர்க்கை வழிபாடு கஷ்டங்கள் நீக்க துர்க்கை வழிபாடு செய்து துயரங்கள் நீங்குவதில் முதன்மையானது, துர்க்கை அம்மன் வழிபாடு.என்பதை உணர்வோம்

துன்பம் போக்கும் துர்க்கை அம்மன் 108 போற்றி


ஓம் அகிலாண்ட நாயகியே போற்றி
ஓம் அஷ்டமி நாயகியே போற்றி
ஓம் அபயம் தருபவளே போற்றி
ஓம் அசுரரை வென்றவளே போற்றி
ஓம் அன்பர்க்கு எளியவளே போற்றி
ஓம் அமரரைக் காப்பவளே போற்றி
ஓம் அறம் வளர்க்கும் தாயே போற்றி
ஓம் அருள்நிறை அன்னையே போற்றி
ஓம் அருளைப் பொழிபவளே போற்றி
ஓம் ஆதாரம் ஆனவளே போற்றி
ஓம் ஆலால சுந்தரியே போற்றி
ஓம் ஆதியின் பாதியே போற்றி
ஓம் இன்னருள் சுரப்பவளே போற்றி
ஓம் இணையில்லா நாயகியே போற்றி
ஓம் இல்லாமை ஒழிப்பாய் போற்றி
ஓம் இடபத்தோன் துணையே போற்றி
ஓம் ஈர மனத்தினளே போற்றி
ஓம் ஈடிணையற்றவளே போற்றி
ஓம் ஈஸ்வரன் துணையே போற்றி
ஓம் உக்ரரூபம் கொண்டவளே போற்றி
ஓம் உன்மத்தின் கரம் பிடித்தாய் போற்றி
ஓம் உள்ளொளியாய் ஒளிர்பவளே போற்றி
ஓம் ஊழ்வினை தீர்ப்பாய் போற்றி
ஓம் எண் கரம் கொண்டவளே போற்றி
ஓம் எலுமிச்சமாலை அணிபவளே போற்றி
ஓம் ஏழுலகும் வென்றவளே போற்றி
ஓம் ஏழ்மை அகற்றுபவளே போற்றி
ஓம் ஐங்கரன் அன்னையே போற்றி
ஓம் ஒளிமணி தீபத்தாயே போற்றி
ஓம் ஓங்கார சுந்தரியே போற்றி
ஓம் கற்பனை கடந்த கற்பகமே போற்றி
ஓம் கவலையைத் தீர்ப்பவளே போற்றி
ஓம் காருண்ய மனம் படைத்தவளே போற்றி
ஓம் காளியே நீலியே போற்றி
ஓம் காபாலியை மணந்தவளே போற்றி
ஓம் காவல் நிற்கும் கன்னியே போற்றி
ஓம் கிரிராஜன் மகளே போற்றி
ஓம் கிருஷ்ண சகோதரியே போற்றி
ஓம் குமரனைப் பெற்றவளே போற்றி
ஓம் குறுநகை கொண்டவளே போற்றி
ஓம் குங்கும நாயகியே போற்றி
ஓம் குலம் விளங்கச் செய்தவளே போற்றி
ஓம் கிரியா சக்தி நாயகியே போற்றி
ஓம் கோள்களை வென்றவளே போற்றி
ஓம் சண்டிகேஸ்வரியே தாயே போற்றி
ஓம் சர்வ சக்தி படைத்தவளே போற்றி
ஓம் சந்தனத்தில் குளிப்பவளே போற்றி
ஓம் சர்வ அலங்காரப் பிரியையே போற்றி
ஓம் சாமுண்டி ஈஸ்வரியே போற்றி
ஓம் சங்கரன் துணைவியே போற்றி
ஓம் சங்கடம் தீர்ப்பவளே போற்றி
ஓம் சிவன்கரம் பிடித்தவளே போற்றி
ஓம் சிங்கார வல்லியே போற்றி
ஓம் சிம்மவாகனநாயகியே போற்றி
ஓம் சியாமள நிறத்தாளே போற்றி
ஓம் சித்தி அளிப்பவளே போற்றி
ஓம் செவ்வண்ணப் பிரியையே போற்றி
ஓம் ஜெய ஜெய துர்கா தேவியே போற்றி
ஓம் ஜோதி சொரூபமானவளே போற்றி
ஓம் ஞானம் அருளும் செல்வியே போற்றி
ஓம் ஞானக்கனல் கொண்டவளே போற்றி
ஓம் ஞாலம் காக்கும் நாயகியே போற்றி
ஓம் தயாபரியே தாயே போற்றி
ஓம் திருவெலாம் தருவாய் போற்றி
ஓம் திரிபுர சுந்தரியே போற்றி
ஓம் தீமையை அழிப்பாய் போற்றி
ஓம் துஷ்ட நிக்ரஹம் செய்பவளே போற்றி
ஓம் துர்கா பரமேஸ்வரியே போற்றி
ஓம் நன்மை அருள்பவளே போற்றி
ஓம் நவசக்தி நாயகியே போற்றி
ஓம் நவகோணத்தில் உறைபவளே போற்றி
ஓம் நிமலையே விமலையே போற்றி
ஓம் நிலாப்பிறை சூடியவளே போற்றி
ஓம் நிறைசெல்வம் தருவாய் போற்றி
ஓம் நின்னடி பணிந்தோம் போற்றி
ஓம் பக்தர்க்கு அருள்பவளே போற்றி
ஓம் பரமானந்தப் பெருக்கே போற்றி
ஓம் பயிரவியே தாயே போற்றி
ஓம் பயத்தைப் போக்குபவளே போற்றி
ஓம் பயங்கரி சங்கரியே போற்றி
ஓம் பார்வதிதேவியே போற்றி
ஓம் புவனம் படைத்தவளே போற்றி
ஓம் புண்ணியம் மிக்கவளே போற்றி
ஓம் பூவண்ணன் தங்கையே போற்றி
ஓம் மகிஷாசுர மர்த்தினியே போற்றி
ஓம் மங்கல நாயகியே போற்றி
ஓம் மகேஸ்வரித் தாயே போற்றி
ஓம் மங்கையர்க்கரசியே போற்றி
ஓம் மகமாயித் தாயே போற்றி
ஓம் மாதர் தலைவியே போற்றி
ஓம் மாங்கல்யம் காப்பாய் போற்றி
ஓம் மாணிக்கவல்லியே போற்றி
ஓம் மாயோன் தங்கையே போற்றி
ஓம் முக்கண்ணி நாயகியே போற்றி
ஓம் முக்தியளிப்பவளே போற்றி
ஓம் முக்கண்ணன் தலைவியே போற்றி
ஓம் மூலப்பரம்பொருளே போற்றி
ஓம் மூவுலகம் ஆள்பவளே போற்றி
ஓம் யசோதை புத்திரியே போற்றி
ஓம் யமபயம் போக்குபவளே போற்றி
ஓம் ராகுகால துர்க்கையே போற்றி
ஓம் ரவுத்தரம் கொண்டவளே போற்றி
ஓம் வல்லமை மிக்கவளே போற்றி
ஓம் வாழ்வருளும் அம்மையே போற்றி
ஓம் விஷ்ணு துர்க்கையே போற்றி
ஓம் வீர நெஞ்சத்தவளே போற்றி
ஓம் வைஷ்ணவித்தாயே போற்றி
ஓம் வையகம் வாழ்விப்பாய் போற்றி.

முனைவர்
-பாலசந்தர்
மண்ணச்சநல்லூர்

## தினம் ஒரு தலைவர்கள்

# சுரய்யா தியாப்ஜி வரலாறு



சுரய்யா தியாப்ஜி (19191978) ஒரு இந்திய கலைஞர் ஆவார், அவர் அசோகரின் சிங்கத் தலைநகரிலிருந்து அசோக சக்கரத்தைச் சேர்த்து , 1931 ஆம் ஆண்டு இந்திய தேசிய காங்கிரஸின் கொடியில் இருந்த சர்க்காவை மாற்றியமைத்து தற்போதைய இந்திய தேசியக் கொடியை உருவாக்குவதில் உதவினார் .

வேலை

காவி, வெள்ளை மற்றும் பச்சை நிற மூவர்ணக் கொடி, மையத்தில் சுழலும் சக்கரம். கொடியின் பல்வேறு பயன்பாடுகளைக் காட்டும் கருப்பு மற்றும் வெள்ளை நிறத்தில் சிறிய வெக்ஸில்லாலஜிக்கல் சின்னம் அல்லது சித்திர வரைபடம்.1931 ஆம் ஆண்டு இந்திய தேசிய காங்கிரஸால் அதிகாரப்பூர்வமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஸ்வராஜ் கொடி .

இந்தியாவின் தற்போதைய தேசியக் கொடி

தற்போதைய இந்திய தேசியக் கொடியின் இறுதி வடிவத்தை பத்ருதீன் தியாப்ஜி வடிவமைத்ததாக வரலாற்றாசிரியர் ட்ரெவர் ராய்ல் தனது "தி லாஸ்ட் டேஸ் ஆஃப் தி ராஜ்" என்ற புத்தகத்தில் எழுதினார் . சுதந்திர தின இரவில் ஜவஹர்லால் நேருவின் காரில் பறந்த முதல் பிரதியை சுரையா தியாப்ஜி உருவாக்கினார் இந்திய வரலாற்றில் காணப்படும் முரண்பாடுகளில் ஒன்றின்படி, தேசியக் கொடியை வடிவமைத்தவர் பத்ரு-உத்-தின் தியாப்ஜி என்ற முஸ்லிம். முதலில் அந்தக் கொடியில் காந்தி பயன்படுத்திய சர்கா சின்னம் இருந்திருக்க வேண்டும். ஆனால் இது ஒரு கட்சி சின்னம், இது தவறான குறிப்பைத் தாக்கக்கூடும் என்று தியாப்ஜி நினைத்தார். பேரரசர் அசோகரை இந்துக்கள் மற்றும் முஸ்லிம்கள் இருவரும் போற்றியதால், காந்தி இந்த வசனத்திற்கு ஒப்புக்கொண்டார். அன்றிரவு நேருவின் காரில் பறந்த கொடி தியாப்ஜியின் மனைவியால் சிறப்பாக உருவாக்கப்பட்டது. "

அரசியலமைப்பு சபையின் கீழ் பல்வேறு குழுக்களின் உறுப்பினராகவும் பணியாற்றினார்.

சுரய்யா தியாப்ஜியின் மகள், சமூக சேவகி, வடிவமைப்பாளர் மற்றும் ஆர்வலர் லைலா தியாப்ஜி 2018 இல் தனது தாயார் மற்றும் தந்தை இருவரும் கொடி வடிவமைப்பில் ஈடுபட்டதாகவும், நேருவால் அவ்வாறு செய்ய நியமிக்கப்பட்டதாகவும், சிப்பாய், விஞ்ஞானி மற்றும் விரிவுரையாளர் பிங்கலி வெங்கய்யாவின் வடிவமைப்பின் வளர்ச்சியாக இருந்ததாகவும் எழுதினார் .

குடும்பம் மற்றும் வம்சாவளி

அவர் தியாப்ஜி குலத்தைச் சேர்ந்தவர் . அவர் 1937 முதல் 1941 வரை ஹைதராபாத்தின் பிரதமராகப் பணியாற்றிய சர் அக்பர் ஹைதாரியின் மருமகள் மற்றும் ஹைதராபாத்தில் முஸ்லிம் பெண்கள் கல்விக்காகப் பாடுபட்ட லேடி அமினா ஹைதாரியின் பேத்தி ஆவார். அவர் ஒரு அரசு ஊழியராகவும் பின்னர் அலிகார் முஸ்லிம் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகவும் இருந்த பத்ருதீன் தியாப்ஜியை மணந்தார் .

# மனைவியிடம் கேட்காமல் எதையும் செய்ய மாட்டேன்

சினிமாவில் பிரபல நடிகராக இருந்து வருபவர் கவுதம் ராம் கார்த்திக்.

அவரது நடிப்பில் வருகிற 17-ந்தேதி மிஸ்டர் எக்ஸ் படம் திரைக்கு வருகிறது.

மனு ஆனந்த் இயக்கியுள்ள இந்தப் படத்தில் ஆர்யா, கவுதம் ராம் கார்த்திக், சரத்குமார், மஞ்சு வாரியர் உள்பட பலர் நடித்துள்ளனர். அடுத்ததாக கவுதம் ராம் கார்த்திக் நடிப்பில் ரூட், லெகசி, ப்ளடி பாலிடிக்ஸ் போன்ற படங்கள் திரைக்கு வர இருக்கிறது.

இதை தொடர்ந்து கவுதம் ராம் கார்த்திக் அளித்த பேட்டியில் கூறியதாவது:-

Q : கவுதம் கார்த்திக் திடீரென கவுதம் ராம் கார்த்திக் ஆனது ஏன்?

A : என் பெயர் கவுதம். தாத்தா பெயர் முத்துராமனின் பெயரில் உள்ள ராம். அப்பா பெயர் கார்த்திக் அவ்வளவுதான்.

Q : மிஸ்டர் எக்ஸ் படத்தில் வில்லன் கதாபாத்திரத்தில் நடிப்பது பற்றி?

A : ஒரு விதத்தில் பார்த்தால் அது நெகட்டிவ் கேரக்டர். இன்னொரு விதத்தில் பார்த்தால் பாசிட்டிவ் கேரக்டர். பார்க்கிற பார்வையில் தான் இருக்கிறது. அவ்வளவுதான் என்னிடம் சொல்ல சொல்லி இருக்கிறார்கள்.

இந்த கதை கேட்கும்போது பாலிவுட் லெவலில் இருந்தது. இதுவரை எந்த படத்திலும் இது போன்று நான் கஷ்டப்பட்டு நடித்ததில்லை. உடல் அளவிலும் சவாலாக இருந்தது. படத்தின் படப்பிடிப்பு சென்னை, தூத்துக்குடி பகுதிகளில் நடந்தது. படத்தில் சரத்குமார் மற்றும் அனைவருடனும் எனக்கு காட்சிகள் இருந்தது. ஆனால் மஞ்சு வாரியரிடம் மட்டுமில்லை. அது எனக்கு வருத்தம் தான். அவரது ஸ்டைலே தனி. அந்த அளவுக்கு திறமையாக நடிக்கிறார்.

Q : மிஸ்டர் எக்ஸ் படத்தில் நடிக்கும் போது உங்களுக்கு காயம் ஏற்பட்டதாக சொல்லப்பட்டதே?

A : கழுத்தில் அடிபட்டது இரண்டு வாரத்தில் சரியாகி விட்டது.

Q : ஆக்சன் கதாபாத்திரங்களாகவே நடித்துக் கொண்டிருக்கிறீர்கள்? ரொமான்ஸ் படங்களே உங்கள் நடிப்பில் வரவில்லை. உங்களது ரசிகைகள் பலர் அதற்காக வருத்தப்படுவார்களே?

A : நீங்கள் கேட்கும் கேள்வியை நான் மனசுக்குள் கேட்டுக் கொண்டிருக்கிறேன். ஆக்சன், காமெடி, விரைவில் வரும் என எதிர்பார்க்கிறேன். ரொமான்ஸ் படங்கள் செய்ய ஆசை இருக்கிறது, பார்ப்போம்.

Q : ஏ.ஐ.தொழில் நுட்பத்தில் தாத்தா முத்துராமனுடன் நடிப்பதற்கு ஏதும் திட்டம் உள்ளதா?

A : தாத்தாவை நான் பார்த்ததில்லை. அப்பா படத்தையே நான் ரீமேக் செய்ததில்லை. ஏதாவது ஒரு தவறு நடந்து விடக்கூடாது. அதனால் அப்படிப்பட்ட திட்டம் இல்லை.

Q : அப்பா நடிப்பில் பிடித்த படம்?

A : உள்ளத்தை அள்ளித்தா, பிஸ்தா, கோகுலத்தில் சீதை, சோலைக்குயில் படங்கள் எனக்கு பிடிக்கும். அடிக்கடி பார்ப்பேன்.

Q : மனைவி மஞ்சிமா மோகன் பற்றி?

A : நல்ல வாழ்க்கை பார்ட்னர். எது செய்வது என்றாலும் அவரிடம் கேட்காமல் செய்ய மாட்டேன். அவரிடம் ஆலோசனை கேட்டு விட்டு தான் படத்தை ஒத்துக்கொள்வேன். நல்ல தம்பதிகளாக இருந்து வருகிறோம்.

Q : வாழ்க்கையில் பின்னடைவு ஏற்பட்டால் என்ன செய்வீர்கள்?

A : 5 நிமிடம் உட்கார்ந்து அழுவேன். அதற்கப்புறம் என் மனைவி மற்றும் என்னுடன் உள்ளவர்கள் வந்து ஊக்குவிப்பார்கள். பிறகு வழக்கம்போல் தெம்பாகி விடுவேன்.

Q: உங்களுக்கு பிடித்த பழக்கம்.

A : வண்டியை எடுத்துக் கொண்டு நீண்ட தூரம் பயணம் செய்வேன். பாண்டிச்சேரி வரை சென்று விட்டு திரும்ப வருவேன் என்றார்.





# 'காக்டெய்ல்-2' படத்தில் ராஷ்மிகா மந்தனா



ஷாகித் கபூர், கிருத்தி சனோன், ராஷ்மிகா மந்தனா நடிப்பில் உருவாகி உள்ள படம் 'காக்டெய்ல்-2'. வருகிற ஜூன் 19-ந்தேதி படம் திரைக்கு வருகிறது. இதையொட்டி ராஷ்மிகா மந்தனா 'காக்டெய்ல்-2' படப்பிடிப்பு தளத்தில் இருந்து சில புகைப்படங்களை பகிர்ந்துள்ளார்.

ராஷ்மிகா மந்தனா, ஷாகித் கபூர், கிருத்தி சனோன் ஆகியோரின் படங்கள் வெளியாகி சில மணி நேரங்களில் லட்சக்கணக்கான லைக்குகளை பெற்றுள்ளது. ஏற்கனவே படத்தின் முதல் தோற்றம் வெளியாகி வரவேற்பை பெற்றது.

காதல், நட்பு மற்றும் உறவு சிக்கல்களை பற்றி இந்த படம் பேசும் என எதிர்பார்க்கப்படுகிறது. திருமணத்திற்கு பிறகு ராஷ்மிகா நடிப்பில் வெளியாகும் இந்த படத்திற்கு ரசிகர்கள் மத்தியில் எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது.

# நடிகர்களின் வாகனங்களை இளைஞர்கள் பின்தொடரக் கூடாது- ரஜினிகாந்த்



இளம் நடிகை க்ரித்தி ஷெட்டிக்கு ஏராளமான ரசிகர்கள் இருக்கிறார்கள். அவர் தற்போது பிரதீப் ரங்கநாதன் ஜோடியாக LIK படத்தில் நடித்து இருக்கிறார். அந்த படம் வரும் ஏப்ரல் 10ம் தேதி திரைக்கு வருகிறது. அந்த படத்தின் ப்ரோமோஷன் நிகழ்ச்சிகளில் க்ரித்தி ஷெட்டி கலந்துகொன்டு வருகிறார். தற்போது க்ரித்தி ஷெட்டி அழகிய உடையில் கியூட் லுக்கில் இருக்கும் லேட்டஸ்ட் போட்டோஷூட் ஸ்டில்கள் இதோ.

கேள்வி: மூத்த நடிகராக இருந்து வருகிறீர்கள். இப்போதுள்ள இளைஞர்கள், நடிகர்கள் மீது ரொம்ப ஆர்வத்துடன் அவர்கள் செல்லும் வாகனத்தை பின் தொடர்கிறார்கள். நிறைய பேர் கீழே விழுந்து அடிப்பட்டு உயிரிழக்கும் நிலை ஏற்படுகிறது. ஒரு மூத்த நடிகராக இது போன்ற இளைஞர்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

ப: இளைஞர்கள் ரொம்ப ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். அவர்களுக்கு ஏதாவது அடிப்பட்டால் அவர்களுக்குதானே காயம் ஏற்படும். படிக்கிற வயதில் முதலில் படிப்பில் தான் கவனம் செலுத்த வேண்டும். அந்த நேரத்தை விட்டு விட்டால் அவர்கள் வாழ்க்கை முழுவதும் கஷ்டப்பட வேண்டிய நிலை ஏற்படும். படிப்பில் மட்டும் தான் அவர்களது சிந்தனை, செயல் இருக்க வேண்டும். முதலில் உடல்நிலை மற்றும் ஆரோக்கியத்தை பார்த்துக் கொள்ள வேண்டும். இளைஞர்கள் குடிப்பழக்கம் மற்றும் கஞ்சா பழக்கத்திற்கு அடிமையாகி விடக்கூடாது. இந்த பழக்கத்தினால் வாழ்க்கையே கெட்டு போய் விடும். அவர்கள் வாழ்க்கை மட்டுமல்ல அவர்களது தாய், தந்தை, குடும்பத்தினர் வாழ்க்கையும் நரகமாகி விடும். கெட்ட பழக்கம் உடைய நண்பர்களிடம் சேராமல் அவர்களை விட்டு தூரமாக இருக்க வேண்டும். ஜெயிலர் 2 படத்தின் படப்பிடிப்பு இன்னும் 2, 3 நாட்கள் நடைபெற இருக்கிறது. படத்தின் வெளியீட்டு தேதி பட தயாரிப்பு நிறுவனம்தான் வெளியிடும். நானும், கமல்ஹாசனும் இணைந்து நடிக்கும் படத்தின் படப்பிடிப்பு வருகிற ஆகஸ்டு மாதத்தில் தொடங்கும்.

இவ்வாறு அவர் கூறினார்.

# நாட்டை பாதுகாக்குறது நமது கடமை.



மனு ஆனந்த் இயக்கத்தில் ஆர்யா நடிப்பில் உருவாகி உள்ள படம் 'மிஸ்டர் எக்ஸ்' (Mr X). இப்படத்தின் படப்பிடிப்பு 2023-ம் ஆண்டு தொடங்கி 2024-ல் நிறைவடைந்தது. அதன்பின் பல சர்ச்சைகளையும், தாமதங்களையும் சந்தித்த இப்படம் இந்த மாதம் வெளியாகும் என படத்தயாரிப்பு நிறுவனம் போஸ்டர் வெளியிட்டு அறிவித்து இருந்தது.

இந்த நிலையில், 'மிஸ்டர் எக்ஸ்' படத்தின் டீசர் தற்போது வெளியாகி உள்ளது. டீசரில் ரகசிய ராணுவ வீரர்களான ஆர்யா, கௌதம் ராம் கார்த்திக் நாட்டின் பாதுகாப்புக்காக ரகசிய ஆபரேஷன் ஒன்றை மேற்கொள்ளும் கதையாக இப்படம் உருவாக்கப்பட்டுள்ளது. இதனை தொடர்ந்து 'மிஸ்டர் எக்ஸ்' படம் வருகிற 17-ந்தேதி உலகம் முழுவதும் உள்ள திரையரங்குகளில் வெளியாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரின்ஸ் பிக்சர்ஸ் தயாரித்துள்ள இப்படத்தில் மஞ்சு வாரியர், சரத்குமார் மற்றும் கௌதம் ராம் கார்த்திக் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். மேலும் அதுல்யா ரவி, ரைசா வில்சன், ஜெயபிரகாஷ், காளி வெங்கட் மற்றும் அனகா ஆகியோரும் நடித்துள்ளனர்.

மிஸ்டர் எக்ஸ் படத்தை அருள் வின்சென்ட் ஒளிப்பதிவு செய்ய, திபு நினன் தாமஸ் இசையமைக்க, பிரசன்னா ஜி.கே படத்தொகுப்பு மேற்கொண்டுள்ளார்.



சன்டிவியின் எதிர்நீச்சல் தொடர்கிறது சீரியலில் ஹீரோயினாக நடித்து வருபவர் பார்வதி. சின்னத்திரையில் நல்ல டிஆர்பி ரேட்டிங் பெறும் தொடராக தற்போது அந்த சீரியல் இருந்து வருவது குறிப்பிடத்தக்கது. அந்த அளவுக்கு பரபரப்பாக அந்த சீரியல் கதை சென்றுகொண்டிருக்கிறது. தற்போது நடிகை பார்வதி ஸ்லீவ்லெஸ் சேலையில் அழகிய போஸ் கொடுத்து இருக்கும் லேட்டஸ்ட் போட்டோஷூட் புகைப்படங்கள் ரசிகர்களை கவர்ந்து வருகிறது.

# 'கர' படத்தின் 'கண்ணம்மா என் கண்ணம்மா' பாடல் வெளியானது!

நடிகர் தனுஷ் நடிப்பில் கடைசியாக வெளியான படம் 'தேரே இஷ்க் மே'. இந்தியில் எடுக்கப்பட்ட இப்படம் தமிழில் வரவேற்பைப் பெறவில்லை என்றாலும், இந்தியில் ரூ.160 கோடிக்கும் அதிகமாக வசூலித்து வெற்றிப் படமானது. தற்போது, தனுஷ், போர் தொழில் இயக்குநர் விக்னேஷ் ராஜா இயக்கத்தில் நடித்து முடித்துள்ளார்.

இந்தப் படத்தின் நாயகியாக மமிதா பைஜுவும், முக்கிய கதாபாத்திரங்களில் நடிகர்கள் சுராஜ் வெஞ்சரமூடு, ஜெயராம் ஆகியோர் நடித்துள்ளனர். 'கர' எனப் பெயரிடப்பட்டுள்ள இந்தப் படத்திற்கு ஜி.வி. பிரகாஷ் குமார் இசையமைக்க தேனி ஈஸ்வர் ஒளிப்பதிவு செய்துள்ளார். இந்தப் படத்தை வேல்ஸ் ஃபிலிம் இன்டர்நேஷனல் சார்பில் ஐசரி கணேஷ் தயாரித்துள்ளார். இந்தப் படம் வருகிற 30-ந்தேதி வெளியாகவுள்ளது.

இதனிடையே, 'கர' படத்தில் நடித்துள்ள நடிகர்களின் கதாபாத்திரம் குறித்த போஸ்டரை படக்குழு வெளியிட்டுள்ளது. அந்த வகையில் நடிகர் ஜெயராம் 'முத்து செல்வன்' என்ற கதாபாத்திரத்திலும் 'செல்லி' கதாபாத்திரத்தில் மமிதா பைஜுவும், 'பரதன்' கதாபாத்திரத்தில் சுராஜ் வெஞ்சரமூடு நடித்துள்ளதாக படக்குழு போஸ்டர் வெளியிட்டு இருந்தது.



இந்த நிலையில், 'கர' படத்தின் 2-வது சிங்கிளான 'கண்ணம்மா என் கண்ணம்மா' பாடல் வெளியாகி உள்ளது. இப்பாடலை ஜி.வி.பிரகாஷ் இசையில் தனுஷ் பாடியுள்ள காதல் பாடலாகும்.

முன்னதாக 'கர' படத்தின் முதல் பாடலான 'வாயா என் கரசாமி' பாடல் வெளியாகி ரசிகர்களின் கவனத்தை பெற்றது குறிப்பிடத்தக்கது.


Happy Birthday
R.M.THEGAZHNI


! WANTED !
Muslim Lady
Accounts Assistant
Qualification: B.Com / Tally Knowledge Required
Company: Perfume Manufacturing Company
Location: Chrompet
Contact: 99401 46318


WANTED
Needed female staff
to look after
children, patients.
Contact
9150989424


Happy Birthday
R.SWARNALAKSHMI


WANTED
Retd, VRS, Home Makers,
NRIs, Business Person
Contact
8248951872


WANTED
Site Supervisor required
for construction work in Ambattur
Contact:
8428872887


keerthi foundation
De Addiction Cum Rehabilitation Centre
INTERNSHIP & JOB OPPORTUNITIES
MSW & M.Sc Psychology - Freshers
Internship:
Clinical Training
Counseling Practice
Case Work
Jobs:
Social Worker
Jr Psychologist
Rehab Counselor
Build Your Career in De-Addiction & Mental Health Care
Call: 9841945060 | 7845027710
www.keerthifoundation.com


சம்பிரதாய தாம்பூல பாக்கு!
பூஜைக்கு உகந்த பாக்கு
AJANTHA
TRADITIONAL THAMBULA BETEL NUTS
அஜந்தா
பாக்கு
சம்பிரதாய தாம்பூல பாக்கு
అజంతా
వక్క పలుకులు
அனைவருக்கும்
தீபாவளி
நல்வாழ்த்துகள்!
அஜந்தா
பாக்குடன்
உங்கள்
தீபாவளியை
கொண்டாடுங்கள்!
RAVIKUMAR AND COMPANY
21, North Mada Street, Villivakkam, Chennai - 600 049
PH: 044 26171341 | email: ajanthasupari@hotmail.com


TAMIL
TELECALLER
JOB FOR
WORK FROM HOME
ALL OVER TAMILNADU
APPLY NOW
7789951009
PRINT MEDIA, DIGITAL MEDIA
SOCIAL MEDIA
DAILY & MONTHLY SALARY
SALARY STARING FROM
Rs. 10000/- onwards
Whatsapp: 7789951009


Wanted
REPORTERS
சட்டமன்ற தொகுதி வாரியாக
நிருபர்கள் தேவை
PRESS
PRGI No. TNBIL/25/A1564
பேப்பர்பாய்
8122664699


தனியார் வாகன உதிரிபாகங்கள்
உற்பத்தி செய்யும் நிறுவனத்தில்
பணிபுரிய ஆட்கள் தேவை.
Quality Line Inspector
Fresher/Exp Male Only
Qualification - ITI/Diploma/B.E
Final Quality Inspector
Fresher / Exp - Male/Female
Qualification: 10th/ 12th/ ITI
VMC Machine operator
Fresher/ EXP Male only
Qualif: 10th/12th/ITI/Diploma
Mr Prakesh : 8939 940 090
Mr.Neelavanan : 9884 001 253
SALARY BASED ON EXPERIENCE


அனைத்து பிரிவினருக்கும்
என் துணை
திருமண தகவல் மையம்
உங்கள் மணமகனை/
மணப்பெண்ணைப்
பதிவு செய்யவும்.
www.enthunai.com
support@enthunai.com
7871617005
7789941009


அருள்மிகு ஸ்ரீ மாலையம்மன் சமேத அருள்மிகு சுப்பிரமணியர் துணை
அருள்மிகு திருச்செந்தூர் முருகர் துணை
ஸ்ரீ ஹரி
ஜோதிட மையம்
ராசி
ஜாதகம், திருமணப் பொருத்தம், ஜாமக்கோள், ஆரூடம் பார்க்கப்படும்.
தாம்பூல பிரசன்னம், சோழி பிரசன்னம், அஷ்ட மங்கல பிரசன்னம்
மேலும் திருமணம், புத்திர பாக்கியம், கல்வி, தொழில் ஆகியவற்றில்
ஏற்பட்ட தடைகளுக்கு ஜோதிடரீதியான தீர்வு செய்யப்படும்.
ஜோதிட நிபுணர் இராஜபாளையம்
இராமமூர்த்தி MA Astro
81899 08040 / 93425 03572
harisudhan1968@gmail.com




## தோழியே நீ வாழியவே

எங்கிருந்தோ~உன்
குரலோசை
பண்பலைப்பாடலாய்~என்
செவிகளில்
தேனாய்பாயும்போது
மலைத்தேன் மணம்வீசி~என்
மனம் நிறைகிறது,,,

ஏற்பது இகழ்ச்சியென
இலக்கியம் சொன்னாலும்
உன் குரலை ஏற்பது
மகிழ்ச்சியாகவே
இருக்கிறது,,,,

தெளிவான உச்சரிப்பில்
அளவான அழகிய தமிழ்
நடையோடு நிறுத்தி,,,
நிதானமாக நீ பேசும்
மொழிநடை எல்லோராலும்
எளிதில் கற்றுக்கொள்ள
முடியாதுயெனவே
தோனுகிறது,,,

நீ பேசிக்கொண்டேயிரு
நான் கேட்டுக்
கொண்டேயிருக்கிறேன்
இடைவெளியில்லாத
நட்பில்
சில விசயங்களுக்கு
தடைப்போட்டப்படி,,,
நான் உன்னைவிட
வயதில் மூத்தவனென்றாலும்
அவ்வப்போது
தெளிவுரையோடு
நீ சொல்லும் அறிவுரையும்
எனக்கு பிடித்திருக்கிறது
சில நேரம் என்னை
திட்டுவதையும்
ஏற்றுக்கொள்கிறேன்,,,
மக்கு மாணவனை
ஆசிரியர் அடிக்கதானே
செய்வாரென,,,

இறைவன் எனக்கு எதையுமே
கொடுக்கவில்லையென
கோபித்திருக்கிறேன்,,,,
உன்னைப்போல ஒரு
உயர்ந்தவரை~ எனக்கு
தோழியாய்
கொடுத்திருப்பதைவிட
வேறுஎதை எனக்கு
உயர்வாய் கொடுத்து
விடமுடியும்
இறைவனால்,,,

தோழியே நீவாழியவே,,,!



**நாகை ஆசைத்தம்பி**
கோவை

---

1. கண்களை விட
கண்ணீருக்கு மதிப்பு அதிகம்
ஏனென்றால்
கண்கள் உலகத்தை காட்டும்
கண்ணீர் உலகத்தை காட்டும்

2. காத்திருந்தால் எல்லாம்
கிடைக்கும் என்றார்கள்
எனக்கு காத்திருப்பதை
தவிர வேறு ஒன்றும்
கிடைக்கவில்லை

3. தோற்றவன் பின்னால்
செல்லுங்கள் நிறைய
கற்றுக் கொடுப்பான்
வெற்றி பெற்றவன்
பின்னால் சென்றால்
உன் தவறை காட்டிக்
கொடுப்பான்

4. வீட்டில் வயதானவர்கள்
பார்த்து எரிந்து விழா தீர்கள்
வயதானவர்கள் இன்னும் சில
ஆண்டுகள் தான் நம்மோடு
இருப்பார்கள்

5. கோடாரி வலுவானது
ஆனால் அதைக்கொண்டு
முடியை வெட்ட முடியாது
பிளேடு கூர்மையானது
அதைக் கொண்டு மரத்தை
வெட்ட முடியாது
எல்லோருக்கும்
ஒரே திறமை
இருக்காது ஆனால்
அனைவருக்கும்
ஏதாவது ஒரு திறமை
இருக்கும்



**நடேஷ் கன்னா**

---

உயிர்ப்பைத் தேடித்
தவிக்கிற ஒரு விஷயம்
தவிர்க்க முடியாததாகத்தான்
போகிறது


கண்களில் காணும்
கனவுகளை
உயிர்ப்பித்துத்தரவே
ஆசையுறுகிறது
உயிர் பித்து கொண்டோர்
இதயதளம்

ஆயினும்..
அடங்காத நீளிரவுகளில்
அடங்கிப் போகும்
பெருமூச்சுகளுக்குள்
அவற்றைச் சேமித்து
வைக்கிறது
புத்தி கை
காட்டிய
இடத்தில்
இதயம் !



**கீதா கண்ணன்**
ஸ்ரீரங்கம்

---



## வீடு பேரின்பம்

வீடென்பது ; சிலருக்கு
ஆலமரத்தடி, சிலருக்கு
பாலத்தின் அடி, சிலருக்கு
ஓலை குடிசை, சிலருக்கு
ஒற்றை அறை மட்டும்,
சிலருக்கு அடுக்கு மாடி
குடியிருப்பு; இன்னும்
சிலருக்கு விசால மாளிகை

கூடி இன்புறும்
கூடெல்லாம் வீடே கூடாக
இருப்பதெல்லாம்
கூண்டாக போவதின்
அவலம் தவிர்ப்பது ;
அன்பின் பாற்பட்டதென்றி
வேறெதனாலுமாகா. ஆக
வீடு
பேரின்பம்
ஆகட்டும்
வீடு பெரும்
துன்பம்
ஆகாமல் பார்



**சசிகலா விஸ்வநாதன்**

---

## வஞ்சம் ஒரு நஞ்சு

உள்ளத்தில் நஞ்சு சுமந்து
புன்னகையில் வஞ்சகம்
மறைப்பார்!

அன்பெனும் போர்வையில்
ஆழமாய் குழி –பறிப்பார்!

நேசம் விலகிப் போகும்
நிம்மதி அழிந்து போகும்!

பழிவாங்கும் எண்ணம்
கொண்டால்
பண்பும் எரிந்து போகும்!

வஞ்சகத்தின் நிழலில் வளரும்
உறவு விஷம் கலந்த தேன்
போன்றது!

உன் முன்புறம் போற்றும்
வார்த்தைகள் யாவும்
முதுகின் பின்னே
கத்தியாகும்!

மன்னிக்க தெரிந்த மனமே
மழையாகும்!

வஞ்சம் சுமக்கும் இதயம்
தானாகவே சாம்பலாய் கருகி
போகும்!

நெஞ்சில் சுமக்கும்
வஞ்சம் ஒரு நிழல்
இல்லா தீயாகும்!

பழிவாங்கு எண்ணம்
உன்னை
மெல்ல தின்னும் நோயாகும்!

விதைத்த வினையைஅறுக்க
எண்ணி விஷத்தை உள்ளே
வளர்க்காதே!

சுட்டு கரியாக்கும்
வஞ்சனையைச்
சொந்த மனதிற்கு
நினைக்காதே!

மன்னிக்க கற்றுக்
கொண்டால் மறையும்
மனதின் பாரங்கள்!
மன்னித்தல் எனும் பண்பானது
மனதின் அழுக்கை முழுதாய்
துடைக்கும்!

மண்ணில் விழுந்த
விதையாவது மறுபடியும்
மரமாய் உயிர் கொடுக்க!

எதிர் நின்று பகைவனை
ஈரத்தால் வெல்!

உன் எஞ்சிய காலத்தை
அமைதியாய் சொல்!

அன்பால் வெல்வதே
வாழ்விலே அழகிய
உயர்ந்த பாடங்கள்!

மறப்போம் வஞ்சம்
வளர்ப்போம் அமைதி!



**பெ.திருமுகம்**
மணமேல்குடி

---

## கொஞ்சம் ஹைக்கூ.. போர்கள்.,

பலரையும் கொன்று வீடுவந்து
உங்கள் கொஞ்சலில்
அன்பிருக்கும்
இரத்த வாடையுடன்.

(2) மண்ணோடு மண்ணாய்
விழுவதை ரசியுங்கள்
நீங்களும் ரசிக்கப்படுவீர்கள்.

(3) உயிர் குடிக்கவே போர்
ஒருபோதும் இல்லை
உணர்விற்கு.

(4) ஏதேனும் ஒரு பிணத்தில்
உங்கள் பிள்ளையின்
சாயல் தெரியும்.

(5) கொன்ற உயிர்கள்
விசுவாசத் தொண்டன்று
வினையின் நரகம்.

(6) நன்றாகச் சண்டை
போடுங்கள் நிறைய
கிடைக்கும்
சாபமும் குருதியும்.

(7) உறக்கமின்றிப் போர்
ஓய்ந்துவிடும் இல்லாமல்
போகும் இனி உங்கள்
உறக்கம்.

(8) குத்தப்படும் மெடல்கள்
நீங்கள் கொன்ற உயிர்களின்
சவப்பெட்டி மூடிகள்.

(9) வாழவிடாமல் இலட்சம்
பேர்களைக் கொன்று நீங்கள்
என்ன வாழ்வீர்கள்?

(10) புண்ணிய
பூமியிலிருந்து
வேண்டுகிறோம்
நிறுத்துங்கள்
வேண்டாம் நரகம்.



**ஹரணி** தஞ்சாவூர்

---

## எழுத்திறையை ஏத்துவோமே

பலநூல்கள் படிப்பதாலே அறிவுவாரா
படிப்பதினை மனத்திற்குள் பதிக்க வேண்டும்
புலம்தன்னில் போட்டதெல்லாம் விளைந்திடாது
புடம்போட்ட நல்விதையே முளையைக் காட்டும்
நிலம்விளையும் நெல்லுக்குள் பதரைப்போல
நிறைந்திருக்கம் நூல்களுள்ளும் பதர்கள் உண்டு
நலம்பயக்கும் நூல்களினைக் கற்கும் போதே
நம்மிலுள்ள அறியாமை விலகிப் போகும் !

கல்வியிங்கே அறிவைமட்டும் வளர்ப்பதன்று
கற்பதிங்கே கருத்தைமட்டும் விளக்கலன்று
கல்வியிங்கே மனிதத்தை வளர்ப்பதோடு
கருத்தாகப் பண்பினையும் வளர்க்க வேண்டும்
நல்லமனம் பெறுபவராய்ப் பண்படுத்தி
நன்மைகளைச் செய்பவராய் மாற்ற வேண்டும்
எல்லோரும் உறவென்றே அன்பு காட்ட
எழுத்தோடு பண்பாட்டை ஊட்ட வேண்டும் !

அறத்தோடு கூடியகூர் அறிவைத் தந்தும்
அதர்மத்தை எதிர்க்கின்ற துணிவைத்தந்தும்
புறவொழுக்கம் அகவொழுக்கம் கற்றுத்தந்தும்
புலனடக்கிச் சிந்திக்கும் ஆற்றல் தந்தும்
குறள்சொல்லும வாழ்வியலில் நாளும் வாழக்
குறுமனத்தை விரிவுசெய்யும் கல்வயாகச்
சிறப்பாக நடத்துகின்ற ஆசான் தம்மைச்
சிரம்தாழ்த்தி வணங்கிடுவோம் இறையாய் நாமே !



**பாவலர் கருமலைத்தமிழாழன்**

---

## நிமிர்தலே நுட்பம்...

எல்லாம் முடியும் என்பவனே...
என்னினிய இளைஞனே!
நேர் கொண்ட பார்வையில்
நெளிவு சுளிவுக்கு
அவசியம் இல்லை
சராசரிக் குடுவையில்
சமரசமாகிச் சரிந்து
அந்தஸ்து இழக்கும்
அவஸ்தையும் இல்லை...
நேர்மைக் களத்தில்
நின்றால் தான்
நெஞ்சம் நிமிர்த்தி
நேர்த்தி காட்ட முடியும்
அட்சரம் பிசகாத
ஐம்பூதத் தொகுப்பாம்
உடலியல் கருத்தின்
உட்பொருளும் இதனுள்
அடங்கும்... முதன்மை
உறுப்புப் பட்டியலில்
முதல் ஐந்து இடத்தில்
முத்தாய்ப்பாய்த் திகழும்
முதுகெலும்புக்கும்
முழுமையாய் இது மாசின்றி
பொருந்தும்..
முதுகெலும்பு என்பது
வெறும் பின்புறச் சுவர்
தானே என்றெண்ணி
பின்தள்ளி விடாதே...
நீடித்த வாழ்வுக்கும்
நிம்மதி நலனுக்கும்
நேரடியாய் வழி நடத்தி
ஒளி காட்டும் நீண்ட
நெடுஞ்சாலை அது...
அதனால் தான்
உட்காரும் போதே
உறுதியாய் நிமிர்ந்து
உயரம் கூட்டுவதே
தியானத்தின் முதல்படி
என்றார் முத்தான நம்
முன்னோர்... சாய்வு
என்பது சரிவின்
அடையாளம்
தாழ்வும் தவிப்பும்
தழைக்கும் அதனால்...
இயற்கை என்னும்
அறிவியல் அன்னைக்கு
இரக்கம் என்பது
இம்மியளவும் கிடையாது
காண்... இந்தக் கறார்க்குண
சூத்திரத்தால் தான்
கோடிக் கோடி ஆண்டுகள்
கழிந்தும் யூகிக்கவே முடியாத
யுகங்கள் தாண்டியும்
பிரபஞ்சம் இங்கே
பிரளயம் இல்லாமல்
பிழைத்து வருகிறது...
ஆகவே இளைஞனே!
அசைக்க முடியாத
அறிவியலை அலட்சியப்
படுத்தாமல் ஆறறிவால்
போற்று... கிளர்ந்தெழும்
காமத்தையும் கடும்பகை
காட்டாமல்கனிவாய்
எதிர் கொள்ளும் வித்தக
வித்தையை வெறுப்பாய்
இல்லாமல் விருப்பாய்
வசமாக்கு அமுதமாய்
பொழியும் அதிசயம்
அரங்கேறும் வேர்களை
வீணடித்து கிளைகளுக்கு
வண்ணம் பூசும் வக்கிரத்தை
வாழ்வே போனாலும்
விலை கொடுத்து ஆற்றாதே!
உன் உன்னத உள்ளுக்குள்
வைரச் சுரங்கம்
வற்றாத ஊற்றாய்
வளம் வளமாய் மண்டிக்
கிடக்கும் போது
மணல் கல்லுக்காய்
மன்றாடி மாண்பை
இழக்கலாமோ நீ?



**நெல்லை குரலோன்**
பொட்டல் புதூர்

---



## அன்னையின் கரங்கள்.!

சேர்த்து எடுத்த கரம்
சுமைகளைச் சுமந்த கரம்..
சுடர் ஏற்றும் கரம் நமது
அன்னையின் கரங்கள்.!

பார்த்து வளர்த்த கரம்..
பாலூட்டி அணைத்தக் கரம்..
பசி போக்கியக் கரம்.. நமது
பாசமிகு அன்னையின்
கரங்கள்.!

கோர்த்து மணி மாலையன..
குடும்பத்தை சேர்த்த கரம்..
செங்கதிரை மிஞ்சும்
கரம் நமது அன்னையின்
கரங்கள்.!

நீர்த்துப் போகாத
நினைவுகளின் சொந்தக்
கரம்.. ஆர்த்துயெழ
அழைத்த கரம்..அன்பின் கரம்..நமது அன்னையின் கரங்கள்!

பாட்டெடுத்துத் தந்தக் கரம்.. பத்துமாதம் சுமந்து ஈன்றெடுத்தக்
கரம்.. ஈடில்லா இமையக் கரம் நம்மை நலமாக பெற்றவளின்
தெய்வக் கரங்கள்!

ஏட்டுக்குள் அடங்காத இரக்கத்தின் அன்புக்கரம்..
பாட்டுக்குள் தாலாட்டாய் பைந்தமிழை பாலாய் ஊட்டும் கரம்..
காட்டுகவே இதைவிட கருணை மிகுக் கரம் உண்டோ?
அன்னையின் கரங்கள்!

வீட்டுக்கு விளக்கேற்றே விடிகாலை கோலமிட்டு
கூட்டிப் பெருக்கும் கரம் குலம் காக்கும் அன்னைகரம்..
காட்டு வழியினிலே சென்றாலும் திசைக் காட்டும் கரம்..
பாசமிகு அன்னையின் கரங்கள்

நாட்டுக்கும் வீட்டுக்கும் நமது உயிர் தோற்றத்தின்
தொட்டிலுக்குச் சொந்தக் கரம்.. தெவிட்டாத
தாய்மொழியை ஊட்டும் கரம் . உலகிலே நம்
அன்னையின் கரங்கள்.!




**வே.கல்யாண்குமார்.!**

---

# நூல் விமர்சனம்

நூல்:பார்த்தேன்... படித்தேன்... ரசித்தேன்...
நூல் ஆசிரியர் : பேராசிரியர் முனைவர் கு.ஞானசம்பந்தன்
நூல் மதிப்புரை : கவிஞர் இரா.இரவி
வெளியீடு : அமுதம் பதிப்பகம், 155, டெபுடி கலெக்டர் காலனி, 3வது தெரு, கே.கே. நகர், மதுரை–625 020
பக்கங்கள் 48,
விலை ரூ. 60






நூலாசிரியர் பேராசிரியர் முனைவர் கு. ஞானசம்பந்தன் ஐயா அவர்கள் என்னுரையில் எழுதியுள்ளதைப் படித்து வியந்தேன். “வழக்கமாக என்னைச் செவ்வி (பேட்டி) காண்போர் நீங்கள் பேச்சாளராக வராமல் போயிருந்தால் என்னவாகி இருப்பீர்கள் என்று கேட்பார்கள், அப்போதெல்லாம் நான் மகிழ்ச்சி பொங்க எழுத்தாளராகவோ, நூலகராகவோ ஆகியிருப்பேன் என்று கூறுவேன்”

ஆம், கலைமாமணி கு, ஞானசம்பந்தன் ஐயா முதலில் எழுத்தாளர், பிறகுதான் பேச்சாளர். கலைஓசை என்ற கையெழுத்துப் பிரதி நடத்தி உள்ளார். தீந்தமிழ் தியாகராசர் கல்லூரியில் செய்தி மடல் என்ற பத்திரிக்கைக்கும் ஆண்டுமலருக்கும் எட்டாண்டுகளாக பொறுப் பாசிரியராக இருந்திருக்கிறார். மதுரை நகைச்சுவை மன்றத்தின் சிரிப்பு மின்னிதழுக்கு ஆசிரியராக உள்ளார். தியாகராசர் கல்லூரியில் படித்தபோது பாஞ்சாலி சபதம் நாடகத்தை வசன வடிவில் மாற்றி, சகுனியாக நடித்து அரங்கேற்றம் செய்துள்ளார். இப்படி எழுத்து அனுபவம் பல உள்ளவர் தான் ஐயா அவர்கள். இந்த நூலில் படித்ததையும் பார்த்ததையும் ஒப்பிட்டு ரசித்தவற்றை பயணக்கட்டுரை போல சுவையாகவும் எளிமையாகவும் வடித்து உள்ளார்கள்.

வழக்கம்போல் இந்த நூலிலும் குடும்ப உறுப்பினர்கள் அனைவரின் பெயர் எழுதி, வாழ்த்தையும் நன்றியையும் மறக்காமல் பதிவு செய்துள்ளார்கள். குடும்பத்தினரை ஊக்கப்படுத்தும் பண்பாகவே இதனைக் காண்கிறேன். நானும் ஐயாவிடமிருந்து குடும்பத்தாரை பெருமைப்படுத்த வேண்டும் என்பதைக் கற்றுக்கொண்டேன்.

இராமேஸ்வரம் மண்டபம் இடையில் உள்ள நல்லதண்ணீர் தீவுக் கூட்டத்திற்கு மோட்டார் படகினில் சென்று இருக்கிறார். நீருக்கடியில் வட்டமான சூரியகாந்தி பூப்போல நூடுல்ஸ் போன்ற இழைகளோடு காணப்படுகின்ற இந்தத் தாவரத்தின் பெயர் என்ன? என்று கேட்டுள்ளார். உடன் வந்தவர் சிரித்துவிட்டு (இராவணன் போல் சிரித்துவிட்டு) இது தாவரம் அல்ல, உயிரினம். சின்ன உயிரினம் பட்டாலும் உடனே உள்ளே இழுத்து அதைச் சாப்பிட்டுவிடும் என்றார். இப்படி ஒரு உயிரினமா? என வியந்து பார்த்து விட்டு, கம்ப இராமாயணத்தில் மாரீசன் வதை படலத்தை நினைத்துப் பார்த்து ஒப்பிட்டு வியந்து மிக அழகாக விளக்கி உள்ளார். கம்ப இராமாயணத்தை காட்சிப்படுத்தி வெற்றி பெற்றுள்ளார்.

புதுக்கோட்டை அருகில் உள்ள அரிமளம் ஊருக்கு சென்று கோடகநல்லூர் சுந்தரசுவாமிகளின் அதிட்டானம் (சமாதி நினைவிடம்) சென்று பார்த்து உள்ளார். ஐயா எந்த ஊருக்கு சென்றாலும் அங்குள்ள நூலகங்கள், வரலாற்று சிறப்புமிக்க இடங்கள் சென்று பார்ப்பது வழக்கம். சென்று பார்த்த இடங்களை படித்தவற்றோடு ஒப்பிட்டு ரசித்து கட்டுரைகள் வடித்துள்ளார்.

பத்துக் கட்டுரைகள் முத்தாய்ப்பாக உள்ளன. சிறிய கட்டுரைகளாக இருப்பதால் உடன் படித்து விட முடியும். திருவண்ணாமலை கார்த்திகை தீபம் பார்த்து விட்டு, அதைப் பற்றியும் கட்டுரை உள்ளது. ஹரித்துவார் சென்று உள்ளார். அந்தப் பயணத்தையும் கட்டுரையாக்கி உள்ளார். பயணப்படுவதற்கு சலிப்பே இன்றி. பயணப்படுவது வழக்கம். அப்படி பயணப்படும் போது முக்கியமானவற்றை ரசித்து குறித்து, மனக்குறிப்பில் ஏற்றி வைத்து, பின்னர் வந்ததும் கட்டுரையாக்கும் ஆற்றல் கைவந்த கலையாக உள்ளது. ஐயா சென்று வந்த இடங்களுக்கு இந்த கட்டுரைகளை வாசித்து விட்டு மற்றவர்கள் சென்று ரசிக்கவும் உதவியாக உள்ளன.

சேலத்திற்கு அருகில் தாராமங்கலம் என்றொரு புகழ்பெற்ற ஊர் உள்ளது. அங்குள்ள கைலாசநாதர் கோயிலுக்கு சிற்பங்களைக் காண்பதற்காக ஒருமுறை சென்று வாருங்கள். பாடல்பெற்ற தலங்களில் ஒன்று. இப்படி பார்க்காததை சென்று பார்க்கும் ஆவலைத் தூண்டும் வண்ணம் எழுதி உள்ளார்.

மதுரை திருமலை நாயக்கர் மன்னர் அரண்மனை கட்டுவதற்கு மண்தோண்டிய தெப்பக்குளத்தில் கண்டு எடுக்கப்பட்டு, மதுரை மீனாட்சியம்மன் கோவிலில் வைக்கப்-பட்டுள்ள பிரமாண்ட பிள்ளையார் பற்றியும், வாதாபி கணபதி கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

இந்தோனேசிய தமிழ்ச்சங்கம் சென்றது பற்றி, அங்கிருந்தவர்கள் ஐயாவின் பிறந்தநாள் அக்டோபர் 19 என்பதைத் தெரிந்து கொண்டு கேக் வெட்ட ஏற்பாடு செய்துள்ளனர். அப்போது கலைஞானி கமலஹாசன் ஐயாவிற்கு வாழ்த்துச் சொல்ல அலைபேசியில் அழைத்துள்ளார். அப்படியே இந்தோனேசியா தமிழ்ச்சங்கத்தினருக்கும் வாழ்த்தை பகிர்ந்து உள்ளார். இதுபோன்ற நிகழ்வுகளும் கட்டுரையில் உள்ளன.

இந்தோனேசியாவில் உள்ள நமது சோழ மன்னன் கட்டிய கோவிலைச் சென்று பார்த்து, அதனையும் கட்டுரையாக வடித்துள்ளார். சோழ மன்னர்கள் ருத்திரனாகிய சிவனுக்கும் பிரம்மாவிற்கும் விஷ்ணுவிற்கும் இங்கே கோவில் கட்டி இருக்கிறார்கள். மன்னர்கள் வாழ்ந்த அரண்மனை அழிந்து விட்டாலும் அவர்கள் கட்டிய கோயில்கள் அழியாமல் இன்னும் உள்ளது வியப்பு. இப்படி நூலாசிரியர் கலைமாமணி பேராசிரியர் முனைவர் கு. ஞானசம்பந்தன் அவர்கள் சென்ற இடமெல்லாம் நம் கண்முன் எழுத்தால் காட்சிப்படுத்தி வெற்றி பெற்றுள்ளார்.








## இங்கே

அத்தனை அழகை
எத்திக்கிலும்
கொத்துக் கொத்தாகப்
படைத்தவன் எங்கே
ஒளிந்து கொண்டிருக்கிறான்
என்று தேடிப் பார்க்கிறேன்,
அகப்படவில்லை.

அயர்ந்துபோய் பூங்கா
நாற்காலியில் அமர்ந்தால்
பக்கத்தில் விளையாடும்
குழந்தையின் மழலையின்

புரியாத
பாஷையில்
சொல்கிறான்
இதோ,
இங்கே என்று.

**கே. பி. ஜனார்த்தனன்**

## ஊடலும் கூடலும்

பிரிஞ்சு கெடந்திருந்தாலும்
புருஷனின் ருசியறிவாள்
பிரிவெங்கனம் முடியும்
உறவெப்போது தழையும்
என்பதல்லவோ அவளின்
தவம் தன் அன்பை, காதலை
உண்ணும் உணவில்
சமைத்தளிப்பாள்;
உவகை மிகுதியால்
தன்னையும் சேர்த்தே
அளிப்பாள்!

**KMD. முத்துக்குமார்,**
மைசூர்.



## தேர்தல் காலம்

" பரிசுப் பொருட்களும்
இலவசமும் பணமும் காசும்
வேட்டி சேலை ..."

குவார்ட்டர் பிரியாணி
துண்டு சால்வை
மாலை மரியாதை .... "

கண்டதும் கும்பிடு
தனி விசாரிப்பு
நலம் கேட்பு விழாவிற்கு
வருகை தருவது .... "

காரணம் தேடி
போட்டி வைத்து
பரிசு கொடுப்பது ..."

சாலை ஒடுக்கு எடுப்பது
தெரு விளக்கு எரிய
வைத்தல் தண்ணீர் குழாய்
சரி செய்தல் ..."

சிறுவர் சிறுமியருக்கு
விளையாட்டு
பொருள் அளித்தல் ..."

மின் வெட்டு இல்லாமல்
சரிகட்டுதல் டீ குடித்தல்
டீ போடுதல் ... "

பஸ்ஸில் பயணம்
நடந்து மக்களை
சந்தித்தல்..."

வீதி உலா தொகுதி பக்கம்
முற்றுகை விடா முயற்சி ..."

தேர்தல் வரும் நேரம் காட்டும்
விளம்பர வித்தைகள்

கண்டுகளியுங்கள்
இலவச காட்சி
கட்டணம்
இல்லை ..."

**ஆர். சீதாராமன்**
சீர்காழி.

## தாவரம் போற்றி வாழ்.!

நிலமடந்தை தழுவுகிற
பச்சையாடை.! பசும்புற்கள்.

வளம் படர.. படர்ந்திருக்கும்
பைங்கொடிகள்..
முல்லைக் கொடி!

குளக்கரையில்
சூழ்ந்திருக்கும் மலர்ச்
செடிகள்..
மல்லிகைப் பூக்கள்.!

நலம் தருவே.. நிழல் தரவே..
உயர்ந்திருக்கும் சந்தன
மரங்கள்.!

மரங்கள்.. செடிகள்..
கொடிகள்.. புற்கள்.. பூமிக்கு
உயிர்தந்த தாவரங்கள்..

வரங்கள்.. வனங்கள்
வாழ்த்துகிற ஓர் உயிர்கள்..
தாய்மைக்கு மறுபெயரே
தாவரங்கள்.!

நிறங்கள் மலர்கள்..
மணக்கும் மாதவங்கள்
மாந்தனுக்கு இறைவன் தந்த
கொடைகள் தாவரங்கள்!

கரங்கள் தான் மரக்
கிளைகள் காக்கும் கரங்கள்..
தாய் மண்ணின் சீதனங்கள்..
தாவரங்கள்!

தாவரங்கள் போற்றி வாழி..
தாவரங்கள் நிலத்தின் விழி..
தாவரங்கள் மௌனத்தின்
மொழி! காப்பாற்று நீடு
வாழி.!


**வே.கல்யாண்குமார்.**



## உழைப்பின் முகம் பன்முகம்!

விடியும் பொழுதில்
வியர்வை சிந்தி
உழைப்பாளர் தினத்தைப்
போற்றுவோம் வாரீர்!
கைகள் செய்யும் தொழிலே
தெய்வம் கண்ணியம் காக்கும்
உழைப்பே செல்வம்!
அறிவின் தேடல்
அலைகடல் போல
அள்ளிக் கொடுக்கும்
பன்முகம் இதழே!
மாதம் தோறும் மணம் பரப்பி
மனதின் இருளை நீக்கிடுமே!
வாழ்க்கைப் பயணத்தில்
படிப்பு என்பது வழிகாட்டி
நிற்கும் ஒளிவிளக்கு!
சோம்பல் நீக்கிச் சுறுசுறுப்பாய்
இருந்தால் விறுவிறுப்பு கூடும்
நம் வாழ்வில்! தடைகள்
யாவும் தகர்த்து எறிந்து
வெற்றி எனும் சிகரம்
தொடுவோம்! பன்முகம்
காட்டும் பாதையில் சென்று
பாரதி கண்ட புதுமை
செய்வோம்! வியர்வை
துளிகள் முத்துக்கள்
ஆகட்டும் வித்தை யாவும்
கைவரப் பெறட்டும்!
உழைப்பால் உயர்வோம்
உலகை வெல்வோம்
உன்னத வாழ்வை
நாள்தோறும் வாழ்வோம்

**வெ நாராயணன்**
லால்குடி



காலமிது காலமிது
கண்ணுறங்கு மகளே ...
காலம் இதை தவற விட்டால்,
தூக்கமில்லை மகளே...
தூக்கமில்லை மகளே
... ஆரிராரிராரோ
ஆராரிராரோ... ஆரிராரி
ஆரிராரிராரரோ....
ஆரிராரிரோ... என்று
நீ தூளியில் உறங்கும்
நேரங்களிலும், குழந்தையாய்
என் மடியில் நீ தவழ்ந்த
நாட்களிலும் பாடி உன்னைத்
தங்கச்சியாக காலங்கள் என்
மனதில் பசுமரத்தாணிபோல
பதிந்து நிலைபெற்றிருக்கிறது!
நீ எத்தனை வளர்ந்தாலும்
அடுத்தடுத்த பருவ
நிலைகளில் உன் மாற்றங்கள்
நிகழ்ந்தாலும், என் வாழ்நாள்
முழுதும் இந்தத்தாய் மடி
என்றும் உன்னைத்தாங்கி
தாலாட்டக் காத்திருக்கும்
என் செல்ல மகளே !
காலத்திற்கேற்ப தாயினும்
சாலப்பரிந்தூட்டும் உறவுகள்
உனைக்கமைந்தாலும்,

இந்தத்தாய்மடி சுகம்
என்றென்றும் உனக்கு
இனிமையையும்
இதத்தையும் அளிக்குமடி
என் தங்கமே!

**உமா வெங்கடேசன்,**
சென்னை.

## அமைதிப்புறா.!

அமைதிப் புறாக்கள்
வானில் பறந்து அமைதியை
நிலைநாட்டுமா.?

தமக்கென வாழா
உயிர்களுக்கெல்லாம்
தருமத்தின் பாதையைக்
காட்டுமா!

புகை மழைச் சூழும்
பூமியில் இன்று.. அமைதியின்
மாமழைப் பொழியுமா!

கூகைகள் பறக்கும்
குளக்கரை யெங்கும்
அமைதிப் புறா ஒன்று
பறக்குமா!

ஈரான் தேசத்து கடல்அலை
இங்கு.. இரத்தம் கலவாமல்
இருக்குமா!

போரால் இடிந்தப் பாட
சாலைகளில் மாடப்புறாக்கள்
வந்தமருமா !

போரால் வறுமை
கோடுகள் நடுவே
குழந்தைகள் புத்தகம்
படிக்குமா..

பட பட வெனவே..
சிறகுகள் அடித்து அமைதிப்
புறாக்கள் பறக்குமா..

பாரினில் அமைதி
தழுவிய இரவில்.. தூக்கம்
கண்களைத் தழுவுமா.!

யாரும் யாருக்கும் பகையே
இல்லை யாவரும் கேளீர்..
என இசைக்குமா!

தேவோலயத்தின் வெள்ளைப்
புறாக்கள்.. சிவன்
கோபுரத்திமேல் அமருமா..

நாமம் உருவம்
ஒன்றுமிலாதவனை
மசூதி வாசலில்
தொழுதிடுமா.!

**வே.கல்யாண்குமார்.**



## காதல்.காம்

சூரியனைக்கண்டால்
பனி விலகுவதுஅதிசயமல்ல
என்னவளே உன்சந்திரகாந்த
விழிகளின் ஈர்ப்பில்
இதயத்தில் பனிமூட்டம்!

மண்ணில் உலாவரும்
வெண்ணிலாவே!
மேகமாய் உன்னை நான்
பின்தொடர்கையில்
சுகத்திற்கா பஞ்சம்!

நடமாடும் நந்தவனமே!
உன் கரம்பிடித்து
நடைப்பயிற்சி மேற்கொள்ள
தென்றலுக்கு பேராசை!

துன்பம் என்னை மிரட்டி
பார்த்த போதெல்லாம் உன்
புகைப்படத்தை
பார்த்துக்கொண்டே
பிறவிக்கடலை
நீந்திவிட்டேன்!

சுக்கிரதசையும்
குருதசையும் கூட
சலித்து விட்டதடி

மன்மத தசையின்
ரதிபுத்தியில் மயங்கி
திளைக்கிறேன்
மகிழ்ச்சி நிரந்தரம்!

**கவிஞர் த.அனந்தராமன்**
துறையூர்

## வாழ்க்கையின் சாவி

வாசலோடு முடியட்டும் கவலைகள்!
எங்கெல்லாம் அமைதி நிலவுகிறதோ, அங்கெல்லாம் அன்பு நிறைந்திருக்கிறது; அன்பால் நிறைந்த அந்த உலகம், என்றும் புன்னகையாலேயே சூழப்பட்டிருக்கும்! கண்ணின் இமை போலக் காதலிக்கும் உறவுகளைக் காப்பது – நம் உயிருக்கும் மேலான உன்னதமான ஒரு கடமை!
அந்தப் புனிதமான உறவைக் காத்து நிற்க,
அமைதி என்பது நம் இல்லத்தில் என்றும் நிறைந்திருக்க வேண்டும். வெளியுலகப் பயணங்களின் முடிவில் – மன உளைச்சலோ, ஏதோ ஒரு சஞ்சலமோ நம்மைத் துரத்தி வந்தாலும், அதன் துளி கூட நம் வீட்டுப் படி தாண்டக் கூடாது! மிச்சமிருக்கும் அந்த மனக்கசப்புகளை – நம் வீட்டு வாசலிலேயே கழற்றி விட்டுவிட்டு உள்ளே வர வேண்டும்! வண்டியின் சாவியை ஆணியில் மாட்டி வைப்பதைப் போல, பணிச் சுமைகளையும் கவலைகளையும் வாசலிலேயே மாட்டி விட வேண்டும்!
ஆணியில் மாட்டி விடும் சாவி என்றும் தொலையாது; மாறாக, தினசரி வேலைக்குக் கிளம்பும் போது – அந்தச் சாவியைத் தேடும் அவலம், நம் அமைதியின்மையையே காட்டுகிறது! சாவியைத் தேடும் பதற்றத்தோடு தொடங்கும் வாழ்வு, நிச்சயம் கவலையோடு வாழும் குடும்பத்தின் நிலையே! எளிமையான இரவு உடைகளுக்குள் நாம் நுழையும்போது, அன்பென்னும் சாயத்தைப் பூசிக் கொள்ளும் குடும்பம் – என்றும் மகிழ்ச்சியோடும், புத்துணர்வோடும், புரிந்துணர்வோடும் வாழ்வாங்கு வாழும்!
சண்டையிட வேண்டும், எரிச்சல் அடைய வேண்டும், பொறாமைப்பட வேண்டும், பசியோடு உறங்க வேண்டும் என்று எவருமே நினைப்பதில்லை; ஆயினும், முறையான திட்டமிடலும், சுய சிந்தனையும், மனதிற்குள் நிலவும் தேவையற்ற குழப்பங்களும் தீராததால்தான் – இங்கே சண்டைகளும் சச்சரவுகளும் தொடர்கதையாகின்றன!

கவலைகளையும் பனி போன்ற பாரமான சுமைகளையும், பேசித் தீர்த்துவிட்டு... மனபாரத்தை வெளியே மாற்றிவிட்டு, வீட்டிற்குள் நுழையுங்கள்! உள்ளே உங்களுக்காகக் காத்திருக்கிறது – வசந்தம் அதுதான் வாழ்க்கையின் சாவி

**ஜனனி அந்தோணி ராஜ்,** திருச்சிராப்பள்ளி.

1. நல்லதே நடக்கும் என்று
நம்புங்கள் அது உங்களை
மட்டுமல்ல உங்களை
சுற்றி இருப்பவர்களையும்
மகிழ்ச்சியாக வைத்து
இருக்கும்

2. எப்படி முடியும்
என்பதற்கும் ஏன் முடியாது
என்பதற்கும் உள்ள தூரமே
துணிச்சல்

3. மிகப்பெரிய பலசாலியும்
மிகப்பெரிய அறிவாளியும்
வயோதிகத்திடம்
தோற்றுத்தான் போகிறார்கள்

4. பணத்தை மட்டும்
சம்பாதித்தவர்
இருக்கும்போது வாழ்கிறார்
அன்பையும் உறவையும்
சேர்த்து சம்பாதித்தவர்
இறந்த பிறகும் வாழ்கிறார்

5. கருவுற்றால் ஒரு
குழந்தைக்கு மட்டும் தான்
அன்னையாக முடியும்
ஆனால் கருணையுற்றால்
ஆயிரம் குழந்தைகளுக்கு
அன்னையாக முடியும்

------------------



1. அரசியல்வாதிகள்
தேர்தலில் செலவழிக்கும்
பணத்தை தெருக்களை
தத்தெடுத்து செலவு
செய்தால் இந்தியா
என்றோ வல்லரசு
ஆகியிருக்கும்

2. கோபம் யாருக்கு
வேண்டுமானாலும் வரும்
ஆனால் பொறுமை
எல்லோருக்கும் வராது

3. இல்லாதவன் சொல்லும்
உண்மையை விட இருப்பவன்
சொல்லும் பொய் தான்
சமுதாயத்தில் மதிப்பு அதிகம்

4. நம்மிடம் எதுவுமே
இல்லை என்றாலும்
தர்மம் செய்ய அளவற்ற
அன்பு ஒன்றே போதுமானது

5. பானை நிறைய தண்ணீர்
இருந்தாலும் தாகம் தணிக்க
ஒரு செம்பு தண்ணீர் போதும்

அதேபோன்று
ஆசை
அளவோடு
இருந்தால்
ஆயுள்
நிறைவாக
இருக்கும்

**நடேஷ் கன்னா**
கல்லிடைக்குறிச்சி

## உடைந்த உள்ளம்

மகனின் நினைவில்
பறந்த மனம் கடிதம் கண்டு
அன்புடன் மலர்ந்து,
உயிரில் புன்னகைத்தது

“அம்மா” என்ற
சொல்லில் கட்டுண்டு,
மூட்டையில் சாமான்கள்
மட்டுமல்ல, அன்பையும்
கட்டிப் போட்டாள்

பேரன் சிரிப்பில் புதிய
உலகில், தன்னை மறந்த
உழைப்பில் தாய்மை
மீண்டும் பிறந்தது...

அழைத்த அன்பு
அதிகாரமாக உருமாற,
அவள் இதயம்
மௌனமாய்ப் பேச...
அந்த நொடி...
அழைப்பின் காரணம்
தேவையின் தேவையோ?

மலராக நினைத்தது
முள்ளாக மாறியதோ...


புன்னகை
உதட்டில்தவழ...
ஒரு தாயின்
உடைந்த
உள்ளம்...

**நா.பத்மாவதி**
கொரட்டூர்



கடற்கரைக்கெல்லாம்
செல்லாதே உன் சூடான
பார்வை பட்டு
மீண்டுமொருமுறை
சுனாமி வந்து விட
போகிறது?!

அகராதி தேடுகிறேன்
அழகை விட
சிறந்த வார்த்தை
உன்னை வர்ணிக்க
இருக்கிறதா என்று!

வம்பு தான் வரும் இந்த
அன்பினால். அந்த அன்பு
உங்களை நெருங்கி
வரும் போது சற்று விலகியே
இருங்கள் தனிமை தரும்
வெறுமையை விட
அன்பு தரும் இனிமை
ஆபத்தானது அந்த அன்பு
நிச்சயம் ஒருநாள் உங்களை
அதளபாதாளத்தில் தள்ளி
விடும் அந்த நாளில்
படைத்த கடவுளால் கூட
உங்களை காப்பாற்ற முடியாது
இறுதியாக என்
வார்த்தைகளை கேட்க
விரும்பாத உங்கள்
செவிகளிடம் உரக்கச்
சொல்கிறேன் அளவுக்கு
மிஞ்சினால் அந்த
அன்பும் ஆபத்து தான்!

ஏக்கங்களை தந்தாய்
அதோடு ஏமாற்றங்களையும்
தந்தாய் என்ன இருந்தாலும்,
வலிகள் தந்தாலும்
வாழ்க்கை இதுவென புரிய
வைத்த நீயும் ஒரு குருதான்!

நீ கற்றுக்கொடுத்த
படிப்பினை பாடத்தால்
இனி தோல்வி என்பதே
என் அகராதியில் இல்லை!

ஒருவேளை இழந்து போன
ஒன்றை திரும்ப
தருகிறேன் என கடவுள்
கேட்டால்
இறந்து போன
என் அப்பாவை
கேட்பேன்.
அவர் இருக்கும் வரை
இந்த வாழ்க்கை
இவ்வளவு வலிகள்
நிறைந்ததா என
நான் உணரவே இல்லை!

பணம் தான் எல்லாம் என
செவியறையில் செருப்படியாய்
அனுபவங்கள்
கிடைக்கும் போது
மனம் தானே
ஏற்றுக்கொள்ளும்.
மனிதன் படைத்த பூமியில்
அவனை விட அவன் படைத்த
பணத்திற்கு மதிப்பு அதிகம்!

அன்பு பாசம் நேசமெல்லாம்
வெறும் வார்த்தை தான்
என்பதை வலிபடும் போது
உணர்வாய்!

அன்பு முறிந்தாலும்
பரவாயில்லை
வாங்கிய கடனை
வட்டியும்–முதலுமாக
கொடுத்து விடுடி!

உனக்கு என்னப்பா
பாரின்ல வேலை
பணம் கொட்டோ,கொட்டுன்னு
கொட்டும் என எதுவும்
அறியாமல் பேசுபவரிடம்
என்ன சொல்வது?
கவலை இருந்தாலும்
கமிட்மெண்ட்டுக்காக
கடக்கும் நடுக்கடல்
வாழ்க்கை இது. ஏனோ
எங்கள் கண்ணீரை
எந்த சமுத்திரமும்
பிரதிபலிப்பதில்லை!

என்னை சிந்திக்க
வைத்தவளே
நீயே சிந்தனையில்
இருப்பது ஏனோ?
கனவுகள் ஒரு போதும்
கனவு காண்பதில்லை
என்பதை உணர்வாயோ?
கண்மணியே!


நிலவு வராத இரவு
வானம் கூட உண்டு
கும்மிருட்டிலும்
அம்முவின் ஞாபகங்கள்
வராத
கனவுகளே இல்லை!

**லி.நௌஷாத் கான்**



உழைப்பாளர் தினம்

## உயரம் தொடுவோம் உத்வேகத்துடன்!

உளி தாங்கும் கற்களே
சிலையாகும் – நம்
உழைப்புதான் வாழ்வின்
விலையாகும்!

வியர்வை சிந்தும் ஒவ்வொரு
துளியும் வெற்றிக் கதையின்
முதல் வரியாகும்!

மே தினப் பறவைகள் நாம்
அன்றோ? மேன்மை தேடும்
திறமைகள் நாம் அன்றோ?

கைகள் சிவக்க உழைப்பவர்
யாவரும் காலச் சக்கரத்தின்
அச்சாணி அன்றோ!

அறிவின் தாகம் தீர்க்கும்
அருவி ஆற்றல் வளர்க்கும்
அரிய கருவி!

’பன்முகம்’ என்னும் மாத
இதழ் – அது பயணம் காட்டும்
திசை காட்டும் நிழல்!

கலைகள், இலக்கியம்,
வாழ்வியல் என கண்ணாடி
போலக் காட்டும் முனை!

பக்கங்கள் தோறும் புதுமை
வீசும் படிக்கும் நெஞ்சில்
புரட்சி பேசும்!

படிப்பு என்பது வெறும் ஏடல்ல
பாதையைச் செதுக்கும்
வாளல்லவா?

சிந்தனைத் தெளிவே நம் பலம்
சிகரம் தொடுவதே நம் நலம்!

மந்தம் தவிர்; மானம் கொள்!
விறுவிறுப்பு கொண்டு வேகம்
கொள்!

துடிப்பாய் இருக்கும்
இதயம் அது தோல்வி
அறியா இமயம் அது!


வெற்றி என்பது தூரத்தில்
இல்லை முயற்சி இருந்தால்
ஏது எல்லை?

நாளைய உலகம் நம் கையில்
நம்பிக்கை விதைப்போம் நம்
மெய்யில்!

பன்முக அறிவில் பாராளப்
புறப்படு பயணம் தொடர
துணிவோடு அடிவை!

உழைப்போம்! உயர்வோம்!
உலகை வெல்வோம்!
உன்னதச் சரித்திரம் நாமே
படைப்போம்!

**லால்குடி வெ நாராயணன்**


Vilambaram
WE HELP YOU TO BOOST YOUR BUSINESS
VISIT:VILAMBARAM.COM
CONTACT: 8122798599


ஆட்கள் தேவை
வார சம்பளத்திற்கு
லேபர் வேலைக்கு
ஆட்கள் தேவை
உணவு மற்றும் தங்கும்
இடம் இலவசம்
OMR பெருங்குடி
சென்னை
Contact
9790979539


PLOT SALE
ORAGADAM 11L to 23L
TAMBARAM 51L to 69L
OMR 26L to 51L
ECR 52L to 75L
9626777627


கங்கோதரி
எண்டர்பிரைசஸ்-ன்
BI NEW TEACHERS COLONY
பொன்னேரி அருகில் பழவேற்காட்டில்
RERA APPROVED
மனைகள் வழங்கப்படுகிறது.
GANGOTHARI
ENTERPRISES
RG Rajendra Prasath
Proprietor
கங்கோதரி எண்டர்பிரைசஸ்
Buying & Selling
வீடு, மனை, வாங்க, விற்க இங்கு அணுகவும்.
97103 48377, 89254 08203
gangotharienterprises2018@gmail.com
No. 18, Dr. Radhakrishna Salai, Vivekananda Nagar, Kodungaiyur, Chennai-600 118.


Manjal Mart
தரமான ஆன்மீக பூஜை
பொருள்களை குறைந்த விலையில்
நிறைவாக வாங்க
20% OFF
www.manjalmart.com
7789951009
order@manjalmart.com


ADVERTISE WITH US!
CONTACT US
9337501889


THINKING to BUY / SELL / RENT
a PROPERTY
New / Resale... Residential / Commercial...
*Plots
*Flats
*House
*Villa
*Bungalows
*Farm Land
*Ware Houses
*Factory Sites
*Sheds
JOINT VENTURES INVITED
MK REAL ESTATE
Call:7871617005


Just499
Pick Any Website
Just ₹499 Only!
Affordable Website Solutions for Every Business
Matrimonial Website
Real Estate Website
E. Commerce Website
Restaurant Website
Shopping Website
News Website
MLM Binary Website
MLM Level Website
MLM Gaming Website
Call: 7789951009 | WhatsApp: 7789951009


WE'RE
HIRING
TELECALLERS
SALARY STARTING FROM
RS.20000/- ONWARDS
+91 7871617005


Vilambaram
www.vilambaram.com
WE ARE Digital Marketing Agency
We are the
LEADS GENERATION
FACTORY
For Your
REAL ESTATE
BUSINESS
* Business Lead
* 100% Verified Lead
* Targeted Lead
GROW YOUR BUSINESS WITH US
for more details
+91 7789941009
+91 9337501889
vilambarampage@gmail.com
80 % OFF SPECIAL OFFER
DISCOUNT
90 DAYS
MONEY BACK
GUARANTEE


just499
REAL ESTATE
SOFTWARE
We Provide Complete Real
Estate Software Solutions
ONLY Rs. 499
Website: just499.com
Phone: 7789951009
WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com


Just499
JOB WEBSITE SOFTWARE
We Provide Complete Job Portal Software Solution
ONLY Rs. 499
Website: just499.com
Phone: 7789951009
WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com


GREAT OPPORTUNITY
AT
ALL OVER TAMILNADU
Marketing Executive
SALARY Rs.15000/-
+ Incentive
+ Petrol Allowance
vilambarampage@gmail.com
7789941009


FREE MARRIAGE
INFORMATION CENTER :
இலவச திருமண
தகவல் மையம்
இலவச திருமண தகவல் மையம்
யாருக்கும் பணம் தர தேவை இல்லை
பணம் வாங்கும் புரோக்கர்கள் தவிர்க்கவும்
www.enthuani.com
Call: 9337501889


WANTED
Work From Home Opportunity
Telecallers Required
Also Hiring for IT Jobs
Salary: ₹10,000 - ₹15,000
Attractive Incentives
Flexible Work From Home Option
Freshers & Experienced Both Can Apply
Contact Now:
9566072935


Vilambaram
We provide Targeted Leads to grow your buisness
Boost your business
Call:: 91 7789941009, 9337501889
www.vilambaram.com


THINKING to BUY / SELL / RENT
a PROPERTY
New / Resale
Residential / Commercial
Plots
Flats
House
Villa
Bungalows
Farm Land
Ware Houses
Factory Sites
Sheds
JOINT VENTURES INVITED
MK REAL ESTATE
Tell me your Budget We Show Your Home
Call :7871617005



SEVEN STARS
LOGISTICS PVT.LTD.
we simplify shipping for your business
We Build Perfection
Our Services are ...
Freight Forwarding, International Courier,
Customs Clearance, Cargo Movement by Air,
Sea and Road, Door to Door Service.
# 2, 2nd floor, Krishnan Koil Street, George Town,
Chennai - 600 001. INDIA.
+91 44 43570909 +91 96770 88843
info@sevenstarslogistics.com www.sevenstarslogistics.com


We Are Urgently Hiring!
Marketing Manager
Ad Sales (Print Media)
Package Rs. 4.8 LPA
Company : PADMA DIGITAL BROADCAST PRIVATE LTD
Location : Chennai
Padma Digital a leading name in print media, is looking for a Marketing Manager - Ad Sales to join our dynamic team.
Key responsibilities for Marketing Manager
Minimum 5 years of experience in print media ad sales
Proven experience in space selling
Strong background in field sales and client acquisition
Excellent communication and negotiation skills
If you're a results-driven professional with a passion for media sales, we want to hear from you
If you are interested
Do send your resume and portfolio to
padmamediapublications@gmail.com
Call: 9337501889



WANTED:
செக்யூரிட்டி
வேலைக்கு
ஆண்கள் தேவை
வானகரம் பைபாஸ் ரோடு
முகப்பேர்
அம்பத்தூர்
பட்ரவாக்கம்
பெரம்பூர்
மாதவரம்
திருமுல்லைவாயல்
Ph. 9344183870
Ph. 8807470107
Call now for more details and interview


உங்களின் ஒளிமயமான
எதிர்காலத்திற்கு
உங்கள் ஜோதிடர் 9940374962
D.சக்திவேல்
அனுபவம் வாய்ந்த பாரம்பரிய ஜோதிடர்
கைரேகை ஜோதிடம்
முகக் குறிப்பு
கண் பார்வை கணிப்பு
வீடு மனை வாங்க விற்க அணுகவும்
நல்ல நேரங்கள் கணிப்பு
ராகு காலங்கள் பற்றிய தெளிவு
இன்றே அழையுங்கள்: D. சக்திவேல் - 9940374962
கவனத்தில் கொள்க:
குளிகை காலம் நல்ல விவகாரங்கள் செய்தால் மேலும் வளர்ச்சி
இராகு காலம் முடிந்த பிறகு நல்லது செய்யவும்
எமகண்ட காலத்தில் வைத்தியம் பார்க்கக் கூடாது.


WANTED
EXPERIENCED
SOCIAL MEDIA
CONTENT CREATORS
94386 10756


LOW COST
MATRIMONY
WEBSITE
CALL: 7789951009


ஸ்ரீ கிருஷ்ணர்
உபாசகர் பரிகார புகழ்
ஆன்மிக செம்மல் த.பிரகாஷ்
CONTACT US
9597887308, 6380453463
EXPERT IN VEDIC ASTROLOGY
PREDICTION & SOLUTIONS
MONEY
LOVE
HEALTH
FAMILY
BUSINESS
CAREER
MARRIAGE



FINDING THE PERFECT HOUSE YOU CAN CALL HOME
PREMA ENTERPRISES
DO YOU WANT TO
BUY
OR
SELL
PROPERTY OR LAND?
+91 9884417843


ARG CONSTRUCTIONS
ARG
We Build Your
DREAM
HOME
Recently We Have Completed Over 50+ Big Projects
SERVICES WE OFFER
Residential Construction
Commercial Construction
Customer Satisfaction
Contact Us
9710348377


Get Free Jobs Alert on Your
WhatsApp
Register Yourself on our
8122664699
WhatsApp Your Name, Age & Address
on Above Number
Josh Jobs Team Give u Daily Update of
Govt. as Well as Private Jobs


VINAYGA ENTERPRISES
WANTED
COMPUTER OPERATOR
( FEMALE)
ONIDA AUTHORISED SERVICE CENTRE
CONTACT:9962116238
ADDRESS: BHEEMANNA PETTAI, BHEEMANNA 1ST STREET,
ALWARPET CHENNAI


ST COURIER
The People's Choice
ISO 9001:2008 Certifed
DOMESTRIC- INTERNATIONAL
Old No. 1/2, New No.3, Kesavan St.,
Tondiarpet, Chennai-600081.
Cell: 9176130601


PREMIUM LAND SALE
NEAR PARANDUR AIRPORT
YOU ARE LUCKY!
Grab Your Future Investment Today!
Location: Just 6 KM Near Parandur New Airport
Price Details
₹700 to ₹2200 per Sq.Ft
Affordable & High Return Investment
Why Invest Here?
Fast Developing Area
Near Upcoming Airport
Excellent Appreciation Value
Suitable for Residential & Investment
Easy Road Access
PLOTS AVAILABLE NOW!
Contact: CT. Guruji
Phone: 90031 32847
LIMITED PLOTS - BOOK NOW!


Launch Your
Own Secure
Crypto MLM
Software Today!
@4999/- onwards
CALL: 98537 19337, 74369 14247
www.mlmperfect.com


WANTED
வீட்டு வேலை செய்ய குழந்தை
நோயாளி,நர்ஸ் வேலைக்கு ஆட்க
ள் தேவைப்படுவர்/வேலை தேடுப
வரும் அனுகவும். 8668107106


ADVERTISE
WITH US
CONTACT US
9438610756


S.R
Call Drivers
Travels
24 Hours
Man Power & All Vehicle Available
Prop. S.SRIRAM
Contact: 95513 81576 / 86086 22056
True Work is Our Capital
No.89/49,E.H.Road,Cornation Nagar,K.Pet,Ch-21.


WANTED
JAY SECURITY FORCE
பணி வாய்ப்புகள்
பணிகள்: A.S.D செக்யூரிட்டி கார்டுகள் ஹவுஸ் கீப்பிங்
இடங்கள்:
பெருங்குடி, துரைப் பாக்கம்
காரப்பாக்கம், சோழிங்கநல்லூர்
விருகம்பாக்கம்
பெண்கள் தேவை
சம்பளம்:- 12500 முதல் 20000 வரை
9791061354 - 8072969599
Head office
NO :1, அம்பாள் அவின்யூ,
வி.பி.ஜி அவின்யூ, விரிவாக்கம்,
மேட்டுக்குப்பம்- சென்னை-97


செக்யூரிட்டி கார்டுகள் தேவை
கோடம்பாக்கம் சேத்துப்பட்டு புரசைவாக்கம்
கோட்டூர்புரம் பகுதிகளில் வேலை
செய்ய செக்யூரிட்டி கார்டுகள் தேவை
அணுகவும்: 9840861539



Just499
JOB WEBSITE SOFTWARE
We Provide Complete Job Portal Software Solution
ONLY Rs. 499
Website: just499.com
Phone: 7789951009
WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com


Euro Kids
Pre-School
Right Start, Flying Start!
Tondiarpet
9940661625
Introducing
HEUREKA
THE VISIBLE THINKING CURRICULUM
based on Harvard's Project Zero
Admissions Open
for AY 25-26
EuroTots | PlayGroup | Nursery | EuroJunior | EuroSenior
23+ Years of Experience
TUV Nord Safety Certified
1,600+ Pre-schools
No. 19/20, Kummalamman Koil Street, Tondiarpet, Chennai - 600 081


just499®
MLM SOFTWARE
All Types of MLM Software Solutions Available
Binary
Unilevel
Matrix
Board
Generation
ROI / Investment
ONLY
Rs. 499
Website:
just499.com
Phone/WhatsApp:
7789951009
Email:
orderjust499@gmail.com



# பல்சுவை களஞ்சியம்



# தமிழர்களின் வேடிக்கை குணங்கள்



1.தண்ணீர், நுங்கு, நிலக்கடலை -- எப்பவும் காசு கொடுத்து வாங்கும் பழக்கம் கிடையாது. #கெத்துடா_மிடில்க்ளாஸ்

2. டாக்டர் 30 நாளைக்கு மருந்து எழுதி கொடுத்தாலும் 3 வேலைக்கு மட்டும் மெடிக்கல்ல மருந்து வாங்குறது

3. ஹோட்டலுக்கு போனா மெனு கார்ட பாக்காம... பக்த்து டேபிள பாத்து ஆர்டர் பண்றது

4. ஒரு புடவை 500ரூன்னா ஒண்ணுதான் எடுப்போம், ஒரு புடவை 1000, ஒண்ணு எடுத்தா இன்னொன்னு ஃப்ரின்னா ரெண்டு வாங்குவோம்

5. அளவு சாப்பாட்டுலயே மூணு தடவை அப்பளம் கேட்டு வாங்கிடுவோம்

6. சலூன்ல கட்டிங் பண்ணும் போது , கூட 5ரூவாய்க்கு பயந்து, நான் எப்பவுமே செல்ஃப் ஷேவிங்தான்னு பந்தா காமிக்கிறது

7 வீட்டுக்கு வந்த விருந்தாளிகள 'சாப்டு வந்துடீங்க போல' ன்னு கேட்டுட்டு சமையல் கட்ல உக்காந்து தனியா கட்டிகிறது

8. சில்லரைக்கு பதில் சாக்லேட் குடுத்தா டென்ஷன் ஆகிடுவோம்

9, பேமிலியோட தியேட்டர்க்கு போய் படம் பாக்காம 30 ரூபாய்க்கு பஜார்ல புதுப்படம் சிடி வாங்கி வீட்லயே பாக்குறது

10 ப்ரோட்டா சால்னாவ எக்ஸ்ட்ரா வாங்கி மறுநாள் டிபனுக்கு தொட்டுக்குவோம்!

11, தியேட்டருக்கு வீட்ல இருந்து முறுக்கு, கடலைமிட்டாய் எடுத்துட்டு போறது

12 பையனுக்கு டாக்டர் இல்லை இன்ஜினியர்னு ரெண்டே சாய்ஸ் கொடுக்கறது

13. என்னதான் வீட்ல நல்ல சோறு செஞ்சுருந்தாலும் அன்னதானத்துக்கு போய் தூக்குபோசி நிறைய சாம்பார் எடுத்துட்டு வந்து சாபட்றது

14. படத்துக்கு போய்ட்டு இடைவேளைல ஸனாக்ஸ் வாங்காம உக்காந்த இடத்துலயே பம்மிக்கிறது

15. வீட்டுல ஜம்பது சேலை இருந்தாலும் ரேசன் கடைல வேட்டி சேலை இலவசமா குடுத்தா வாங்க கீயூல நிக்கறது

16. EMIல கிடைக்கறதெல்லாம் ப்ரீயா கொடுக்கறதா கற்பனை பண்ணிக்கறது

17. டிரஸ் எடுக்கும் போது டிசைன் பார்க்கும் முன் price tag பார்ப்பது

18. டாக்டரிடம் எதற்குப் போவது, தண்ட செலவு என்று பார்மசியிலேயே மருந்து வாங்கி சாப்பிடுவது

19 கேஸ் சிலிண்டர்ல காலண்டர் தேதிய கிழிச்சி ஒட்டி வக்கிறது

20 அழுக்குத் தெரியாத கலர்களில் (காக்கி, கருப்பு) ட்ரஸ் தச்சுக்கறது.

21. சேர்த்து வெக்கிறேன் பேர்வழின்னு, எவங்கிட்ட வேணாலும் சீட்டுப் போட்டு கோட்டைய விடறது!

22. கடன்ல ஃப்ரிட்ஜு வாங்கி எல்லாருக்கும் காட்டுற மாதிரி ஹால்ல வைக்குறது

23. முதல்ல பொண்டாட்டிக்கிட்ட 'நீ என்ன சாப்பிடுற'ன்னு கேட்டுட்டு அதுபடி தன் ஆர்டரை முடிவு பண்றது.

24. நான்கு கிலோ மீட்டர் நடந்தே சென்று பேருந்து கட்டண பணத்தில் பஜ்ஜி வாங்கி தின்பது

25. ஒவ்வொரு நள்ளிரவு பெட்ரோல் விலை உயர்வுக்கு பின்னும்; கார ஓரங்கட்டனும், பைக் எடுக்கறத குறைக்கனும் என சபதமெடுப்பது

26. புள்ளைங்களை முடிவெட்ற சலூன்ல உட்கார வச்சிட்டு 'மொத்தமா வெட்டிடுப்பா'ன்னு சொல்லிடறது

27 ATM மெஷின்-ல கார்டு சொருவி பேலன்ஸ் பாத்துட்டு, அப்றோம் பணம் எடுத்துட்டு மறுபடியும் பேலன்ஸ் பாக்குறது

28. கல்யாண மாப்பிளைக்கு, லோன்ல வாங்கின பைக்க மண்டபம் வாசல்ல கொண்டாந்து நிறுத்தி புல்லரிக்கிறது.

## பாட்டி வைத்தியம்



**நெஞ்சு சளி**
தேங்காய் எண்ணையில் கற்பூரம் சேர்த்து நன்கு சுட வைத்து ஆர வைத்து நெஞ்சில் தடவ சளி குணமாகும்.

**தலைவலி**
ஐந்தாறு துளசி இலைகளும் ஒரு சிறு துண்டு சுக்கு, 2 லவங்கம், சேர்த்து நன்கு அரைத்து நெற்றியில் பற்றாகப் போட்டால் தலைவலி குணமாகும்.

**தொண்டை கரகரப்பு**
சுக்கு, பால் மிளகு, திப்பிலி, ஏலரிசி ஆகியவற்றை வறுத்து பொடி செய்து தேனில் கலந்து சாப்பிட தொண்டை கரகரப்பு குணமாகும்.

**தொடர் விக்கல்**
நெல்லிக்காய் இடித்து சாறு பிழிந்து, தேன் சேர்த்து சாப்பிட்டால் தொடர் விக்கல் தீரும்.

**வாய் நாற்றம்**
சட்டியில் படிகாரம் போட்டு காய்ச்சி ஆறவைத்து அதனை ஒரு நாளைக்கு மூன்று வேளை வாய் கொப்பளித்து வந்தால் வாய் நாற்றம் போகும்.

**உதட்டு வெடிப்பு**
கரும்பு சக்கையை எடுத்து எரித்து சாம்பலாக்கி, அதனுடன் வெண்ணெய் கலந்து உதட்டில் தடவி வர உதட்டு வெடிப்பு குணமாகும்.

**அஜீரணம்**
ஒரு டம்ளர் தண்ணீரில் கருவேப்பிலை, இஞ்சி, சீரகம், மூன்றையும் கொதிக்க வைத்து ஆறவைத்து வடிகட்டி குடிக்க அஜீரணம் சரியாகும்.

**குடல்புண்**
மஞ்சளை தணலில் இட்டு சாம்பல் ஆகும் வரை எரிக்க வேண்டும். மஞ்சள் கரி சாம்பலை தேன் கலந்து சாப்பிட குடல் புண் ஆறும்.

**வாயு தொல்லை**
வேப்பம் பூவை உலர்த்தி தூளாக வெந்நீரில் உட்கொள்வதினால் வாயுதொல்லை நீங்கும். ஆறாத வயிற்றுப்புண் நீங்கும்.

**வயிற்று வலி**
வெந்தயத்தை நெய்யில் வறுத்து பொடி செய்து மோரில் குடிக்க வயிற்று வலி நீங்கும்.

**மலச்சிக்கல்**
செம்பருத்தி இலைகளை தூள் செய்து, தினமும் இருவேளை சாப்பிட்டு வர மலச்சிக்கல் தீரும்.

## மீம்ஸ்







## விடுகதை



| | |
|---|---|
| குண்டு ராஜாவுக்கு குடல் முழுக்க பல் அது என்ன? | மாதுளை |
| தொடாமல் அழுவான், தொட்டால் பேசுவான் அவன் யார்? | தொலைபேசி |
| முறையின்றி தொட்டால் ஒட்டிக்கொண்டு உயிரை எடுப்பான் அவன் யார்? | மின்சாரம் |
| கண்ணால் பார்க்கலாம் கையால் பிடிக்க முடியாது அவன் யார்? | நிழல் |
| குண்டுச்சட்டியில குதிரை ஓட்டறான். | கரன்டி |
| அடிக்காமல்,திட்டாமல் கண்ணீரை வரவழைப்பாள் அவள் யார்? | வெங்காயம் |
| பாலிலே புழு நெளியுது. அது என்ன? | பாயாசம் |



# ஜோக்ஸ்

**ஆசிரியர்:** மின்னல் தெரிந்தபிறகு ஏன் இடி இடிக்கிறது .

**மாணவன்:** கண்களுக்கு பின்னால் தானே சார் காது இருக்கிறது அதனால்தான் சார்.

==========================================

"உங்க வீட்ல சிரிப்பு சத்தமாயிருக்கே, ஏன்?"

"எங்க வீட்டு டிவி ரிப்பேர், அதுதான்!"

==========================================

"அந்தக் கட்சிக் கூட்டத்தில எல்லோரும் சேர்ந்து அழறாங்களே , ஏன்?"

"அங்கே 'துயர் மட்டக் குழு கூட்டம்' நடக்குதாம்"

==========================================

"இன்னைக்கு நான் ஆபீஸ்ல பட்டினி கிடந்து வேலை செஞ்சேன்"

"அவ்வளவு பிசி ஒர்க்கா?"

"இல்ல; சாப்பாட்டு நேரத்தில என்னை யாரும் எழுப்பிவிடலை"

==========================================

"தொழில் படுத்திடுச்சின்னீங்களே , என்ன தொழில்?"

"பாய் வியாபாரம்!"

==========================================

டாக்டர்: "நீங்க உடம்பைக் குறைக்கணும்; இனிப்பைக் குறைக்கணும்; காரத்தைக்



குறைக்கணும்"

நோயாளி: "டாக்டர், நீங்க ஃபீசை குறைக்கணும்"

==========================================

ஒருவர்: "தாமஸ் ஆல்வா எடிசன் பல புதிய கண்டுபிடிப்புக்களைக் கண்டுபிடிக்காமலிருந்தால் என்னவாயிருக்கும்?"

மற்றவர்: "வேற ஒருத்தர் கண்டுபிடிச்சிருப்பார்"

==========================================

நீதிபதி : " அந்த வீட்டுப் பூட்டை உடைத்து ஏன் திருடினாய்?"

திருடன்: "என்னோட சாவி எதுவுமே அந்தப் பூட்டைத் திறக்காததால கடைசியா பூட்டை உடைக்க வேண்டியதாப் போச்சிங்க"

==========================================

தொண்டர் 1 : "தலைவர் ரொம்ப அப்பாவியா இருக்காரா, எப்படி?"

தொண்டர் 2 : " சலூன்ல துண்டைப் போர்த்தினதுமே, 'எந்த வட்டத்தின் சார்பில போடுறே'ன்னு கேட்கிறாரு"

==========================================

"வாழைப் பழம் ஒன்னு எத்தனை ரூபாய்ங்க?"

"ஒரு பழம் ரெண்டு ரூபாய்ங்க"

"ஒன்னரை ரூபாய்க்கு கொடுங்களேன்"

"ஒன்னரை ரூபாய்க்கு தோல் மட்டும்தான் கிடைக்கும்"

"அப்படின்னா ஐம்பது பைசாவுக்கு பழம் மட்டும் கொடுங்க"

==========================================

"இந்த ஆசிரியர் வித்தியாசமானவரா, எப்படி?"

"பதிலை சொல்லிட்டு, இதனோட கேள்வி என்னனு கேட்பார்"

==========================================

"டாக்டர், நான் யார் பேச்சையுமே கேட்குறதில்லை"

"அதை என்னிடம் வந்து ஏன் சொல்றீங்க?"

"காது சரியா கேட்கலை; அதை சரி பண்ணுங்க டாக்டர்!"

==========



# வாங்க சம்பாதிக்கலாம்

## ஆராய்ச்சி நிறுவனத்தில் வாய்ப்பு



இந்திய வரலாற்று ஆராய்ச்சி கவுன்சிலில் காலியிடங்களுக்கு அறிவிப்பு வெளியாகியுள்ளது.
ஜூனியர் ரிசர்ச் பெல்லோஷிப் பிரிவில் மொத்தம் 80 இடங்கள் உள்ளன.
கல்வித்தகுதி : தொடர்புடைய பிரிவில் பி.எச்டி.,
வயது: பிரிவு வாரியாக மாறுபடும்.
தேர்ச்சி முறை: ஆன்லைன் தேர்வு, நேர்முகத்தேர்வு
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்
விண்ணப்பக்கட்டணம்: ரூ. 500. எஸ்.சி., / எஸ்.டி., பிரிவினருக்கு கட்டணம் இல்லை.
கடைசிநாள்: 10.4.2026
விவரங்களுக்கு: ichr.ac.in

## ரயில் நிறுவனம் அழைக்கிறது



ரயில்வேயின் கீழ் செயல்படும் இந்திய ரயில் நிதி நிறுவனத்தில் (ஐ.ஆர்.எப்.சி.,) காலியிடங்களுக்கு அறிவிப்பு வெளியாகியுள்ளது.
அசிஸ்டென்ட் 16, அசிஸ்டென்ட் மேனேஜர் (நிதி) 7 என மொத்தம் 23 இடங்கள் உள்ளன.
கல்வித்தகுதி: பி.காம்., + ஐ.சி.ஏ.ஐ., / சி.ஏ., / சி.எம்.ஏ., / எம்.பி.ஏ.,
வயது: 18-30 (1.5.2026ன் படி)
தேர்ச்சி முறை: எழுத்துத்தேர்வு, சான்றிதழ் சரிபார்ப்பு, நேர்முகத்தேர்வு
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்
விண்ணப்பக்கட்டணம்: ரூ. 500. எஸ்.சி., / எஸ்.டி., பிரிவினருக்கு கட்டணம் இல்லை.
கடைசிநாள்: 1.5.2026
விவரங்களுக்கு: irfc.co.in

## தேசிய புத்தக நிறுவனத்தில் உதவியாளர் வேலை




டில்லியில் உள்ள தேசிய புத்தக நிறுவனத்தில் ஒப்பந்த பணிக்கு அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.
அசிஸ்டென்ட் எடிட்டர் 4, எடிட்டோரியல் அசிஸ்டென்ட் 13 என மொத்தம் 17 இடங்கள் உள்ளன.
கல்வித்தகுதி: பட்டப்படிப்பு
வயது: 18 -30 , 18 - 40 (10.4.2026ன் படி)
தேர்ச்சி முறை: எழுத்துத்தேர்வு, நேர்முகத்தேர்வு
விண்ணப்பிக்கும் முறை: இணைய தளத்தில் உள்ள விண்ணப்பத்தை பதிவிறக்கி, பூர்த்தி செய்து கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பவும்.
The Deputy Director (A&E), National Book Trust, India, 5, Institutional Area, Phase-II, Vasant Kunj, New Delhi -- 110 070
கடைசிநாள்: 10.4.2026
விவரங்களுக்கு: nbtindia.gov.in

## பாதுகாப்பு படையில் 233 கான்ஸ்டபிள் காலியிடங்கள்



துணை ராணுவத்தை சேர்ந்த சகஸ்ட்ர சீமா பால் (எஸ்.எஸ்.பி.,) படையில் காலியிடங்களுக்கு அறிவிப்பு வெளியாகியுள்ளது.
'தலைமை கான்ஸ்டபிள்' பிரிவில் கம்யூனிகேசன் 197, எலக்ட்ரீசியன் 29, கால்நடை 5, ஸ்டெவார்டு 2 என மொத்தம் 233 இடங்கள் உள்ளன.
கல்வித்தகுதி: பிளஸ் 2 / ஐ.டி.ஐ., / டிப்ளமோ
வயது: 18-27 (20.4.2026ன் படி)
தேர்ச்சி முறை: எழுத்துத்தேர்வு, உடல் தகுதி தேர்வு, சான்றிதழ் சரிபார்ப்பு.
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்
விண்ணப்பக்கட்டணம்: ரூ. 100. பெண்கள் / எஸ்.சி., / எஸ்.டி., பிரிவினருக்கு கட்டணம் இல்லை.
கடைசிநாள்: 30.4.2026
விவரங்களுக்கு: ssb.gov.in

## கப்பல் கட்டும் தளத்தில் சேர விருப்பமா?




மத்திய அரசின் கீழ் செயல்படும் உடுப்பி கொச்சி கப்பல் கட்டும் தளத்தில் ஒப்பந்த பணிக்கு அறிவிப்பு வெளியாகியுள்ளது.
'சூப்பர்வைசர்' பிரிவில் 15 (மெக்கானிக்கல் 11, எலக்ட்ரிக்கல் 3, நிதி 1), 'அசிஸ்டென்ட் மேனேஜர்' பிரிவில் 15 என மொத்தம் 30 இடங்கள் உள்ளன.
கல்வித்தகுதி: ஐ.டி.ஐ., / டிப்ளமோ / டிகிரி / பி.இ., / பி.டெக்.,
வயது: 18 - 45, 18 - 30 (22.4.2026ன் படி)
தேர்ச்சி முறை: நேர்முகத்தேர்வு
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்
விண்ணப்பக்கட்டணம்: ரூ. 500/ ரூ. 400. எஸ்.சி., / எஸ்.டி., பிரிவினருக்கு கட்டணம் இல்லை.
கடைசிநாள்: 22.4.2026
விவரங்களுக்கு: cochinshipyard.in

## சி.ஏ., முடித்தவருக்கு வேலை




இந்திய பட்டய கணக்காளர் நிறுவனத்தில் (ஐ.சி.ஏ.ஐ.,) காலியிடங்களுக்கு அறிவிப்பு வெளியாகியுள்ளது.
'எக்சிகியூட்டிவ் ஆபிசர்' பிரிவில் சி.ஏ., 75, சட்டம் 15, ஐ.டி., 10 உட்பட மொத்தம் 109 இடங்கள் உள்ளன.
கல்வித்தகுதி: சி.ஏ., / சி.எஸ்., / பி.எல்., / பி.இ., / பி.டெக்.,
வயது: 18-30 (15.4.2026ன் படி)
தேர்ச்சி முறை: ஆன்லைன் தேர்வு, சான்றிதழ் சரிபார்ப்பு
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்
விண்ணப்பக்கட்டணம்: ரூ. 500.
கடைசிநாள்: 15.4.2026
விவரங்களுக்கு: resource.cdn.icai.org

# போர்நிறுத்த ஒப்பந்தம் எதிரொலி: சென்செக்ஸ், நிஃப்டி 4% உயர்வு!

அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் ஈரானுடன் இரண்டு வார கால போர்நிறுத்தத்தை அறிவித்ததைத் தொடர்ந்து, கச்சா எண்ணெய் விலையில் ஏற்பட்ட கடும் வீழ்ச்சியால் உலகளாவில் பதற்றம் வெகுவாக தணிந்த நிலையில், இந்தியப் பங்குச் சந்தை, இன்றைய வர்த்தகத்தில் தொடர்ந்து 5வது நாளாக ஏற்றம் கண்டது.

பல்வேறு துறைகளில் ஏற்பட்ட பரவலான கொள்முதலை தொடர்ந்து, பங்குச் சந்தை வலுவான நிலையில் தொடங்கி, வர்த்தக நேரம் முழுவதும் இந்த உயர்வை தக்க வைத்துக் கொண்டது. முக்கிய குறியீடுகள் 4 சதவீதம் உயர்ந்த நிலையில், மே 2025-க்குப் பிறகு, அதிக செயல்திறன் கொண்ட நாளாக இன்று பதிவானது. அதே வேளையில், நிஃப்டி 24,000 புள்ளிகளைக் கடந்தது இன்று சாதனை படைத்தது.

வர்த்தக முடிவில், சென்செக்ஸ் 2,946.32 புள்ளிகள் உயர்ந்து 77,562.90 ஆகவும், நிஃப்டி 873.70 புள்ளிகள் உயர்ந்து 23,997.35 ஆக நிலைபெற்றது. நிஃப்டி மிட்கேப் மற்றும் ஸ்மால்கேப் குறியீடுகள் தலா 4% உயர்ந்தன.

மும்பை பங்குச் சந்தையில், பட்டியலிடப்பட்ட நிறுவனங்களின் சந்தை மூலதனம், இன்றைய நிலவரப்படி ரூ. 429.26 லட்சம் கோடியாக இருந்த நிலையில், தற்போது ரூ. 16 லட்சம் கோடிக்கும் மேல் அதிகரித்து ரூ. 445.57 லட்சம் கோடியாக உள்ளது.

நிலவிவரும் அரசியல் நிச்சயமற்ற நிலைக்கு மத்தியிலும், நடுநிலையான நிலைப்பாட்டை கடைப்பிடித்துள்ளது இந்திய ரிசர்வ் வங்கி. அதன் ரெப்போ வட்டி விகிதத்தை 5.25% என்ற அளவில் மாற்றமின்றி வைத்திருக்க முடிவு செய்துள்ளதாக, ரிசர்வ் வங்கி ஆளுநர் சஞ்சய் மல்ஹோத்ரா தலைமையில் 6 பேர் கொண்ட அதிகாரிகள் குழு கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டது.

ரிசர்வ் வங்கி, 2027 நிதியாண்டிற்கான வளர்ச்சியை 6.9 சதவீதமாகக் கணித்துள்ளது. இருப்பினும், 2027 நிதியாண்டின் முதல் காலாண்டிற்கான மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி, முன்னர் கணிக்கப்பட்ட 6.9 சதவீதத்திலிருந்து 6.8 சதவீதமாகவும், 2வது காலாண்டிற்கான வளர்ச்சி 7 சதவீதத்திலிருந்து 6.7 சதவீதமாகவும் குறைக்கப்பட்டுள்ளது.

மேலும், நடப்பு நிதியாண்டிற்கான பணவீக்கம் 4.6 சதவீதமாக இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. அதே சமயம், 2027 நிதியாண்டின் முதல் காலாண்டிற்கான வளர்ச்சி, முன்னர் கணிக்கப்பட்ட 4 சதவீதத்திலிருந்து 4.4 சதவீதமாகவும், 2வது காலாண்டிற்கான கணிப்பு 4.2 சதவீதத்திலிருந்து 4 சதவீதமாகவும் குறைக்கப்பட்டது.

சென்செக்ஸில் இன்டர்குளோப் ஏவியேஷன் நிறுவனம் 8.22 சதவீதம் உயர்ந்து அதிகபட்ச வளர்ச்சியை கண்டது. லார்சன் & டூப்ரோ, பஜாஜ் ஃபைனான்ஸ், மஹிந்திரா & மஹிந்திரா, ஆக்சிஸ் வங்கி மற்றும் மாருதி உள்ளிட்ட பங்குகள் உயர்ந்தன மறுபுறம் டெக் மஹிந்திரா, சன் பார்மா மற்றும் பவர் கிரிட் ஆகிய நிறுவனங்களின் பங்குகள் சரிந்தன.

நிஃப்டி-யில் ஸ்ரீராம் ஃபைனான்ஸ், அதானி எண்டர்பிரைசஸ், டாடா மோட்டார்ஸ் பேசஞ்சர் வெஹிக்கிள்ஸ், இன்டர்குளோப் ஏவியேஷன் மற்றும் ஐஷர் மோட்டார்ஸ் ஆகிய பங்குகள் உயர்ந்தும் மறுபுறம் கோல் இந்தியா, டெக் மஹிந்திரா, நெஸ்லே இந்தியா, விப்ரோ, ஓஎன்ஜிசி உள்ளிட்ட பங்குகள் சரிந்தன.

அனைத்து குறியீடுகளும் ஏற்றத்துடன் இன்று முடிவடைந்தன. ஆட்டோ மற்றும் ரியல்டி 6 சதவீதத்திற்கும் மேல் உயர்ந்தன. அதே நேரத்தில், நுகர்வோர் பொருட்கள், எண்ணெய் மற்றும் எரிவாயு, தொலைத்தொடர்பு, உள்கட்டமைப்பு, பொதுத்துறை வங்கி, தனியார் உள்ளிட்ட குறியீடுகள் தலா 3 முதல் 5 சதவீதம் வரை உயர்ந்தன.

வலுவான 4வது காலாண்டு வணிக அறிக்கையைத் தொடர்ந்து டைட்டன் நிறுவனத்தின் பங்குகள் 6% உயர்ந்தன. எல்.ஐ.சி வாரியம் போனஸ் பங்குகளை வழங்குவது குறித்து பரிசீலிக்க உள்ளதால், அதன் பங்குகள் கிட்டத்தட்ட 7% உயர்ந்தன. ஸ்வான் டிஃபென்ஸ் அண்ட் ஹெவி இண்டஸ்ட்ரீஸ் ரூ.1,500 முதல் 3,000 கோடி மதிப்பிலான புதிய ஆர்டரைப் கையகப்படுத்தியதால் அதன் பங்குகள் 5% உயர்ந்தன.

ஆசியப் பங்குச் சந்தைகளில், தென் கொரியாவின் முக்கியக் குறியீடான கோஸ்பி 6.87 சதவீதமும், ஜப்பானின் நிக்கெய் 225 குறியீடு 5.39 சதவீதமும் உயர்ந்தன. ஷாங்காய் சந்தையின் எஸ்எஸ்இ காம்போசிட் குறியீடும், ஹாங்காங்கின் ஹாங் செங் குறியீடும் கணிசமாக உயர்ந்தன. ஐரோப்பியப் பங்குச் சந்தையும் கணிசமான உயர்ந்தன.


நேற்று (செவ்வாய்க்கிழமை) அமெரிக்கப் பங்குச் சந்தைகள் எவ்வித மாற்றமுமின்றி சமமாக நிறைவடைந்தன.

தரவுகளின் அடிப்படையில், அந்நிய நிறுவன முதலீட்டாளர்கள் 8,692.11 கோடி ரூபாய் மதிப்பிலான பங்குகளை விற்பனை செய்துள்ள நிலையில், உள்நாட்டு நிறுவன முதலீட்டாளர்கள் 7,979.50 கோடி ரூபாய் மதிப்பிலான பங்குகளை வாங்கியுள்ளனர்.

சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் எண்ணெய் விலை, 13.89 சதவீதம் சரிந்து பேரல் ஒன்றுக்கு 94.09 அமெரிக்க டாலராக உள்ளது.




இந்த பகுதியில் உங்கள் படைப்புக்கள் வரவேற்கிறோம்



whatsapp No



8122664699

## திருநாங்கூர் திவ்ய தேசம்



ஸ்ரீபுருசோத்தம நாயகி சமேத ஸ்ரீ புருஷோத்தம பெருமாள் ப்ரம்மோற்சவம் ஐந்தாம் நாள் காலை ஹனுமந்த திருவீதி புறப்பாடு

## உடையார்பாளையத்தில் திமுக வேட்பாளர் மதிவேந்தன் தீவிர வாக்கு சேகரிப்பு



**இராசிபுரம், ஏப்.09:** ராசிபுரம் (தனி) சட்டமன்ற தொகுதியில் திமுக வேட்பாளர் டாக்டர் மா.மதிவேந்தன், நாமகிரிப்பேட்டை ஒன்றியப் பகுதிகளில் பொதுமக்களை நேரில் சந்தித்து தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.

தமிழகத்தில் நடைபெறவுள்ள சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு, நாமக்கல் மாவட்டம் ராசிபுரம் (தனி) தொகுதியில் திமுக வேட்பாளராக போட்டியிடும் டாக்டர் மா.மதிவேந்தன் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகிறார்.

அதன் ஒரு பகுதியாக, நாமகிரிப்பேட்டை ஒன்றியத்திற்குட்பட்ட உடையார்பாளையம் பகுதியில் அவர் வீடு தோறும் சென்று பொதுமக்களை சந்தித்து வாக்குகள் சேகரித்தார். இந்த சந்திப்பின்போது, அரசு சாதனைகள் மற்றும் தொகுதி மேம்பாட்டு திட்டங்கள் குறித்து விளக்கி ஆதரவு கோரினார்.

இந்த நிகழ்வில், ராசிபுரம் ஒன்றிய கழகச் செயலாளர் கே.பி. ராமசாமி, தோழமைக்கட்சியினர், உள்ளூர் நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டு ஆதரவு தெரிவித்தனர்.

## விஸ்வாவசு பங்குனி பிரம்மோத்ஸவம்



திருநின்றவூர் ஸ்ரீமத்ஸவித்ரி நாயிகா சமேத ஸ்ரீ பக்தவத்சலப் பெருமாள்- விஸ்வாவசு பங்குனி பிரம்மோத்ஸவம் - 2026 ஐந்தாம் திருநாள் காலை நாச்சியார் திருக்கோலம்

## வாக்காள வள்ளல்களாகிய நீங்கள் இரட்டை இலை சின்னத்தில் வாக்களித்து என்னை அமோகமாக வெற்றி பெறச் செய்ய வேண்டும்: பேரணாம்பட்டு பகுதியில் அதிமுக வேட்பாளர் பரிதா பிரசாரம்!

**வேலூர், ஏப். 09:** குடியாத்தம் தொகுதி அதிமுக வேட்பாளர் ஜி.பரிதா புருஷோத்தமன் காலை 9 மணிக்கு ஆரம்பித்து மொரசபல்லி ,லண்டன்பட்டி, நலங்காநல்லூர், காந்தி நகர், டி.டி மோட்டூர், பெரிய பள்ளம், கமலாபுரம், சிந்தகணவாய், கௌராபேட்டை ,செர்லபள்ளி, கொண்டம்பல்லி, பங்களாமேடு, லாலாபேட்டை, கள்ளிப்பேட்டை, சாத்கர், கோட்டை காலனி ஆகிய ஊர்களில் தீவிரமாக வாக்கு சேகரித்தார்.



வேட்பாளர் பரிதா வருகையை கண்டவுடன் வாக்காளர்கள் மலர்களை தூவி அமோக வரவேற்பு அளித்தனர். இதனையடுத்து அங்கு திரண்ட வாக்காளர்கள் மத்தியில் பேசிய வேட்பாளர் பரிதா: நீங்கள் எனக்கு அளித்த வரவேற்பை நான் மறக்க மாட்டேன். அதேபோல உங்களது வாக்குகள் ஒன்று கூட மாற்று சின்னத்துக்கு போகாமல் இருக்க வேண்டும்.


இரட்டை இலை சின்னத்துக்கு உங்கள் பொன்னான வாக்குகளை சிந்தாமல் சிதறாமல் அளித்து உங்கள் வேட்பாளராகிய என்னை பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்யுமாறு உங்கள் பாதம் தொட்டு கேட்டுக் கொள்கிறேன் என்று ஓட்டு வேட்டையாடினார் பரிதா. குடியாத்தம் தொகுதியில் எனது கால் தடம் படாத இடமே இருக்காது.

வாக்காள வள்ளல்களாகிய உங்களை நான் நேரில் வந்து சந்தித்து உரிமையுடன் வாக்கு கேட்கிறேன் என்றார். பேரணாம்பட்டு ஒன்றிய கழக செயலாளர் பொகளூர் டி. பிரபாகரன் மற்றும் கழக நிர்வாகிகள், கூட்டணி கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள், பொதுமக்கள் உடன் இருந்தனர்.

## மேட்டுப்பாளையம் அருகே பாக்கு தோப்பில் முகாமிட்ட பாகுபலி யானை: விவசாயிகள், தோட்ட தொழிலாளர்கள் அச்சம்

**மேட்டுப்பாளையம், ஏப்.09:** மேட்டுப்பாளையம் அருகே பாக்கு தோப்பில் முகாமிட்ட பாகுபலி யானையால் விவசாயிகள் மற்றும் தோட்ட தொழிலாளர்கள் அச்சமடைந்து உள்ளனர். கோவை மாவட்டம், மேட்டுப்பாளையம் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளான தேக்கம்பட்டி, நெல்லித்துறை, சமயபுரம், ஓடந்துறை, பாலப்பட்டி, வச்சினம்பாளையம், சிறுமுகை, லிங்காபுரம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் கடந்த சில ஆண்டுகளாக பாகுபலி என்ற ஒற்றை காட்டு யானை நடமாட்டம் இருந்து வருகிறது. இந்த யானை பகல் நேரங்களில் வனப்பகுதிக்குள்ளும், இரவு வேளைகளில் அருகில் உள்ள விளைநிலங்களில் புகுந்து அங்கு முகாமிட்டு பயிர்களை சேதம் செய்து வருகிறது.

இந்த நிலையில் நேற்றிரவு மேட்டுப்பாளையம் அடுத்துள்ள கல்லாறு அருகே தனியாருக்கு சொந்தமான பாக்கு தோப்பில் புகுந்த பாகுபலி யானை அங்கு முகாமிட்டது. இதனை கண்ட விவசாயிகள் மற்றும்



தோட்ட தொழிலாளர்கள் அச்சம் அடைந்தனர். இது குறித்து வனத்துறையினருக்கு தகவல் தெரிவித்தனர். இதன்பேரில் விரைந்து வந்த வனத்துறையினர் பாகுபலி யானையை விரட்டி அடித்தனர். நீண்டநேர போராட்டத்திற்கு பின் பாகுபலி யானை மீண்டும் வனப்பகுதிக்குள் சென்றது.

இதனால் விவசாயிகள் மட்டுமின்றி தோட்டங்களில் தங்கி பணிபுரியும் தோட்ட தொழிலாளர்களும் அச்சத்துடன் பணிபுரியும் சூழல் ஏற்பட்டுள்ளது. எனவே, பாகுபலி யானையை அடர்ந்த வனப்பகுதிக்குள் நிரந்தரமாக விரட்ட வனத்துறையினர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள், தொழிலாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## மயிலம் தொகுதியில் முன்னாள் அமைச்சர் சிவி.சண்முகம் இரட்டை இலை சின்னத்திற்கு வாக்கு சேகரிப்பு





**விழுப்புரம், ஏப்.09:** மயிலம் தொகுதியில் முன்னாள் அமைச்சர் சிவி. சண்முகம் இரட்டை இலை சின்னத்திற்கு வாக்கு சேகரிப்பு செய்தார்.

விழுப்புரம் மாவட்டம் மயிலம் சட்டமன்றத் தொகுதியின் தேசிய ஜனநாயக் கூட்டணி கட்சி அதிமுக வேட்பாளர் சிவி.சண்முகம் எம்.பி முதல் வாக்கு சேகரிப்பை வல்லம் வடக்கு ஒன்றியம் பென்னகர் மருத்துவாம்பாடி பெரும்பூண்டி உள்ளிட்ட இடங்களில் செவ்வாய்க்கிழமை இரட்டை இலை சின்னத்திற்கு. வாக்கு சேகரித்தார் அதனைத் தொடர்ந்து செல்லப்பிராட்டி, இல்லோடு மேல் தாங்கல், ஆகிய பல்வேறு கிராமங்களில் நேற்று இரட்டை இலை சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார் உடன் வல்லம் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் விநாயகமூர்த்தி மற்றும் நிர்வாகிகள் தொண்டர்கள்

**அகரம் ராமதாஸ் செய்தியாளர்**

## வேட்பாளர்கள் யாரும் ஊருக்குள் வர வேண்டாம்; போஸ்டர் ஒட்டிய கிராமம்

**அரியலூர், ஏப்.09:** அரியலூரில் ஓட்டு கேட்டு வேட்பாளர்கள் யாரும் ஊருக்குள் வர வேண்டாம் என்று பிச்சனூர் கிராம மக்கள் தெரு தெருவாக போஸ்டர் ஒட்டிய சம்பவம் அரசியல் கட்சியினரிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

சட்டசபை தேர்தலையொட்டி அனைத்து அரசியல் கட்சிகளும் தீவிர ஓட்டு சேகரிப்பில் ஈடுபட்டு வரும் நிலையில், அரியலூர் மாவட்டம் பிச்சனூர் ஊர் மக்களின் செயல் அனைவரின் கவனத்தையும் ஈர்த்துள்ளது. தங்களது கிராமத்திற்கு எந்தவித அடிப்படை வசதிகளும் செய்து தரவில்லை எனக் கூறி ஓட்டுமொத்த கிராமமே





தேர்தலை புறக்கணித்துள்ளது.

இது தொடர்பாக போஸ்டர் ஒட்டி தங்களின் எதிர்ப்பை பதிவு செய்த மக்கள், 'வேட்பாளர்கள் யாரும் ஊருக்குள் வர வேண்டாம்,' எனக் குறிப்பிட்டுள்ளனர்.

அந்தப் போஸ்டரில், 'அரியலூர் மாவட்டம், உடையார்பாளையம் வட்டம் ஜெயங்கொண்டம் ஒன்றியத்திட்பட்ட பிச்சனூர் ஊராட்சியில் சாலை வசதி, தெருவிளக்கு வசதி, சாலை மற்றும் நீர்வள ஆக்கிரமிப்பு அகற்றுதல், மழைநீர் வடிகால் வசதி உள்ளிட்ட பல்வேறு அடிப்படை வசதிகள் செய்து தரக்கோரி கடந்த 5 ஆண்டுகளாக பலமுறை மனுக்கள் அளித்தும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காததையொட்டி வரும் ஏப்ரல் 23ம் தேதி நடைபெறும் தேர்தலை புறக்கணிப்போம். வேட்பாளர்கள் யாரும் ஓட்டு கேட்டு ஊருக்குள் வர வேண்டாம்,' எனக் குறிப்பிட்டுள்ளனர்.

## மின்னல் தாக்கி கல்லூரி மாணவி உயிரிழப்பு

**ராணிப்பேட்டை, ஏப்.09:** அரக்கோணம் அருகே சைனபுரத்தில் மின்னல் தாக்கி கல்லூரி மாணவி தர்ஷினி உயிரிழந்தார். தங்களின் விவசாய நிலத்தில் வேலை செய்து கொண்டிருந்தபோது மின்னல் தாக்கியதில் மாணவி உயிரிழந்த சோகம் ஏற்பட்டுள்ளது.



## ரவுசு மணி

உலகத்திலேயே விலைமதிப்பு இல்லாதது....

நம்மிடம் இருக்கும் பொருட்கள் அல்ல....

நம் உறவுகளும் நட்புகளும் தான்.

V. முத்து ராமகிருஷ்ணன்



## “திட்டங்களை கொண்டு வர முடியாமல் உங்களை தடுப்பது யார்?” - அமைச்சர் பழனிவேல் தியாகராஜனுக்கு சுந்தர்.சி கேள்வி

**மதுரை,ஏப்.09:** “மதுரை மத்திய தொகுதிக்கு ஆளும்கட்சி அமைச்சராக இருந்தும் திட்டங்களை கொண்டு வர முடியாமல் உங்களை தடுப்பது யார்?, ” என்று தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளர் சுந்தர் சி கேள்வி எழுப்பியுள்ளார்.

இது குறித்து அவர் இன்று செய்தியாளர்களிடம் கூறியதாவது: அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் 10 ஆண்டுகள் மத்திய தொகுதி எம்எல்ஏ-வாக இருந்தும் எதுவும் செய்ய முடியவில்லை என்றால், அவர் ஒதுங்கிக் கொள்ள வேண்டும். ஆளும்கட்சி அமைச்சராக இருந்தே எதுவும் இந்த தொகுதிக்கு செய்ய முடியாவிட்டால் இனி என்ன செய்யப்போகிறார். சில திட்டங்களை நிறைவேற்றமுடியவில்லை. அதற்கு சில அரசியல் நிர்பந்தம், அழுத்தம் இருக்கிறது. அதனை வெளியே சொல்ல முடியவில்லை என்று வருத்தப்படுகிறார்.

இதையெல்லாம், ஒரு எம்எல்ஏ, ஆளும்கட்சி அமைச்சர் சொல்கிற வார்த்தையா?. நிதியமைச்சராக இருந்த ஒருவர், அவரது தொகுதியில் மக்களுக்கான திட்டங்களை கொண்டு வர முடியவில்லை என்றால் மக்கள் யாரிடம் சென்று முறையிடுவது. தனக்கு நேரிட்ட நிர்பந்தம் என்ன என்பதை அமைச்சர் வெளிப்படையாக தெரிவிக்க வேண்டும். அவர் வெளிப்படையானவர், உண்மையை சொல்லக்கூடியவர் என்று சொல்கிறார்கள் அல்லவா, அவர் உண்மையை சொல்ல வேண்டியதுதானே?

மதுரை மத்திய தொகுதியில் திட்டங்களை கொண்டு வருவதற்கு யார் உங்களை தடுப்பது?. நீங்கள் வருத்தப்படுவதால் உங்களுக்கு வாக்களித்த மக்கள் கேட்கிறார்கள். அதை சொல்ல வேண்டியது உங்கள் கடமை. அதைவிட்டுவிட்டு, கேள்வி கேட்கும் எங்களைப் பார்த்து அறியாமையில் கேட்கிறோம் என்று சொல்வது நியாயமா?.





நாங்கள் அவரைப் போல் அமெரிக்கா, லண்டனில் சென்று மெத்த படித்தவர்கள் கிடையாது. ஆனால், மக்கள் பிரச்சினையை தெரிந்தவர்கள்.

நான் நடுத்தர குடும்பத்தில் பிறந்து உழைத்து முன்னேறி வாழ்க்கையில் எதிர்நீச்சல் போட்டு வாழ்ந்து கொண்டிருக்கிறேன். இவர்களும் தமிழகத்திற்கு எதுவும் செய்ய மாட்டார்கள். மத்திய அரசுடனும் சண்டைப் போட்டுவிட்டு எதுவும் செய்ய விட மாட்டார்கள். ஐந்து ஆண்டுகளாக அமைச்சராக இருந்து விட்டு முடியாது என்று சொல்லவதற்காகவா மக்கள் உங்களுக்கு வாக்களித்து சட்டபேரவைக்கு அனுப்பி வைத்தார்கள். இப்போது மீண்டும் ஒரு முறை வாய்ப்பு தாருங்கள் என்று எப்படி சொல்கிறீர்கள். மக்கள் ஏமாற தயாராக இல்லை. மக்கள் சக்தி என்ன என்பதை தேர்தலில் காட்டுவார்கள்.

நான் மத்திய தொகுதிக்கு போட்டியிட வந்தபோது மிக கடுமையான போட்டியிருக்கும் என்று கருதிதான் வந்தேன். ஆனால், தற்போது மக்கள் முகத்தை பார்க்கும்போதும், அவர்கள் பாசமாக என்னிடம் பேசுவதை பார்க்கும்போதும் ஒரு மாற்றத்தை கொடுக்க வேண்டும் என்ற வேகம் அவர்களிடம் தெரிகிறது. அவர்களுக்கு இந்த ஆட்சி மேல் மிகப்பெரிய கோபம் இருப்பதும் தெரிகிறது. அமைச்சர் பழனிவேல் தியாகராஜனை கை சுத்தம் என்று சொல்கிறார்கள்.

ஆனால், மாநகராட்சியில் முறைகேட்டில் ஈடுபட்டவர்கள் எல்லாம், அவரது ஆட்கள் தான். எதற்கெடுத்தாலும் புள்ளி விவரத்தை கூறும் அமைச்சர், அதை பற்றி வாய்திறக்கவில்லை. மக்களுக்கு தேவை புள்ளி விவரம் இல்லை. அவர்களுக்கு நல்ல திட்டங்கள்தான் தேவை. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# சுற்றுலா: கோத்தகிரியில் பார்க்க வேண்டிய 6 இடங்கள்!



கோத்தகிரி என்பது கோயம்புத்தூர் மாவட்டத்திற்கு மேற்கே உள்ள மேட்டுப்பாளையத்தில் இருந்து சரியாக 35 கிலோமீட்டர் தொலைவில் உள்ள மலை நகரமாகும். இந்தியாவில் தமிழ்நாடு மாநிலத்தின் அமைந்துள்ள நீலகிரி மாவட்டத்தில் கோத்தகிரி வட்டம் ஊராட்சிய ஒன்றியமாகும்.

கோடை விடுமுறையில்இங்கு பார்க்க வேண்டிய இடங்கள்.

1. உயிலட்டி நீர் வீழ்ச்சி.

இனிமையான தாவரங்களுக்கு மத்தியில்அமைந்திருக்கும்உயிலட்டி நீர்வீழ்ச்சி ஆச்சரியமாகும். படிகளால் ஆன கற்பாறைகள் வழியாக நீர் கீழே விழுந்து அமைதியான மற்றும் அழகிய காட்சியை நம் கண் முன்னே உருவாக்குகிறது. நிதானமான சுற்றுச்சூழல் அமைப்பை உருவாக்குகிறது.மற்றும்அருவிநீரின் சத்தம் நம் வருகையின்போது ஒரு இயற்கையான அழகான தினத்தை பார்க்கும்போது கண்களுக்கு இக் காட்சியை வழங்குகிறது. திறந்திருக்கும் நேரம் -சூரிய உதயம் முதல் சூரிய ஹஸ்தமனம் வரை. நுழைவு கட்டணம் இல்லை.

2.குயின் நீர்வீழ்ச்சி.

கோத்தகிரி தாலுகாவில் மறைந்திருக்கும் இந்த குயின் நீர்வீழ்ச்சி ஒரு மயக்கும் நீர் வீழ்ச்சி. பாறைகளின் பிளவுகள் வழியாக நீர் கீழே விழுவது அழகாகக் காட்டுகிறது. பகல் நேரத்தில் சுற்றுலாவிற்கு பிரபலமான இடம் இது. கோத்தகிரியில் இருந்து 7 கி.மீ தொலைவிலும், கோத்தகிரிபேருந்து நிலையத்தில் இருந்து ஐந்து கிலோ மீட்டர் தொலைவிலும் இது அமைந்துள்ளது. இங்கு பார்வையிட சிறந்த வசதியான இடங்களில் ஒன்றாகும்.

திறந்திருக்கும்நேரம்சூரியஉதயம் முதல் சூரிய அஸ்தமனம்வரை. நுழைவு கட்டணம் இல்லை.

3. கோடநாடு காட்சி முனை.

கோடநாடு வியூ பாயிண்ட் நீலகிரி மலைகளின் மூச்சு அடைக்ககூடிய பரந்த காட்சிகளை அள்ளி வழங்குகிறது. இது மிகவும் அழகிய பாதைகளில் ஒன்றாக புகழ்பெற்றது. இது இயற்கை ஆர்வலர்கள் கட்டாயம் பார்க்கவேண்டிய கோடை விடுமுறை தலமாக அமைகிறது. உருளும் மலைகள் மூடுபனி மூடிய பள்ளத்தாக்குகள், தேயிலைத் தோட்டங்கள், ஆறுகளின் அழகிய பார்வையை அள்ளி வழங்குகிறது.

நேரம் - திங்கள் டு வெள்ளி காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரை

சனி ஞாயிறு - காலை ஒன்பது முதல் மாலை ஆறு மணி வரை. நுழைவுக்கட்டணம் இங்கு இல்லை.

4.கேத்தரின் நீர்வீழ்ச்சி.

கோத்தகிரி சுற்றுலாத் தலங்களில் ஒன்றான கேத்தரின் நீர்வீழ்ச்சி மைசூர் மாவட்ட ஆட்சியர் ஜி.டி காக்பர்னின் துணைவியாரின் பெயர் இடப்பட்டது. இது கோத்தகிரியில் அமைந்துள்ள ஒரு கண்கவர் நீர் வீழ்ச்சியாகும். 250 அடிக்கும் மேல் உயரத்தில் இருந்து வரும் இந்த அழகான நீர்வீழ்ச்சி, நீலகிரி மலைகளின் பசுமையான பசுமைக்கு மத்தியில் ஒரு மயக்கும் அழகிய காட்சியை வழங்குகிறது. இங்கு பல்வேறு கோணங்களில் இருந்தும் பார்வையாளர்கள் அருவிகளின் தொடர்ந்த காட்சிகளை ரசிக்கலாம். மலை ஏறுபவர்கள், பறவையைப் பார்க்கும் ஆர்வலர்கள் தாங்கள் விரும்பும் அனைத்தையும் இங்கு காணலாம்.

காலை ஆறு மணி முதல் நாலு ஆறு மணி வரை பார்க்கலாம். நுழைவுக் கட்டணம் இல்லை.

5. லாங் வுட் ஷோலா காடு

லாங் வுட் ஷோலா என்பது ஒரு அழகிய பசுமையான காடு. இது தீண்டப்படாத அழகின் மத்தியில் அமைதியான பின்னழைகை வாரி வழங்குகிறது. இந்த அடர்ந்த வனப்பகுதி பல்வேறு வகையான தாவரங்கள் விலங்கினங்களுக்கும், உள்ளூர் தாவர இனங்களுக்கும், நரி, காட்டெருமை போன்ற விலங்குகளுக்கும், தாயகமாகவும் அமைதியான சூழ்நிலையில் அழகை ரசிக்கலாம். இங்கு பறவை ஆர்வலர்கள், இயற்கை ஆர்வலர்கள் புகைப்பட கலைஞர்களுக்கு இது ஒரு சொர்க்கம் ஆகும்.

காலை ஒன்பது மணி முதல் மாலை 6 மணி வரை பார்க்கலாம். நுழைவு கட்டணம் - ஒரு நபருக்கு ரூபாய் 100.

6. கில் -கோத்தகிரி

கோத்தகிரியில் இருந்து மேல் வடகிழக்கில் அமைந்துள்ள வினோதமான கோட்டையில் ஒரு வினோதமான கிராமம். தினசரி கூட்ட நெரிசல் இருந்து அமைதியான ஓய்வு அளிக்கிறது. இங்கு தேயிலை தோட்டங்கள், தேயிலைகளை வாடுதல், உருட்டுதல், நொதித்தல், உலர்த்துதல் போன்ற தொலைந்துபோன நடைமுறைகளை கண்டு கழிக்கலாம்.

ஊட்டியில் இருந்து கோத்தகிரிக்கு 28 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது. மலைத்தொடர்கள் வழியாக வளைந்து சென்றால் வரும். கோயம்புத்தூரில் இருந்து பயணம் செய்தாலும் சரி, குன்னூருக்கு செல்வது எளிது. அங்கிருந்து உங்கள் இலக்கை அடைய இருபது கிலோ மீட்டர் பயணம் மட்டுமே.

விமானம் மூலம் - கோயம்புத்தூர் விமான நிலையத்தில் இருந்து கோத்தகிரிக்கும் செல்லலாம்.

## வேலைவாய்ப்பு கார்னர்

### ஆராய்ச்சி நிறுவனத்தில் வாய்ப்பு

இந்திய வரலாற்று ஆராய்ச்சி கவுன்சிலில் காலியிடங்களுக்கு அறிவிப்பு வெளியாகியுள்ளது.

ஜூனியர் ரிசர்ச் பெல்லோஷிப் பிரிவில் மொத்தம் 80 இடங்கள் உள்ளன.

கல்வித்தகுதி : தொடர்புடைய பிரிவில் பி.எச்டி.,

வயது: பிரிவு வாரியாக மாறுபடும்.

தேர்ச்சி முறை: ஆன்லைன் தேர்வு, நேர்முகத்தேர்வு

விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்

விண்ணப்பக்கட்டணம்: ரூ. 500. எஸ்.சி., / எஸ்.டி., பிரிவினருக்கு கட்டணம் இல்லை.

கடைசிநாள்: 10.4.2026

விவரங்களுக்கு: ichr.ac.in

### அழைக்கிறது ரயில் நிறுவனம்



ரயில்வேயின் கீழ் செயல்படும் இந்திய ரயில் நிதி நிறுவனத்தில் (ஐ.ஆர்.எப்.சி.,) காலியிடங்களுக்கு அறிவிப்பு வெளியாகியுள்ளது.

அசிஸ்டென்ட் 16, அசிஸ்டென்ட் மேனேஜர் (நிதி) 7 என மொத்தம் 23 இடங்கள் உள்ளன.

கல்வித்தகுதி: பி.காம்., + ஐ.சி.ஏ.ஐ., / சி.ஏ., / சி.எம்.ஏ., / எம்.பி.ஏ.,

வயது: 18-30 (1.5.2026ன் படி)

தேர்ச்சி முறை: எழுத்துத்தேர்வு, சான்றிதழ் சரிபார்ப்பு, நேர்முகத்தேர்வு

விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்

விண்ணப்பக்கட்டணம்: ரூ. 500. எஸ்.சி., / எஸ்.டி., பிரிவினருக்கு கட்டணம் இல்லை.

கடைசிநாள்: 1.5.2026

விவரங்களுக்கு: irfc.co.in

## தேர்தல் காரணமாக சென்னையில் ஐபிஎல் போட்டிகளை தள்ளி வைக்கக் கோரிய வழக்கு தள்ளுபடி

**சென்னை, ஏப். 9:**

உயர் நீதிமன்றத்தில் சேப்பாக்கம்- திருவல்லிக்கேணி தொகுதி வேட்பாளரான டி.பிரபாகரன் ஏற்கெனவே தாக்கல் செய்திருந்த மனுவில், "தமிழகத்தில் சட்டப்பேரவைத் தேர்தல் வரும் ஏப்.23 அன்று நடைபெறவுள்ளது. சேப்பாக்கம்- திருவல்லிக்கேணி தொகுதியில்தான் சேப்பாக்கம் கிரிக்கெட் மைதானம் அமைந்துள்ளது. தற்போது ஐபிஎல் கிரிக்கெட் போட்டிகள் நடைபெற்று வரும் நிலையில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணி பங்கேற்கும் கிரிக்கெட் போட்டிகள் சேப்பாக்கம் மைதானத்தில் ஏப்.3 மற்றும் ஏப்.11 ஆகிய தேதிகளில் நடைபெறவுள்ளது. தேர்தல் நேரத்தில் கிரிக்கெட் போட்டிகள் நடைபெறுவதால் சட்டம்- ஒழுங்கைப் பராமரிப்பதிலும், போக்குவரத்தை சீரமைப்பதிலும் போலீஸாருக்கு சிக்கல் ஏற்படும்.

குறிப்பாக கிரிக்கெட் ரசிகர்கள் என்ற பெயரில் அரசியல் கட்சியினர் மைதானத்துக்குள் பிரச்சாரம் செய்ய முற்பட்டு பிரச்சினை ஏற்பட்டால் வீரர்கள் மற்றும் கிரிக்கெட் ரசிகர்களுக்கான பாதுகாப்பை உறுதி செய்வதிலும் சிக்கல் ஏற்படும். எனவே இந்த கிரிக்கெட் போட்டிகளை தேர்தல் முடிந்த பிறகு நடத்தும் வகையில் தள்ளிவைக்க உத்தரவிட வேண்டும்" எனக் கோரியிருந்தார். இந்த வழக்கு தலைமை நீதிபதி எஸ்.ஏ.தர்மாதிகாரி மற்றும் நீதிபதி ஜி.அருள் முருகன் ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது.

அப்போது நீதிபதிகள், "ஏற்கெனவே ஒரு போட்டி அமைதியான முறையில் முடிந்துவிட்டது. அதில் எந்த விதிமீறல்களும் இல்லை. அடுத்த போட்டியையும் முடிந்தால் கண்டு ரசியுங்கள். வெறும் ஊகத்தின் அடிப்படையில் தொடரப்பட்டுள்ள வழக்கை ஏற்க முடியாது" என்றனர். அதையடுத்து மனுவை வாபஸ் பெறுவதாக மனுதாரர் தரப்பில் தெரிவிக்கப்பட்டதையடுத்து, அதற்கு அனுமதியளித்த நீதிபதிகள், வழக்கைத் தள்ளுபடி செய்து உத்தரவிட்டுள்ளனர்.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com
இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புபவர்கள்.
"welcome Tamilnadu" என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழ்உள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்
94452 65389

## தஞ்சாவூரில் பிற்கால கல்வெட்டு கண்டெடுப்பு: வரலாற்று ஆய்வாளர்கள் தகவல்

**தஞ்சாவூர், ஏப்.9:**

தஞ்சை மாநகர ராஜகோபாலசாமி தெருவில் உள்ள கிட்டப்பா வட்டாரத்தில் பிற்கால கல்வெட்டு ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. கல்வெட்டை தஞ்சை சரசுவதி மகால் நூலக தமிழ்ப்பண்டிதரும், வரலாற்று ஆய்வாளருமான மணிமாறன், ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர் தில்லை கோவிந்தராஜன், பட்டதாரி ஆசிரியர் ஜெயலட்சுமி, ஏடகம் சுவடியியல் மாணவர் சரவணன் ஆகியோர் ஆய்வு செய்தனர். பின்னர் அவர்கள் கூறியதாவது:-

பொதுவாக தமிழகத்தில் அறச்சாலைகளாக சத்திரங்களும், மடங்களும் ஊர்கள் தோறும் அமைக்கப்பட்டிருந்தன. அன்றைய நாட்களில் வழிப்போக்கர்கள் ஓரிடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்கு செல்லும் வேளையில் அச்சத்திரங்களில் தங்கியிருந்து உணவருந்தி செல்வது வழக்கமாக இருந்தது.

அவ்வாறு செல்பவர்களுக்கு ஏதேனும் நோய் ஏற்பட்டால் அவருக்கு மருத்துவ சிகிச்சை அளிக்கும் வசதியும் அங்கேயே இருந்தது. இவை தருமக்கட்டளை என்ற பெயரில் பல இடங்களில் நடைபெற்று வந்தது. யாரோ ஒருவராலோ அல்லது ஒரு சிலரோ சேர்ந்து இத்தகைய தருமகாரியத்துக்கு நிலமும், பொருளும் நிரந்தரமாக கிடைக்குமாறு வழங்கியிருந்தனர்.



இந்த சத்திரங்களின் நிர்வாகம் பற்றி கி.பி.1855-ம் ஆண்டு ஆவணம் ஒன்று சத்திரத்திற்கு வருகின்ற வருவாயில் ஒரு குறிப்பிட்ட சதவீதத்தை கண்டிப்பாக சேமித்து வைக்க வேண்டும். இது எதிர்கால நெருக்கடிகளை சமாளிக்க உதவும். வழிப்போக்கர், வயோதிகர், குழந்தைகள் முதலியவர்களுக்கே உணவு வழங்க வேண்டும். உழைக்காமல் வரக்கூடிய சோம்பேறிகளுக்கு இங்கே தங்கவும், உணவளிக்கவும் கூடாது என்றும் கூறுகிறது.

இதேபோன்று ஒரு அறக்கட்டளைதான் கிட்டப்பா வட்டாரத்தில் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டுச் செய்தியாகும். சுமார் 14 அடி அகலமும், 2½ அடி உயரமும் கொண்ட இந்த கல்வெட்டில் 30 வரிகள் காணப்படுகின்றது. கி.பி.1889-ம் ஆண்டு ஜனவரி மாதம் 17 தமிழ் சர்வதாரி ஆண்டு தை மாதம் 6 என குறிப்பிடப்பட்டுள்ள இந்த கல்வெட்டில் கி.பி. 1887-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 1-ந்தேதி தஞ்சை கோட்டைக்குள் ராஜகோபால சாமி கோவில் வீதி அண்ணு பாட்டகர் சொல்படி நாகோ பாட்டகர் செய்த தருமச்செயலை அவருடைய தமையன் வெங்கோ பாட்டகர் எழுதி வைத்த உயில் என்று குறிப்பிடுகிறது.

துவாதசி கட்டளை தருமத்திற்காக அவருடைய வீட்டின் மேல்புறமும் அதற்காக வைக்கப்பட்டுள்ள நிரந்தர வைப்பு நிதி ரூ.400-ல் இருந்து கிடைக்கக்கூடிய வட்டித்தொகையை கொண்டு 10 பிராமணருக்கு அவரும், அவருடைய தமக்கை காமாட்சி அம்மாளும் அன்னம் வழங்கி தருமம் நடத்தி வருவதை குறிப்பிடுவதோடு, இவர்களுக்கு பிறகு மேற்படி தருமத்தை தமக்கை மகள் கங்காபாய் அம்மாள் நடத்தி வர வேண்டும் என்பதனையும், இதனை அனைவரும் அறியும்படியாக கல்வெட்டு வெட்டியதையும் குறிப்பிடுகின்றனர். கொடை அளித்தவர்களின் பெயர்களை காணும்போது மராட்டிய வழி வந்தவர்கள் என்பதை அறிய முடிகிறது.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

## உள்நாட்டு, சர்வதேச விமான கட்டணங்கள் உயர்வு; முன்பதிவு செய்திருந்தால் கட்டண உயர்வு பொருந்தாது

**சென்னை, ஏப்.9:**

அமெரிக்கா, இஸ்ரேல் - ஈரான் போர் காரணமாக, எரிபொருட்களின் விலை, பல மடங்கு அதிகரித்துள்ளது. குறிப்பாக, விமானங்களுக்கு பயன்படுத்தும் எரிபொருள் விலை கடுமையாக உயர்ந்துள்ளதால், ஏர் இந்தியா மற்றும் ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் விமான நிறுவனங்கள், பயணிகளுக்கான விமான டிக்கெட் கட்டணங்களை உயர்த்தியுள்ளன. இந்த கட்டண உயர்வு இன்று (8ம் தேதி) முதல் அமலுக்கு வருகிறது.

ஏற்கெனவே, கடந்த மார்ச் 12-ம் தேதி விமான டிக்கெட் கட்டணங்கள் உயர்த்தப்பட்ட நிலையில், 2-வது முறையாக கட்டண உயர்வால் பயணிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். சிவில் விமான போக்குவரத்து துறை அமைச்சகம், உள்நாட்டு விமான கட்டணங்களை 25 சதவீதத்துக்கு மேல் உயர்த்த கூடாது என்று கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. எனவே, உள்நாட்டு விமான பயணங்களுக்கு கட்டண உயர்வு ரூ.299 முதல், ரூ.899 வரை அதிகரித்துள்ளது.

அதன்படி, முதல் 500 கிலோ மீட்டர் வரை ரூ.299, 501-ல் இருந்து 1,000 கிலோ மீட்டர் வரை ரூ.399, 1,001 முதல் 1,500 கிலோ மீட்டர் வரை ரூ.549, 1,501 முதல் 2,000 கிலோ மீட்டர் வரை ரூ.749, 2,000 கிலோ மீட்டருக்கு மேல் ரூ.899 என கட்டணம் உயர்ந்துள்ளது.

## 'வீட்டு உபயோக காஸ் சிலிண்டர் முன்பதிவு செய்து 10 நாட்கள் ஆகியும் கிடைக்கவில்லை!'



**சென்னை, ஏப். 9:**

ஈரான் மீதான அமெரிக்கா- இஸ்ரேல் போரினால், இந்தியா உட்பட பல்வேறு நாடுகளில் எரிபொருள் விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் தற்போது எல்பிஜி காஸ் சிலிண்டர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. வீட்டு உபயோக சிலிண்டர் விநியோகிக்கப்படும் நிலையில், வணிக பயன்பாட்டு சிலிண்டர் நிறுத்தப்பட்டுள்ளது. இதனால், பெரும்பாலான ஓட்டல்கள் மூடப்பட்டுள்ளன.

இதற்கிடையில், சிலிண்டர் முன்பதிவு கால இடைவெளியை நகர்புறங்களில் 21 நாட்களில் இருந்து 25 நாட்களும், கிராமப் புறங்களுக்கு 45 நாட்கள் இடைவெளி என மத்திய அரசு அறிவித்தது. சமையல் காஸ் சிலிண்டர் போதுமான அளவு கையில் இருப்பதாகவும், தட்டுப்பாடு இன்றி காஸ் சிலிண்டர் விநியோகிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டாலும், சென்னையில் சில இடங்களில் உள்ள காஸ் ஏஜென்சி அலுவலங்களின் முன்பு காலி சிலிண்டர்களுடன் பொதுமக்கள் நிற்கின்றனர்.

வில்லிவாக்கம், வடபழனி உள்பட பல இடங்களில் காஸ் ஏஜென்சி அலுவலகங்களில் வாடிக்கையாளர்கள் குவிந்து வருகின்றனர். முன்பதிவு செய்ததற்கான குறுந்தகவல் செல்போன்களுக்கு வந்து 10 நாட்கள் ஆகியும், சிலிண்டர் விநியோகம் செய்ய வில்லை என அவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர். பொதுவாக காஸ் சிலிண்டர் முன்பதிவு செய்து டெலிவரிக்கான அங்கீகார குறியீடு (டிஏசி) எண் ஒதுக்கீடு செய்த பின்னர் குறிப்பிட்ட நாட்களுக்குள் காஸ் சிலிண்டர் விநியோகம் செய்யப்பட வேண்டும். ஆனால், பலருக்கு டிஏசி எண் ஒதுக்கப்பட்டு பல நாட்கள் ஆகியும் சிலிண்டர் டெலிவரி செய்யப்படவில்லை.

இது குறித்து, சென்னையை சேர்ந்த வாடிக்கையாளர்கள் கூறியதாவது: நகர்புறங்களில் 25 நாட்களுக்கு பிறகு, காஸ் சிலிண்டர் முன்பதிவு செய்ய கட்டுப்பாடுகளை கொண்டு வந்துள்ளனர். இதன்படி, முறையாக முன்பதிவு செய்து, 10 நாட்களை கடந்துவிட்டது. இதுவரை டிஏசி எண் வரவில்லை. இதன் பிறகு, எப்போது டெலிவரி செய்வார்கள் என்பதே தெரியவில்லை.

இதுதவிர, டிஏசி எண் வந்த வாடிக்கையாளர்களுக்கு எப்போது விநியோகம் செய்வார்கள் எனவும் தெரியவில்லை. ஏஜென்சியில் கேட்டால், உங்களுக்கு சிலிண்டர் ஒதுக்கிவிட்டோம். டெலிவரி செய்பவர்களிடம் கேளுங்கள் என்று கூறுகின்றனர். டெலிவரி செய்பவர்களிடம் கேட்டால் சிலிண்டர் வரவில்லை என்கின்றனர்.

சம்பந்தப்பட்ட ஏஜென்சிகளுக்கு போன் போட்டாலும் எடுப்பதில்லை. நேரில் சென்று முறையிட்டாலும், சரியாக பதில் கூறுவது இல்லை. வீட்டு உபயோக சிலிண்டர்களை வாடிக்கையாளர் களுக்கு கொடுக்காமல் ஓட்டல்களில் அதிக விலைக்கு விற்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர்கள் கூறினர்.

# மாற்றுத்திறனாளிகளுக்கான இடஒதுக்கீடு இல்லாத காலிப் பணியிடங்கள்: எஸ்சி, எஸ்டி, ஓபிசிகள் விண்ணப்பிக்கலாம்!

**புதுடெல்லி, ஏப்.9:**

மேற்கு வங்க மின் பகிர்மான நிறுவனத்தில் இளநிலை பொறியாளர் பணியிடத்துக்கு நடைபெற்ற ஆள்தேர்வில், ஒரு பணியிடம் இடஒதுக்கீடு இல்லாத பார்வைத்திறன் குறைவான மாற்றுத்திறனாளிகளுக்கு ஒதுக்கப்பட்டது. ஆனால் பார்வைத்திறன் குறைவான ஓபிசி வகுப்பைச் சேர்ந்த ஒருவருக்கு அதிக தகுதியிருந்ததால், அந்தப் பணியிடத்தில் அவர் நியமிக்கப்பட்டார்.



இதற்கு எதிராக அந்தப் பணியிடத்துக்குத் தேர்வு செய்யப்படாத பொதுப் பிரிவைச் சேர்ந்த மற்றொரு மாற்றுத்திறனாளி கொல்கத்தா உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார். அவரின் மனுவில், தான் இடஒதுக்கீடு இல்லாத தகுதிவாய்ந்த தேர்வராக இருந்ததால் தனக்குதான் அந்தப் பணியிடம் வழங்கப்பட்டிருக்க வேண்டும் என்று தெரிவித்தார். இந்த மனுவை விசாரித்த உயர்நீதிமன்றம், குறைந்த தகுதியைக் கொண்ட மனுதாரரை அந்தப் பணியிடத்தில் நியமிக்குமாறு மின் பகிர்மான நிறுவனத்துக்கு உத்தரவிட்டது.

இந்த உத்தரவுக்கு எதிராக மின் பகிர்மான நிறுவனம் தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனுவை விசாரித்த உச்சநீதிமன்றம் செவ்வாய்க்கிழமை தீர்ப்பளித்தது. அப்போது நீதிபதிகள் சஞ்சய் கரோல், என். கோட்டீஸ்வர் சிங் ஆகியோர் அடங்கிய அமர்வு கூறியதாவது: மாற்றுத்திறனாளிகளுக்கான இடஒதுக்கீடு இல்லாத பணியிடத்தில் நியமிக்க பொதுப் பிரிவைச் சேர்ந்த தேர்வர் ஒருவர் இருக்கிறார் என்ற ஒரே காரணத்துக்காக, ஓபிசி, எஸ்சி, எஸ்டி போன்ற இடஒதுக்கீடு பிரிவைச் சேர்ந்த மிகவும் தகுதிவாய்ந்த மாற்றுத்திறனாளி அந்தப் பணியிடத்தில் நியமிக்கப்படுவதைத் தடுக்க முடியாது.

இடஒதுக்கீடு சட்டப்படி, இடஒதுக்கீடு இல்லாத பிரிவு அல்லது பொதுப் பிரிவு என்பது எஸ்சி, எஸ்டி அல்லது ஓபிசி போன்ற எந்தவொரு சமூகப் பிரிவையும் குறிக்கவில்லை. இடஒதுக்கீடு இல்லாத பிரிவு அல்லது பொதுப் பிரிவின் கீழ் வரும் பணியிடங்கள் எந்தவொரு சமூகத்தினருக்குமானது அல்ல. அந்தப் பணியிடங்களுக்கு அனைத்து சமூகங்கள், சிறப்புப் பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் விண்ணப்பிக்கலாம். இடஒதுக்கீடு இல்லாத பிரிவு அல்லது பொதுப் பிரிவு பணியிடங்கள் மாற்றுத்திறனாளிகள் என்ற சிறப்புப் பிரிவினருக்கு ஒதுக்கப்பட்டிருந்தால், அந்தப் பணியிடத்துக்கு எஸ்சி, எஸ்டி அல்லது ஓபிசி என அனைத்து சமூகங்களையும் சேர்ந்த மாற்றுத்திறனாளிகள் விண்ணப்பிக்கலாம்.

இடஒதுக்கீடு இல்லாத பிரிவின் கீழ் மாற்றுத்திறனாளிகளுக்கு ஒதுக்கப்படும் பணியிடத்துக்குப் போட்டியிட எஸ்சி, எஸ்டி, ஓபிசி என அனைத்து சமூகங்களையும் சேர்ந்த மாற்றுத்திறனாளிகளுக்கு சம உரிமை உள்ளது என்று தெரிவித்தது. இதைத்தொடர்ந்து கொல்கத்தா உயர்நீதிமன்ற உத்தரவை ரத்து செய்து நீதிபதிகள் அமர்வு தீர்ப்பளித்தது.

# க்ரைம் கார்னர்

## எஸ்ஐயை தாக்கிய இளைஞர் துப்பாக்கியால் சுட்டுப்பிடிப்பு

**தென்காசி, ஏப்.9:**

ஆலங்குளம் அருகே கள் இறக்கியதை கண்டித்ததால், காவல் உதவி ஆய்வாளரை தாக்கிய இளைஞர் துப்பாக்கியால் சுட்டு பிடிக்கப்பட்டார்.

தென்காசி மாவட்டம், ஆலங்குளம் அருகே உள்ள மருதம்புத்தூர் கிராமத்தில் பனை மரத்தில் இருந்து சட்டவிரோதமாக கள் இறக்குவதாக போலீஸாருக்குதகவல் கிடைத்ததால் ஆலங்குளம் காவல் உதவி ஆய்வாளர் இசக்கிராஜா நேற்று காலை அப்பகுதிக்குச் சென்று சோதனையில் ஈடுபட்டார். அப்போது, பனை மரத்தில் இருந்து இறங்கிய மருதம்புத்தூர் மேலத் தெருவைச் சேர்ந்த மணிகண்டன் (32) என்பவரிடம், உதவி ஆய்வாளர் விசாரணை நடத்தினார். இதில் வாக்குவாதம் ஏற்பட்டு ஒருவரையொருவர் தாக்கிக் கொண்டனர். இதனால், இசக்கிராஜா தற்காப்புக்காக தன்னிடம் இருந்த துப்பாக்கியால் மணிகண்டனை காலில் சுட்டுள்ளார். இது குறித்த தகவலின்பேரில், ஏடிஎஸ்பி சங்கர், காவல் ஆய்வாளர் ஆடிவேல் மற்றும் போலீஸார் விரைந்து வந்து, இருவரையும் தென்காசி அரசு மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. தென்காசி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மணிவண்ணன், மருத்துவமனைக்குச் சென்று, உதவி ஆய்வாளரிடம் நலம் விசாரித்து, நடந்த சம்பவங்களை கேட்டறிந்தார். மருத்துவமனையில் பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. மோதலில் உதவி ஆய்வாளர் துப்பாக்கியால் சுட்ட சம்பவம் அந்தப் பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

## கொலை முயற்சி வழக்கு குற்றவாளி தடுப்பு காவல் சட்டத்தில் கைது

**திருநெல்வேலி, ஏப்.9:**

திருநெல்வேலி மாவட்டம், முக்கூடல் பகுதியில் கொலை முயற்சி, மிரட்டல் உள்ளிட்ட குற்ற செயல்களில் ஈடுபட்ட வீரவநல்லூர், கொட்டாரக்குறிச்சியை சேர்ந்த உச்சிமாகாளி என்பவரின் மகன் சங்கர்கணேஷ் (வயது 31) கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

மேற்சொன்ன நபர் கொலை முயற்சி, மிரட்டல், வழிப்பறி போன்ற குற்றச் செயல்களில் ஈடுபட்டு பொதுமக்களை அச்சுறுத்தி வருவதாக முக்கூடல் போலீஸ் இன்ஸ்பெக்டர் சங்கர நாராயணன் கவனத்திற்கு வந்தது. இதனையடுத்து அவர் மேற்சொன்ன நபர் மீது தமிழ்நாடு தடுப்பு காவல் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்குமாறு மாவட்ட எஸ்.பி.யிடம் வேண்டுகோள் விடுத்தார். அவரது வேண்டுகோளின்பேரில், திருநெல்வேலி மாவட்ட எஸ்.பி. பிரசண்ணகுமார் பரிந்துரையின்படி, மாவட்ட கலெக்டர் சுகுமார் உத்தரவுப்படி சங்கர்கணேஷ், தமிழ்நாடு தடுப்பு காவல் சட்டத்தின் கீழ் பாளையங்கோட்டை மத்திய சிறையில் நேற்று அடைக்கப்பட்டார். இந்த ஆண்டில் மட்டும் இதுவரை 41 நபர்கள் குண்டர் தடுப்பு சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

## ரூ.50 ஆயிரம் லஞ்சம் வாங்கிய வனசரக அலுவலர் கைது

**ஊத்துக்கோட்டை, ஏப்.9:**

ஊத்துக்கோட்டை அடுத்த சீத்தஞ்சேரி கிராமத்தில் வனச்சரக அலுவலகம் உள்ளது. செங்குன்றம் அலுவலக கட்டுப்பாட்டில் உள்ள இந்த அலுவலகத்தில் வனச்சரக அலுவலராக சரவணன் என்பவர் பணியாற்றி வருகிறார். இவரிடம் புல்லரம்பாக்கத்தைச் சேர்ந்த சாந்தி (40வயது) என்பவர் செம்மரக்கட்டைகளை வாங்கி, விற்பதற்கான ஒப்புதல் கடிதத்திற்கு விண்ணப்பத்திருந்தார். பின்னர் வனச்சரக அலுவலர் சரவணன் 50,000 ரூபாய் லஞ்சமாக கேட்டுள்ளார். இதனால் அதிர்ச்சியடைந்த சாந்தி திருவள்ளூர் லஞ்ச ஒழிப்பு போலீசில் புகாரளித்தார்.

மேலும் லஞ்ச ஒழிப்பு போலீசாரின் அறிவுறுத்தலின்படி சீத்தஞ்சேரி வனத்துறை அலுவலகத்தில் இருந்த வனச்சரக அலுவலர் சரவணனிடம் 50,000 ரூபாயை சாந்தி வழங்கினார். அப்போது மறைந்திருந்த லஞ்ச ஒழிப்புத் துறை டி.எஸ்.பி., ஜெயக்குமார் தலைமையிலான போலீசார் சரவணனை கையும்களவுமாக மடக்கி பிடித்து கைது செய்தனர்.

# விளையாட்டு செய்திகள்

## ஆசிய குத்துச்சண்டை சாம்பியன்ஷிப்: மீனாட்சி, விஸ்வநாத் இறுதிப்போட்டிக்கு முன்னேற்றம்

**உலான்பத்தார், ஏப்.9:**

ஆசிய குத்துச்சண்டை சாம்பியன்ஷிப் போட்டி மங்கோலியா தலைநகர் உலான்பத்தாரில் நடந்து வருகிறது. இதில் இந்தியர்கள் வெகுவாக ஆதிக்கம் செலுத்துகிறார்கள். நேற்று நடந்த பெண்களுக்கான 48 கிலோ எடைப்பிரிவின் அரையிறுதியில் இந்திய வீராங்கனை மீனாட்சி ஹூடா 4-1 என்ற கணக்கில் தாய்லாந்தின் திப்சாட்சா யோத்வாரீயை தோற்கடித்து இறுதிப்போட்டிக்கு முன்னேறினார்.

57 கிலோ எடைப்பிரிவின் அரையிறுதியில் உலக சாம்பியனான இந்திய வீராங்கனை ஜேஸ்மின் லம்போரியா 3-2 என்ற கணக்கில் உஸ்பெகிஸ்தானின் நிகினா உக்தமோவாவை வீழ்த்தி இறுதிப்போட்டிக்குள் நுழைந்தார். அவர் மகுடத்துக்கான இறுதி ஆட்டத்தில் தாய்லாந்தின் புன்ரவீ ருயென்ரோசை எதிர்கொள்கிறார்.

ஆண்களுக்கான 50 கிலோ எடைப்பிரிவின் அரையிறுதியில் இந்திய வீரரான தமிழகத்தை சேர்ந்த விஸ்வநாத் சுரேஷ் 5-0 என்ற கணக்கில் ஹூதைபா எஷிசை (ஜோர்டான்) துவம்சம் செய்து இறுதிப்போட்டியை எட்டினார். விஸ்வநாத் முந்தைய சுற்றில் நடப்பு சாம்பியனும், நம்பர் ஒன் வீரருமான சன்ஜார் தாஷ்கன்பேவுக்கு (கஜகஸ்தான்) அதிர்ச்சி அளித்து இருந்தார் என்பது நினைவுகூரத்தக்கது.

60 கிலோ எடைப்பிரிவின் அரையிறுதியில், உலகக் கோப்பையில் பதக்கம் வென்றவரான இந்திய வீரர் சச்சின் சிவாச் 4-1 என்ற கணக்கில் தாய்லாந்தின் சாக்தா ருவாம்தமை சாய்த்தார். மற்ற அரையிறுதி ஆட்டங்களில் 75 கிலோ எடைப்பிரிவில் இந்திய வீரர் ஆகாஷ் 1-4 என்ற கணக்கில் உஸ்பெகிஸ்தானின் ஜவோகிர் அப்துரகிமோவிடமும், 85 கிலோ பிரிவில் இந்தியாவின் லோகேஷ் 0-5 என்ற கணக்கில் உஸ்பெகிஸ்தானின் ஜசுர்பெக் யுல்டோஷேவிடமும், 90 கிலோவுக்கு மேற்பட்ட எடைப்பிரிவில் நரேந்தர் 1-4 என்ற கணக்கில் சீனாவின் பாயிகெவுசி டானாபியெக்கிடமும், 90 கிலோ பிரிவில் ஹர்ஷ் சவுத்ரி 1-4 என்ற கணக்கில் தஜிகிஸ்தானின் பர்விஸ் கரிமோவிடமும் தோல்வி கண்டு வெண்கலப்பதக்கத்துடன் திருப்தி கண்டனர். இந்த போட்டி தொடரில் இந்தியாவை சேர்ந்த 6 வீராங்கனைகள், 2 வீரர்கள் இறுதிப்போட்டியில் களம் காணுகிறார்கள்.

## ஐ.எஸ்.எல். கால்பந்து: சென்னை அணி 3-வது தோல்வி

**சென்னை, ஏப்.9:**

14 அணிகள் இடையிலான 12-வது இந்தியன் சூப்பர் லீக் (ஐ.எஸ்.எல்.) கால்பந்து போட்டி இந்தியாவின் பல்வேறு நகரங்களில் நடந்து வருகிறது. இதில் சென்னை நேரு ஸ்டேடியத்தில் நேற்று இரவு நடந்த ஆட்டத்தில் முன்னாள் சாம்பியனான சென்னையின் எப்.சி. அணி, அறிமுக அணியான இன்டர் காஷியை எதிர்கொண்டது.

விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில் பந்து சென்னை பக்கமே (66 சதவீதம்) அதிகமாக சுற்றிக் கொண்டிருந்தாலும் அதிர்ஷ்டம் என்னவோ இன்டர் காஷிக்கு தான் இருந்தது. இந்த நிலையில் ஆட்ட நேர முடிவில் சென்னை அணி 1-2 என்ற கோல் கணக்கில் தோல்வி அடைந்தது. 6-வது லீக்கில் ஆடிய சென்னை அணிக்கு இது 3-வது தோல்வியாகும்.

# மேற்காசிய பதற்றம்: இதுவரை 10,000-க்கும் மேற்பட்ட இந்திய விமான சேவைகள் ரத்து

**புதுடெல்லி, ஏப்.9:**

டில்லியில் செவ்வாய்க்கிழமை செய்தியாளர்களைச் சந்தித்த விமானப் போக்குவரத்துத் துறை இணைச் செயலர் அசாங்பா சுபா அவ் இது தொடர்பாக கூறியதாவது: விமானங்கள் தாக்கப்படும் அபாயம், விமானங்கள் பறக்க விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் உள்ளிட்டவை சாவதேச விமான சேவைகளையும், அதை அளிக்கும் நிறுவனங்களையும் வெகுவாக பாதித்துள்ளது.

மத்திய கிழக்கு நாடுகளுக்கு இந்திய விமான நிறுவனங்கள் நாள்தோறும் 300 முதல் 350 சேவைகளை இயக்குவது வழக்கம். இப்போது அந்த எண்ணிக்கை 80 முதல் 90-ஆக குறைந்துவிட்டது. பிப்ரவரி 28-ஆம் தேதி ஈரான் மீதான அமெரிக்க-இஸ்ரேல் தாக்குதல் தொடங்கியதில் இருந்து இந்திய விமான நிறுவனங்களின் 10,000-க்கும் மேற்பட்ட சேவைகள் இதுவரை ரத்து செய்யப்பட்டுள்ளன.

முற்றிலும் எதிர்பாராத நேரத்தில் எழுந்த இந்த பிரச்னையால் சாவதேச அளவிலும் விமான சேவை பாதிக்கப்பட்டுள்ளது. இதனால், பல நாடுகளுக்குப் பயணிப்பதில் தொடர்ந்து சிக்கல் நிலவுகிறது. ஐரோப்பா, வட அமெரிக்க நாடுகளுக்குச் செல்லும் இந்திய விமானங்கள் மாற்றுப் பாதை வழியாக நீண்ட தொலைவு சுற்றிச் செல்ல வேண்டியுள்ளது. இதனால் பயண நேரமும், செலவும் அதிகரித்துவிட்டது.

இந்த நீண்ட பயணத்தால் விமானிகளுக்கு ஏற்படும் பிரச்னைகளைத்தவிர்க்கவிமானப் பணி காலக் கட்டுப்பாட்டில் தற்காலிக தளர்வுகளை இந்திய விமானப் போக்குவரத்துத் துறை இயக்குநரகம் அறிவித்துள்ளது.

சாவதேச அளவில் விமான எரிபொருள் விலையும் அதிகரித்துள்ளது. ஆனால், இந்தியாவில் அதைக் கட்டுப்பாட்டில் வைத்துள்ளோம். உள்நாட்டு விமான சேவை நிறுவனங்களுக்கு விலையேற்றம் மிகக் குறைவாகவே உள்ளது. இதன்மூலம் உள்நாட்டு விமானக் கட்டணம் அதிக உயர்வு இல்லாமல் நிலையாக உள்ளது. பயணிகள் பாதுகாப்பு, வசதிக்கு தொடர்ந்து முன்னுரிமை வழங்கப்படுகிறது என்றார்.

# மணிப்பூரில் மீண்டும் வன்முறை, துப்பாக்கிச்சூட்டில் 4 பேர் உயிரிழப்பு

**சென்னை, ஏப்.9:**

மணிப்பூரின் விஷ்ணுபூர் மாவட்டத்தில் ஒரு வீட்டின் மீது தீவிரவாதிகள் குண்டு வீசி தாக்கியதில் 2 குழந்தைகள் உயிரிழந்தனர். அவர்களின் தாய் பலத்த காயமடைந்தார்.



இந்தச் சம்பவத்துக்கு எதிராகப் போராட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்கள், மத்திய ரிசர்வ் போலீஸ் படை (சிஆர்பிஎஃப்) முகாமுக்குள் புகுந்து, அங்கிருந்த பொருள்களை சூறையாடினர். அப்போது, பாதுகாப்புப் படையினர் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் இருவர் உயிரிழந்தனர். மேலும் 5 பேர் காயமடைந்தனர். இந்தச் சம்பவங்களால் மாநிலத்தில் மீண்டும் பதற்றமான சூழல் ஏற்பட்டுள்ளது.

மணிப்பூரில் மைதேயி சமூகத்தினர் மற்றும் குகி பழங்குடியினர் இடையே கடந்த 2023-இல் ஏற்பட்ட கலவரத்தால் பெருமளவில் உயிரிழப்புகள் மற்றும் பொருள்சேதங்கள் நேரிட்டன. கடந்த ஆண்டுமுதல் மோதல்கள் குறைந்தபோதிலும், இரு குழுக்களின் தீவிரவாதிகள் அவ்வப்போது தாக்குதல் நடத்துவது தொடர்கதையாக உள்ளது.

மாநிலத்தில் இதுவரை நிகழ்ந்த வன்முறைகளில் 260-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துவிட்டனர். ஆயிரக்கணக்கானோர் வீடிழந்து, நிவாரண முகாம்களில் தொடர்ந்து தங்கியுள்ளனர்.

மணிப்பூர் முதல்வராக இருந்த பாஜகவை சேர்ந்த பிரேன் சிங், கடந்த ஆண்டு பிப்ரவரியில் பதவி விலகியதைத் தொடர்ந்து, அங்கு குடியரசுத் தலைவர் ஆட்சி அமல்படுத்தப்பட்டது. கடந்த பிப்ரவரியில் குடியரசுத் தலைவர் ஆட்சி விலக்கப்பட்டு, பாஜகவின் யும்நாம் கெம்சந்த் சிங் புதிய முதல்வரானார்.

2 குழந்தைகள் உயிரிழப்பு: புதிய அரசு பொறுப்பேற்று 2 மாதங்களே ஆகும் சூழலில், மைதேயி சமூகத்தினர் அதிகம் வாழும் விஷ்ணுபூர் மாவட்டத்தின் மொய்ரங் பகுதியில் ஒரு வீட்டின் மீது செவ்வாய்க்கிழமை அதிகாலை தீவிரவாதிகள் குண்டுவீசி தாக்குதல் நடத்தினர். வீட்டில் தூங்கிக் கொண்டிருந்த 5 வயது சிறுவன் மற்றும் 6 மாத பெண் குழந்தை உயிரிழந்தனர். அவர்களின் தாய் படுகாயமடைந்ததாக காவல் துறையினர் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தைக் கண்டித்து போராட்டத்தில் ஈடுபட்ட உள்ளூர் மக்கள், அங்குள்ள பெட்ரோல் நிலையம் அருகே 2 டேங்கர் லாரிகள் மற்றும் மற்றொரு லாரிக்கு தீவைத்தனர். மொய்ரங் காவல் நிலையம் முன் டயர்களை தீயிட்டு கொளுத்தியதுடன், தற்காலிக காவல் சாவடியை சூறையாடினர்.

துப்பாக்கிச்சூட்டில் 2 பேர் உயிரிழப்பு: இதனிடையே, குண்டுவீச்சு நடந்த இடத்தில் இருந்து 100 மீட்டர் தொலைவில் உள்ள சிஆர்பிஎஃப் முகாமை முற்றுகையிட்ட போராட்டக்காரர்கள், உள்ளே புகுந்து பொருள்களை சூறையாடினர். வாகனங்களுக்கும் தீவைத்தனர். தங்கள் பாதுகாப்பைக்கருத்தில்கொண்டு, போராட்டக்காரர்கள் மீது பாதுகாப்புப் படையினர் துப்பாக்கிச்சூடு நடத்தினர். இதில் இருவர் உயிரிழந்தனர்; மேலும் 5 பேர் காயமடைந்தனர். இந்தத் தகவல்களை மாநில உள்துறை அமைச்சர் கோவிந்தாஸ் கோந்தோஜம் தெரிவித்தார்.

# வணிகச் செய்திகள்

## ஈரான் போர் நிறுத்தம் எதிரொலி பிட்காயின் விலை 72000 டாலர்..

கிரிப்டோ சந்தையில் பிட்காயின் விலை மீண்டும் வேகமாக உயர்ந்துள்ளது, எல்லா புகழும் இறைவனுக்கே என்பது போல், இன்று முதலீட்டு சந்தை இயல்பு நிலைக்கு திரும்ப மிக முக்கியமான காரணம் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப். ஈரானுடன் இரண்டு வாரங்களுக்கு நிபந்தனையுடன் கூடிய போர் நிறுத்தத்தை அறிவித்ததும், இதை ஈரான் உடனுக்குடன் ஏற்றதும் தான் இன்றைய முதலீட்டு சந்தை உயர்வுக்கு முக்கிய காரணமாக பார்க்கப்படுகிறது.

பிட்காயின் விலை இன்றைய வர்த்தகத்தில் 72,000 டாலருக்கு மேல் சென்றுள்ளது. இந்த போர் நிறுத்த அறிவிப்பு உலகளாவிய சந்தையில் பதற்றத்தை சற்று குறைத்து, முதலீட்டாளர்களிடையே நம்பிக்கையை ஏற்படுத்தி ரிஸ்க் எடுத்து முதலீடு செய்யும் வாய்ப்பு உருவாகியுள்ளதை காட்டுகிறது. அமெரிக்கா மற்றும் ஈரான் இடையே இரண்டு வார போர்நிறுத்த ஒப்பந்தம் அறிவிக்கப்பட்டதையடுத்து, பிட்காயின் விலை 20 நாட்களுக்கு பிறகு முதல் முறையாக 72,000 டாலரை கடந்துள்ளது. அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப், தாக்குதல்களை தற்காலிகமாக நிறுத்த ஒப்புக்கொண்டதாக தெரிவித்த நிலையில், ஈரானும் அதற்கு சம்மதம் தெரிவித்துள்ளது. இந்த அறிவிப்புக்குப் வெளியான ஒரு மணிநேரத்திற்குள் பிட்காயின் சுமார் 6% உயர்ந்து 72,732.43 டாலர் வரை சென்றது. பொதுவாக அரசியல் பதற்றம் கிரிப்டோ சந்தைக்கு பாதிப்பை ஏற்படுத்தும், ஆனால் இத்தகைய போர் நிறுத்த அறிவிப்பு சிக்னல்கள் வந்தால் விலைகள் வேகமாக உயர்வது வழக்கம்.

# ஆயுஷ்மான் பாரத் காப்பீடு: தானியங்கி முறையை அமல்படுத்தத் திட்டம்!

**புதுடெல்லி, ஏப்.9:**

பிரதமரின் ஆயுஷ்மான் பாரத் மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் ஈட்டுத் தொகையை (க்ளைம்) பெறுவதற்கான சேவைகளை தானியங்கி முறையில் செயல்படுத்த சிறப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.




அதன்படி, மருத்துவமனைகளில் இருந்து கோரப்படும் காப்பீட்டுத் தொகை தானியங்கி முறையில் பரிசீலித்து உடனடியாக விடுவிக்கும் வசதிகள் முன்னெடுக்கப்பட உள்ளன.

இதன் மூலம் காப்பீட்டுத் தொகைக்காக பல மணிநேரம் நோயாளிகள் காத்திருக்கும் நிலை தவிர்க்கப்படும். மேலும், சிகிச்சை முடிந்து வீடு திரும்புவதற்கு காப்பீட்டு சேவைகள் ஒரு தடையாக இருக்காது. தானியங்கி முறையிலான சேவைகளை முன்னெடுக்கும் பொருட்டு, அதற்கான இணையக் கட்டமைப்புகளை மேம்படுத்த ஆராய்ச்சியாளர்களுக்கும், ஆய்வு மாணவர்களுக்கும், அறிவியல் மாணவர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. கர்நாடக மாநிலம் பெங்களூரில் மே 8 மற்றும் 9-ஆம் தேதிகளில் இதற்கான திறனறி போட்டிகள் நடத்தப்படவுள்ளன. இதில் நாடு முழுவதும் உள்ள மருத்துவக் கல்லூரி மாணவர்களும், ஆய்வாளர்களும் பங்கேற்குமாறு தேசிய மருத்துவ ஆணையம் (என்எம்சி) வலியுறுத்தியுள்ளது. அதற்கான விண்ணப்ப நடவடிக்கைகள் மற்றும் முன்பதிவு வழிமுறைகள் குறித்து அறிந்து கொள்ள என்எம்சி இணையப்பக்கத்தை அணுகலாம் என்றும் தெரிவித்துள்ளது.

# பெங்களூருவில் பட்டுப் புடவை வாங்க அதிகாலை 4 மணிக்கு வரிசையில் நிற்கும் பெண்கள்






**பெங்களூரு, ஏப்.9:**

கர்நாடக அரசின் பட்டுத் தொழில் கழகத்தின் சார்பில் விற்பனை செய்யப்படும் பட்டுப் புடவைகள் மிகவும் பாரம்பரியம் மிக்கவையாக கருதப்படுகின்றன. புவிசார் குறியீடு பெற்ற இந்த புடவைகளுக்கு பெண்கள் மத்தியில் அமோக வரவேற்பு இருக்கிறது.

பெங்களூருவில் உள்ள கர்நாடக அரசின் பட்டுத் தொழில் கழகத்தின் விற்பனையகத்தில் புடவை வாங்குவதற்காக கர்நாடகாவை சேர்ந்தவர்கள் மட்டுமல்லாமல் பிற மாநிலங்களை சேர்ந்தவர்களும் குவிந்து வருகின்றனர். வாடிக்கையாளர்களை கட்டுப்படுத்த முடியாததால் கடந்த 5 ஆண்டுகளாக வாடிக்கையாளர்ளுக்கு தலா ஒரு டோக்கன் மட்டுமே தரப்படுகிறது.

இந்த டோக்கனை வாங்குவதற்காக பெண்களும், ஆண்களும் முந்தைய தினம் இரவே கடை வாசலுக்கு வந்து வரிசையில் நிற்கின்றனர். தினமும் சுமார் 500 பேர் வரை அதிகாலை 4 மணி முதல் 10 மணி வரை 6 மணி நேரம் காத்திருந்து புடவைகளை வாங்கிச் செல்கின்றனர்.

10 நிமிடம் மட்டுமே அனுமதி: அங்கு வாடிக்கையாளர் கூறும் வண்ணத்தில் புடவைகளை விற்பனையாளர்கள் காண்பிக்கின்றனர்.

ரூ.20 ஆயிரம் முதல் ரூ.5 லட்சம் வரையிலான விலையில் பட்டுப் புடவைகளில் ஏதேனும் ஒன்றை தேர்வு செய்ய வேண்டும். ஒரு வாடிக்கையாளருக்கு ஒரு புடவை மட்டுமே வழங்கப்படுகிறது.

வாடிக்கையாளர்கள் பல புடவைகளை பார்த்து, தேர்வு செய்வதற்கு அனுமதி இல்லை என நோட்டீஸ் ஒட்டப்பட்டுள்ளது.

# சபரிமலை கோயில் வழக்கில் உச்ச நீதிமன்றத்தில் அரசு வாதம்

**புதுடெல்லி, ஏப்.9:**

சபரிமலை ஐயப்பன் கோயிலில் அனைத்து வயது பெண்களும் வழிபட அனுமதித்தது தொடர்பான மறு ஆய்வு மனுக்களை உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி சூர்யகாந்த் தலைமையிலான 9 நீதிபதிகள் அடங்கிய அரசியல் சாசன அமர்வு நேற்று முதல் விசாரிக்க தொடங்கியுள்ளது.

மத்திய அரசு சார்பில் ஆஜரான சொலிசிட்டர் ஜெனரல் துஷார் மேத்தா "சபரிமலை ஐயப்பன் கோயிலில் அனைத்து வயது பெண்களும் சென்று வழிபட அனுமதித்த தீர்ப்பில் பல்வேறு குறைபாடுகள் உள்ளன. மதத் தலைவர் நம்பிக்கை சார்ந்த விஷயம் என்று கூறிவிட்டால் அந்த மதத்தை பின்பற்றுவோர் அதை ஏற்று நடக்கின்றனர். மத நம்பிக்கை விவகாரங்களில் நீதிமன்றம் தலையிட முடியாது" என்றார். துஷார் மேத்தா இன்றும் தனது வாதங்களை முன்வைக்க உள்ளார்.

# ராஜஸ்தானில் ஜப்பான் சுற்றுலாப் பயணிக்கு பாலியல் துன்புறுத்தல் - 5 பேர் மீது வழக்குப் பதிவு

**ஜெய்ப்பூர், ஏப்.9:**

ஜெய்ப்பூரின் ஜெய்கர் கோட்டை அருகே, ஒரு ஜப்பான் சுற்றுலாப் பயணிக்கு ஐந்து நபர்கள் பாலியல் துன்புறுத்தல் அளித்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இதில் தொடர்புடையவர்களை போலீஸார் தீவிரமாக தேடி வருகின்றனர்.

ராஜஸ்தான் மாநிலத்தில் உள்ள ஜெய்ப்பூர் மாவட்டத்தில் ஞாயிற்றுக்கிழமை (ஏப்.5) காலையில், அம்பர் பகுதியில் அமைந்துள்ள ஜெய்கர் கோட்டையைப் பார்வையிடச் சென்ற ஜப்பான் சுற்றுலாப் பயணி, அங்கிருந்து அருகிலுள்ள கணேஷ் கோயிலை நோக்கி நடந்து சென்றுகொண்டிருந்தபோது இந்தச் சம்பவம் நிகழ்ந்ததாக காவல் உதவி ஆணையர் சுரேந்திர சிங் தெரிவித்தார்.

"ஆட்கள் நடமாட்டம் இல்லாத ஒரு தனிமையான இடத்தைப் பயன்படுத்திக்கொண்ட ஐந்து நபர்கள், அந்தப் பெண்ணை வழிமறித்து, அவரிடம் அத்துமீறி நடந்துகொண்டதுடன், பாலியல் துன்புறுத்தலையும் அளித்தனர். உடனடியாக அந்தப் பெண் கூச்சலிட்டு உதவி கோரியதுடன், அங்கிருந்து தப்பித்து ஓடி, அருகிலிருந்த ஒரு பாதுகாப்பு ஊழியரிடம் நடந்ததை தெரிவித்தார். பாதுகாப்பு ஊழியர் வந்தவுடன் குற்றவாளிகள் அங்கிருந்து தப்பி ஓடிவிட்டனர்" என்று அவர் கூறினார். ஊழியர், உடனடியாகக் காவல் துறையினருக்குத் தகவல் அளித்ததைத் தொடர்ந்து, போலீஸார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்றனர். அந்தப் பகுதியிலுள்ள சிசிடிவி காட்சிகளை ஆய்வு செய்ததில், ஐந்து நபர்கள் மலையிலிருந்து கீழே இறங்கிச் செல்லும் காட்சி பதிவாகியுள்ளதாகவும், அவர்களை அடையாளம் காணும் முயற்சிகள் நடைபெற்று வருவதாகவும் காவல் துறையினர் தெரிவித்தனர். ஜப்பான் சுற்றுலாப் பயணி அளித்த புகாரின் அடிப்படையில் காவல் துறையினர் வழக்குப் பதிவு செய்துள்ளதாகவும், குற்றவாளிகளைக் கைது செய்வதற்காக உள்ளூர் குற்றவாளிகள் மற்றும் சுற்றுலா வழிகாட்டிகள் குறித்த ஆவணங்களை போலீஸார் ஆய்வு செய்து வருகின்றனர்.

# கச்சா எண்ணெய் விலை 15% சரிவு! டிரம்ப்பின் போர் நிறுத்த அறிவிப்பு எதிரொலி!

**புதுடெல்லி, ஏப்.9:**

அமெரிக்கா - ஈரான் இடையேயான போர் இரண்டு வாரங்களுக்கு நிறுத்தம் செய்யப்படும் என்றும், பேச்சுவார்த்தை நடத்தி முடிவுக்குக் கொண்டுவரப்படும் என்றும் அமெரிக்க அதிபர் டிரம்ப் ஒப்புதல் அளித்திருக்கிறார்.

இதன் எதிரொலியாக, கச்சா எண்ணெய்யின் விலை 15 சதவிகிதம் வரை சரிவைக் கண்டுள்ளது. இந்திய நேரப்படி காலை 7 மணியளவில், பிரெண்ட் கச்சா எண்ணெய் விலை 13 சதவிகிதத்துக்கும் மேல் சரிந்து, ஒரு பீப்பாய் 94.94 டாலராக வர்த்தகமானது. இதற்கிடையில், அமெரிக்க டபிள்யூடிஐ கச்சா எண்ணெய் விலை 14.60 சதவிகிதம் டாலர்கள் விலை சரிந்து ஒரு பீப்பாய் 96.46 டாலராகக் குறைந்துள்ளது. அமெரிக்கா - ஈரான் இடையேயான போருக்கு முன்னதாக, ஒரு பீப்பாய் கச்சா எண்ணெய்யின் விலை 62 முதல் 65 டாலர் வரை வர்த்தகமாகி வந்தது. போரால் ஏற்பட்ட தட்டுப்பாட்டால், பீப்பாய்க்கு 119 டாலர் என்ற உச்சத்தை எட்டிய நிலையில், மீண்டும் 100 டாலருக்கு கீழே இறங்கி வர்த்தகமாகி வருகிறது. கச்சா எண்ணெய் விலை குறைவால், பெட்ரோல், டீசல் விலை மீண்டும் குறைக்கப்படுமா? என்ற எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது.

# காவல் நிலையங்களில் சிசிடிவி கேமரா செயல்படாத பிரச்சினைக்கு 2 வாரத்தில் தீர்வு: மத்திய அரசு உறுதி



**புதுடெல்லி, ஏப்.9:**

காவல் நிலையங்களில் சிசிடிவி கேமராக்கள் செயல்படாதது தொடர்பாக உச்ச நீதிமன்றம் தாமாக முன்வந்து வழக்கு பதிவு செய்துள்ளது. நீதிபதிகள் விக்ரம் நாத், சந்தீப் மேத்தா முன்பு இந்த வழக்கு விசாரணைக்கு வந்தது. அப்போது மத்திய உள்துறை செயலர் கோவிந்த் மோகன் ஆஜரானார்.

மத்திய அரசின் தலைமை வழக்கறிஞர் ஆர். வெங்கட்ரமணியிடம், "இந்த விவகாரத்தில் மாநிலங்கள், யூனியன் பிரதேச பிரதிநிதிகளுடன் கலந்து ஆலோசிப்பதற்கு மத்திய உள்துறை உதவிச்செயலரை அனுப்புவது நல்லதா" என்று நீதிபதிகள் கேள்வி எழுப்பினர்.

மேலும் கேரள மாதிரியை ஏன் அனைத்து மாநிலங்களும் பின்பற்றக்கூடாது என்றும் கேள்வி கேட்டனர். இதற்கு மத்திய அரசின் தலைமை வழக்கறிஞர் ஆர். வெங்கட்ரமணி, "மத்திய உள்துறை செயலர் தலைமையில் ஒரு வாரத்துக்குள் மீண்டும் சிறப்பு கூட்டம் நடத்தப்படும்" என்றார்.

இதையடுத்து நீதிபதிகள், "சிசிடிவி கேமராக்களை காவல் நிலையங்களில் பொருத்தும் விவகாரத்தில் உள்ள பிரச்சினைகள் 2 வாரத்துக்குள் களையப்படும் என்று மத்திய அரசு உறுதியளித்துள்ளது" என்றனர்.

# ரெப்போ வட்டி விகிதத்தில் மாற்றமில்லை! வீடு, வாகனக் கடன் வட்டி குறைய வாய்ப்பில்லை!



**புதுடெல்லி, ஏப்.9:**

வங்கிகளுக்கான குறுகிய கால கடனுக்கான வட்டி விகிதம் 'ரெப்போ ரேட்' எந்த மாற்றமுமின்றி 5.25% ஆகத் தொடரும் என்று இந்திய ரிசர்வ் வங்கி அறிவித்துள்ளது.

மும்பையில் (ஏப். 8) ஆர்பிஐ ஆளுநர் சஞ்சய் மல்ஹோத்ரா தலைமையில் 6 உறுப்பினர்கள் அடங்கிய நிதிக் கொள்கைக் குழு கூட்டம் நடைபெற்றது. 2026 - 27 ஆம் நிதியாண்டில் நடைபெறும் முதல் கூட்டம் இதுவாகும்.

இந்த கூட்டத்தில் வட்டி விகிதத்தை மாற்ற வேண்டாம் என்று ஒருமனதாக முடிவெடுக்கப்பட்டது.

அதன்படி 'ரெப்போ ரேட்' எனும் வங்கிகளுக்கான குறுகிய கால கடனுக்கான வட்டி விகிதம் எந்த மாற்றமும் இன்றி 5.25% ஆகத் தொடரும் என்று ரிசர்வ் வங்கி ஆளுநர் சஞ்சய் மல்ஹோத்ரா அறிவித்துள்ளார்.

இதனால், வீடு, வாகனம், தனிநபர் கடன் உள்ளிட்ட கடன்களுக்கான வட்டி விகிதத்தில் மாற்றமிருக்க வாய்ப்பு இல்லை.

அதேபோல வங்கிகளில் நிரந்தர வைப்பு, தொடர் வைப்பு உள்ளிட்ட சேமிப்புத் திட்டங்களுக்கு வங்கிகள் அளிக்கும் வட்டியும் குறைக்காமல் அதே விகிதத்தில் தொடரும். நிலையான வைப்பு வசதி (எஸ்டிஎப்) மீதான வட்டி விகிதம் 5 சதவீதமாகவும் எம்எஸ்எப் வட்டி விகிதம் 5.50 சதவீதமாகவும் தொடர்கிறது.

உலகப் பொருளாதாரம் முன்பு இல்லாத அளவுக்கு சவால்களை எதிர்கொண்டு வருவதாகவும் அதேநேரத்தில் இந்திய பொருளாதாரம் வலுவான நிலையிலே இருப்பதாகவும் ஆளுநர் சஞ்சய் மல்ஹோத்ரா தெரிவித்தார்.

# சமூக வலைதளங்களில் வரும் ஐபிஎல் விளம்பரத்தை நம்பாதீர்: ஹைதராபாத் காவல் ஆணையர் எச்சரிக்கை



**ஹைதராபாத், ஏப்.9:**

தற்போது ஐபிஎல் கிரிக்கெட் போட்டிகள் நடைபெற்று வரும் வேளையில், பல இடங்களில் கிரிக்கெட் சூதாட்டங்களும் இலைமறை காயாக நடைபெறுகின்றன என்பது மறுக்க முடியாத உண்மை.

இதில் குறிப்பாக ஹைதராபாத்தில் பல சூதாட்டக்காரர்களை போலீஸார் கைது செய்து வருகின்றனர்.

நேற்று ஹைதராபாத்தில் நகர காவல் ஆணையர் சஜ்ஜனார் செய்தியாளர்களிடம் இது தொடர்பாக கூறியதாவது:

ஐபிஎல் கிரிக்கெட்டை சிலர் மூலதனமாக்கி கோடி கணக்கில் குறுக்கு வழியில் சம்பாதித்து வருகின்றனர். கிரிக்கெட் மீதுள்ள மோகத்தால் சாமானிய மக்கள் இதில் ஏமாற்றப்பட்டு வருகின்றனர். குறிப்பாக சமூக வலைத்தளங்கள் மூலம் வரும் போலி விளம்பரங்களை நம்பி ஏமாற வேண்டாம்.

இந்த போட்டியில் யார் வெற்றி பெறுவார்கள் ? எந்த அணி எத்தனை ரன் குவிக்கும் ? என சரமாரியாக கேள்விகளால் மக்களை முதலில் ஈர்க்கிறார்கள். அதன் பின்னர் 'பெட்டிங்' மூலம் பணத்தை மக்களிடம் இருந்து கறந்து விடுகின்றனர்.

ஆதலால் யாரும் ஐபிஎல் கிரிக்கெட் தொடர்பான சமூக வலைதள விளம்பரங்களை நம்பி ஏமாற வேண்டாம்.

இவ்வாறு அவர் கூறினார்.

# புதுச்சேரி சட்டசபை தேர்தல்: அரசு மற்றும் தனியார் கல்லூரிகளுக்கு 3 நாள் விடுமுறை

**புதுச்சேரி, ஏப்.9:**

புதுச்சேரி மாநில சட்டசபை தேர்தலுக்கான வாக்குப்பதிவு நாளை (வியாழக் கிழமை) நடைபெற இருக்கிறது. தேர்தலை முன்னிட்டு ஏற்கனவே அரசு மற்றும் தனியார் பள்ளிகளுக்கு 6-ந் தேதி முதல் 10-ந் தேதி வரை விடுமுறை அளிக்கப்பட்டு உள்ளது. இந்தநிலையில் புதுச்சேரி, காரைக்கால், மாகி, ஏனாம் பகுதியில் உள்ள அனைத்து அரசு மற்றும் தனியார் கல்லூரிக்கு இன்று முதல் வருகிற 10-ந் தேதி வரை 3 நாட்கள் விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது. இதற்கான உத்தரவை மாவட்ட தேர்தல் அதிகாரியும், மாவட்ட கலெக்டருமான குலோத்துங்கன் பிறப்பித்துள்ளார்.

# 55 ஆண்டுகளுக்கு முன் பாகிஸ்தான் 2 ஆக உடைந்தது; ஆனால் இந்த முறை... ராஜ்நாத் சிங் எச்சரிக்கை



**கொல்கத்தா, ஏப்.9:**

மேற்கு வங்காளத்தில் மே 7-ந்தேதியுடன் அரசின் பதவிக்காலம் முடிவடைகிறது. இதனை முன்னிட்டு, மேற்கு வங்காள சட்டசபைக்கான தேர்தல் 2 கட்டங்களாக நடைபெறுகிறது. இதன்படி, ஏப்ரல் 23-ந்தேதி முதல் கட்ட தேர்தலும், 29-ந்தேதி 2-ம் கட்ட தேர்தலும் நடத்தப்படும். வாக்கு எண்ணிக்கை மே 4-ந்தேதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டு உள்ளது.

இதனை முன்னிட்டு, கட்சிகள் தொகுதி பங்கீடு, வேட்பாளர் தேர்வு, பிரசாரம் உள்ளிட்ட தீவிர அரசியல் பணிகளில் ஈடுபட்டு வருகின்றன. தேர்தலை முன்னிட்டு தேர்தல் நடத்தை விதிகள் அமலுக்கு வந்துள்ளன.

இந்த நிலையில், மேற்கு வங்காளத்தின் கொல்கத்தா நகரில் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்ட மத்திய பாதுகாப்பு மந்திரி ராஜ்நாத் சிங் பேசும்போது, பாகிஸ்தானின் பாதுகாப்பு மந்திரி கவாஜா ஆசிப், தூண்டி விடும் வகையிலான அறிக்கையை வெளியிட்டு இருக்க கூடாது என்றார். 55 ஆண்டுகளுக்கு முன்பு அவர்கள் விளைவுகளை சந்தித்தனர். பாகிஸ்தான் 2 ஆக உடைந்தது என 1971-ம் ஆண்டு நடந்த போரை குறிப்பிட்டு அவர் பேசினார். அதன் விளைவாக வங்காளதேசம் உருவானது. அவர்கள் வங்காளத்தின் மீது ஒரு கண் வைத்தால், இந்த முறை பாகிஸ்தான் எத்தனை பகுதிகளாக உடையும் என்று கடவுளுக்கு மட்டுமே தெரியும் என்றார்.

பாகிஸ்தானின் பாதுகாப்பு மந்திரி கவாஜா ஆசிப் நேற்று கூறும்போது, இந்தியா இந்த முறை ஏதேனும் தவறான தாக்குதலை நடத்தினால், கடவுளின் ஆசியுடன், கொல்கத்தாவை நாங்கள் தாக்குவோம் என்று அவர் கூறியது சர்ச்சையானது.

# விமானத்தில் வந்து தேர்தலில் வாக்களிக்க ரூ.2 லட்சம் வரை செலவு செய்யும் கேரளவாசிகள்



**திருவனந்தபுரம், ஏப்.9:**

அமெரிக்கா, ஈரான் இடையிலான போர் காரணமாக வளைகுடா நாடுகளில் விமான போக்குவரத்து கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளது. இதனால் இந்தியாவுக்கான விமான டிக்கெட் மிகக் கடுமையாக உயர்ந்திருக்கிறது. பொதுவாக ஐக்கிய அரசு அமீரக தலைநகர் அபுதாபி மற்றும் துபாய் உள்ளிட்ட நகரங்களில் இருந்து இந்திய நகரங்களுக்கு வருவதற்கு ரூ.10,000 முதல் ரூ.20,000 வரை விமான கட்டணம் வசூல் செய்யப்பட்டது.

போர் காரணமாக தற்போது விமான கட்டணம் ஒரு லட்சம் ரூபாய் முதல் 2 லட்சம் ரூபாய் வரை உயர்ந்திருக்கிறது. மிகவும் இக்கட்டான நேரங்களில் ரூ.2.5 லட்சம் வரைகூட விமான கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

எனினும் ஐக்கிய அரபு அமீரகத்தில் வசிக்கும் மலையாளிகள், கேரள சட்டப்பேரவைத் தேர்தலில் வாக்களிக்க விமான டிக்கெட்டுக்கு ரூ.2 லட்சம் வரை செலவு செய்து சொந்த ஊருக்கு திரும்பி வருகின்றனர்.

இதுதொடர்பாக முனீர் என்பவர் கூறும்போது,

"கடந்த 19 ஆண்டுகளாக ஐக்கிய அரபு அமீரகத்தில் வசித்து வருகிறேன். ஒவ்வொரு தேர்தலின்போதும் கேரளாவுக்கு சென்று வாக்களிப்பதை வழக்கமாக வைத்திருக்கிறேன். தற்போதைய சட்டப்பேரவைத் தேர்தலுக்காக கேரளா செல்ல ரூ.2.3 லட்சத்துக்கு டிக்கெட் வாங்கி உள்ளேன்.

எவ்வளவு செலவானாலும் வாக்குரிமையை செலுத்துவதை கடமையாக கருதுகிறேன்" என்று தெரிவித்தார். ஐக்கிய அரபு அமீரகத்தின் அஜ்மான் நகரில் வசிக்கும் ஆஷா என்பவர் கூறும்போது, "கேரள சட்டப்பேரவைத் தேர்தலில் வாக்களிப்பதற்காக சொந்த ஊருக்கு செல்ல திட்டமிட்டு உள்ளேன்.

இதற்காக ஒரு லட்சம் ரூபாய்க்கு விமான டிக்கெட் வாங்கி உள்ளேன். எனது தங்கை நிம்மியும் இதே தொகைக்கு விமான டிக்கெட் முன்பதிவு செய்திருக்கிறார்" என்றார்.

ஐக்கிய அரபு அமீரகத்தில் சுமார் 10 லட்சம் மலையாளிகள் உள்ளனர். அவர்களில் பெரும்பாலானோர் விமான டிக்கெட்டுக்கு ரூ.2 லட்சம் வரை செலவு செய்து கேரளாவுக்கு திரும்பி வருகின்றனர்.

# அமெரிக்காவுக்கு எதிரான போரில் "வரலாற்று வெற்றி" - ஈரான் அறிவிப்பு



**வாஷிங்டன், ஏப்.9:**

ஈரானுக்கு விதித்த காலக்கெடுவை 2 வாரங்களுக்கு நீட்டிக்க டிரம்ப்புக்கு பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் வேண்டுகோள் விடுத்தார். இந்த சூழலில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப், ஈரான் மீதான "குண்டுவீச்சு மற்றும் தாக்குதல்" நடவடிக்கைகளை நிறுத்தி, இரண்டு வார இருதரப்பு போர் நிறுத்தம் செய்யப்பட்டதாக அறிவித்தார். இதனைச் செய்வதற்கான காரணம் என்னவென்றால், நாங்கள் ஏற்கெனவே ஈரானுடனான நீண்டகால அமைதி மற்றும் மத்திய கிழக்கில் அமைதி தொடர்பான ஓர் உறுதியான ஒப்பந்தத்தை மேற்கொள்வதில் கிட்டத்தட்ட முன்னேறிவிட்டோம். மேலும், ஈரானிடமிருந்து 10 அம்ச முன்மொழிவைப் பெற்றுள்ளோம்" என்று டிரம்ப் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் அமெரிக்காவுக்கு எதிரான போரில் "வரலாற்று சிறப்புமிக்க வெற்றியை" பெற்றுள்ளதாக ஈரானின் உச்ச தேசிய பாதுகாப்பு கவுன்சில் அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையின்படி, போரின் மூலம் ஈரான் அடையவிருந்த ஏறக்குறைய அனைத்து நோக்கங்களும் நிறைவேற்றப்பட்டுவிட்டதாக உச்ச தேசிய பாதுகாப்பு கவுன்சில் கூறியுள்ளது. மேலும் குற்றவாளியான அமெரிக்காவை தனது 10 அம்சத் திட்டத்தை ஏற்கும்படி கட்டாயப்படுத்தியதன் மூலம் ஈரான் ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றியை அடைந்துள்ளது என்றும் ஹார்முஸ் ஜலசந்தியின் மீதான ஈரானின் கட்டுப்பாடு, செறிவூட்டல் உரிமைகள் மற்றும் அனைத்துத் தடைகளையும் நீக்குதல் ஆகியவற்றை அமெரிக்கா ஏற்றுக்கொண்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. போரின் ஏறக்குறைய அனைத்து நோக்கங்களும் நிறைவேற்றப்பட்டுவிட்டன என்ற நற்செய்தியை இப்போது மாபெரும் ஈரான் தேசத்திற்கு நாங்கள் அளிக்கிறோம். உங்கள் வீரமிக்க பிள்ளைகள் எதிரியை வரலாற்றுச் சிறப்புமிக்க கையறுநிலைக்கும் நிரந்தரத் தோல்விக்கும் உள்ளாக்கியுள்ளனர். இன்னும் போர் முடியவில்லை. வரிகளை நீக்குதல் உள்ளிட்ட 10 அம்ச கோரிக்கைகளை அமெரிக்கா ஏற்றுக்கொண்டால் மட்டுமே போர் முடிவுக்கு வரும்" என்று ஈரானின் உச்ச தேசிய பாதுகாப்பு கவுன்சில் தெரிவித்துள்ளது.

## ஹார்முஸ் நீரிணையை கடக்கும் கப்பலுக்கு கட்டணம் வசூலிக்க ஈரான் முடிவு

**தெஹ்ரான், ஏப்.9:**

அமெரிக்காவும், இஸ்ரேலும் சேர்ந்து ஈரான் மீது தொடர்ந்து தாக்குதல் நடத்திவரும் நிலையில், தனது கட்டுப்பாட்டில் இருக்கும் உலகின் முக்கிய நீரிணையான ஹார்முஸ் நீரிணையை ஈரான் மூடிவைத்துள்ளது. இதனால் வளைகுடா நாடுகளில் இருந்து கச்சா எண்ணெய் கப்பல்கள் உலகின் பிற நாடுகளுக்கு செல்வதில் சிக்கல் ஏற்பட்டது.

கச்சா எண்ணெய் சர்வதேச சந்தைக்கு வருவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதால் அதன் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. இதன் விளைவாக பல்வேறு நாடுகள் சமையல் எரிவாயு தட்டுப்பாடு, பெட்ரோல், டீசல் விலை உயர்வு உள்ளிட்ட பாதிப்புகளை எதிர்கொண்டன. இதற்கிடையில், அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப், அனைத்து கப்பல் போக்குவரத்துக்காக ஹார்முஸ் ஜலசந்தியை திறக்க ஈரானுக்கு காலக்கெடு விதித்தார். இந்த சூழலில், ஈரானுக்கு விதித்த காலக்கெடுவை 2 வாரங்களுக்கு நீட்டிக்க டிரம்ப்புக்கு பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் வேண்டுகொள் விடுத்தார். அதன்படி, ஈரான் மீதான தாக்குதலை இரண்டு வார காலத்திற்கு நிறுத்தி வைக்க டிரம்ப் ஒப்புதல் அளித்தார். மேலும் இது ஒரு போர் நிறுத்தம் என டிரம்ப் அறிவித்தார். போர் நிறுத்தம் செய்யப்படும் இந்த இரண்டு வாரங்களுக்கு ஹார்முஸ் நீரிணையை திறக்க ஈரான் சம்மதித்துள்ளது.

இந்த நிலையில், ஹோர்முஸ் நீரிணையைக் கடக்க ஒரு கப்பலுக்கு இந்திய மதிப்பில் ரூ.18.5 கோடி($2 MILLION) கட்டணட் வசூலிக்கப்படும் என்று ஈரான் அறிவித்துள்ளது. போர் இழப்பீட்டை ஈடு செய்ய வசூலிக்கப்படும் இந்த கட்டணத்தை ஓமன் நாட்டுடன் பகிர்வோம் என ஈரான் தெரிவித்துள்ளது.

# "உலக அமைதிக்கு இது ஒரு மகத்தான நாள்; ஈரானும் இதையே விரும்புகிறது" - ட்ரம்ப்

**வாஷிங்டன், ஏப்.9:**



இரண்டு வார கால போர் நிறுத்தத்துக்கு ஈரானும் அமெரிக்காவும் சம்மதித்துள்ள நிலையில், சர்வதேச அமைதிக்கு இது ஒரு மகத்தான நாள் என்று அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள ட்ரூத் சோஷியல் சமூக ஊடகப் பதிவில், "உலக அமைதிக்கு இது ஒரு மகத்தான நாள். ஈரானும் இதைத்தான் விரும்புகிறது. அவர்களுக்குப் போதும் என்றாகிவிட்டது. மற்ற அனைவருக்கும்கூட அதே நிலைதான். ஹார்முஸ் ஜலசந்தியில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலைக் கையாள்வதில் அமெரிக்கா உதவும். அங்கு ஏராளமான ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகள் நடைபெறும். பெரும் பொருளாதார ஆதாயத்தை ஈட்ட முடியும்.

ஈரான் தனது மறுசீரமைப்புப் பணிகளைத் தொடங்க முடியும். அனைத்தும் சிறப்பாக நடைபெறுவதை உறுதிசெய்யும் பொருட்டு, நாங்கள் அனைத்து வகையான விநியோகப் பொருட்களையும் திரட்டிக்கொண்டு அங்கே காத்திருப்போம். அனைத்தும் சிறப்பாகவே நடக்கும் என்பதில் நான் உறுதியாக இருக்கிறேன். அமெரிக்காவில் நாம் தற்போது அனுபவித்து வருவதைப் போலவே மத்திய கிழக்கு நாடுகளுக்கும் இது ஒரு பொற்காலமாக அமையக்கூடும்" என தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா - ஈரான் இடையே ஏற்பட்டுள்ள போர் நிறுத்தத்தை ஐக்கிய நாடுகள் சபை வரவேற்றுள்ளது. இது தொடர்பாக ஐ.நா. பொதுச் செயலாளர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "அமெரிக்காவுக்கும் ஈரானுக்கும் இடையே அறிவிக்கப்பட்டுள்ள இரண்டு வார கால போர் நிறுத்தத்தை ஐ.நா. வரவேற்கிறது. மேற்கு ஆசியாவில் மோதலில் ஈடுபட்டுள்ள அனைத்து தரப்பினரும் சர்வதேச சட்டத்தின் கீழ் தங்களுக்குள்ள கடமைகளை நிறைவேற்ற வேண்டும்; இந்த பிராந்தியத்தில் நீடித்த மற்றும் விரிவான அமைதி நிலவ வழிவகுக்கும் வகையில் போர் நிறுத்த விதிகளை கடைப்பிடிக்க வேண்டும்.

பொதுமக்களின் உயிரைப் பாதுகாப்பதற்கும், மனிதத் துயரங்களைப் போக்குவதற்கும் மோதல்களை முடிவுக்குக் கொண்டுவருவது மிக அவசரத் தேவை. இந்த போர் நிறுத்தத்தில் துணை நின்ற பாகிஸ்தான் மற்றும் பிற நாடுகளின் முயற்சிகளுக்கு மனமார்ந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

இதனிடையே, ஈரானுடனான போர் நிறுத்தம் ஒரு அரசியல் பேரழிவு என்று இஸ்ரேலின் முக்கிய எதிர்க்கட்சி விமர்சித்துள்ளது. இது தொடர்பாக அந்நாட்டின் முக்கிய எதிர்க்கட்சியின் தலைவரான யாயிர் லாபிட் தனது எக்ஸ் பக்கத்தில், "நமது முழு வரலாற்றிலும் இதுபோன்ற ஒரு அரசியல் பேரழிவு நிகழ்ந்ததே இல்லை. நமது தேசிய பாதுகாப்பு தொடர்பான முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டபோது பேச்சுவார்த்தை மேஜைக்கு அருகில் கூட இஸ்ரேல் இல்லை. ராணுவம் தனக்கு இடப்பட்ட அனைத்து உத்தரவுகளையும் நிறைவேற்றியது. பொதுமக்களும் குறிப்பிடத்தக்க மன உறுதியை வெளிப்படுத்தினர். ஆனால், பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு அரசியல் ரீதியாகவும், உத்தி சார்ந்தும் தோல்வி அடைந்துவிட்டார். அவர் நிர்ணயித்த இலக்குகளில் எதையும் அவர் அடையவில்லை" என்று விமர்சித்துள்ளார்.

# பாகிஸ்தானில் இரவு 9 மணிக்கு மார்க்கெட், 10 மணிக்கு ஓட்டல்கள் மூட உத்தரவு

**இஸ்லாமாபாத், ஏப்.9:**

பாகிஸ்தானில் ஸ்மார்ட் லாக்-டவுன் அமலாக்கம் செய்யப்பட்டுள்ளது. அதன்படி மார்க்கெட்களை இரவு 8 மணிக்குள்ளும் ஓட்டல்களை இரவு 10 மணிக்குள்ளும் மூடவேண்டும் என்று பாகிஸ்தானில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா - இஸ்ரேல் மற்றும் ஈரான் போர் காரணமாக சர்வதேச அளவில் கச்சா எண்ணெய் விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் பெட்ரோல், டீசல் உள்ளிட்ட எரிபொருளின் விலை சர்வதேச நாடுகளில் உயர்த்தப்பட்டுள்ளது. கச்சா எண்ணெய் விலையேற்றம் இதற்கு காரணமாக தெரிவிக்கப்பட்டுள்ளது.


இந்த சூழலில் பாகிஸ்தானில் கடந்த வாரம் பெட்ரோல் மற்றும் டீசல் விலை உயர்த்தப்பட்டது. இதனால் அங்கு ஒரு லிட்டர் பெட்ரோல் ரூ.458.41 மற்றும் ஒரு லிட்டர் டீசல் ரூ.520.35-க்கும் விற்பனையானது. ஒரே நாளில் பெட்ரோல், டீசல் விலை சுமார் 50 சதவீதம் உயர்ந்தது. இதனால் மக்கள் கொதிப்படைந்தனர். இதையடுத்து பெட்ரோல் விலையை 80 ரூபாய் குறைப்பதாக பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் தொலைக்காட்சி மூலம் தெரிவித்தார்.

மேற்காசிய போர் முடிவுக்கு வந்தவுடன் பெட்ரோல், டீசல் விலை போருக்கு முந்தைய நிலையை எட்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். இந்நிலையில் நேற்று முதல் மார்க்கெட்களை இரவு 8 மணிக்கே மூட வேண்டும் என்றும், ஓட்டல்களை இரவு 10 மணிக்குள் மூடவேண்டும் என்று பாகிஸ்தானில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இது ஸ்மார்ட் லாக்-டவுன் என்று அழைக்கப்படுகிறது. கச்சா எண்ணெயைப்பெறுவதில் சிக்கல் நிலவுவதால் இந்த ஸ்மார்ட் லாக்-டவுன் அமலாக்கம் செய்யப்படுகிறது என்றும் பாகிஸ்தான் அறிவித்துள்ளது. இதற்கான அனுமதியை பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் வழங்கியுள்ளார்.

அதன்படி பஞ்சாப், கைபர் பக்துன்கவா, பலூசிஸ்தான், இஸ்லாமாபாத், கில்கித்-பல்டிஸ்டான், பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதிகளில் உள்ள மார்க்கெட்கள், ஷாப்பிங் மால்கள், வர்த்தக மையங்கள் இரவு 8 மணிக்கும், ஓட்டல்கள் இரவு 10 மணிக்கும் மூடப்படும். கைபர் பக்துன்கவாவில் உள்ள சில பகுதிகளில் மட்டும் இரவு 9 மணி வரை வணிக வளாகங்கள், மார்க்கெட்களை திறக்க சிறப்பு அனுமதி தரப்பட்டுள்ளது.

# துருக்கியில் இஸ்ரேலிய தூதரகம் அருகில் துப்பாக்கிச்சூடு நடத்திய இருவர் சுட்டுக்கொலை

**இஸ்தான்புல், ஏப்.9:**



அமெரிக்க- ஈரான் போர் நேற்று 39-வது நாளை எட்டியது. இந்நிலையில், துருக்கியின் இஸ்தான்புல் நகரில் உள்ள இஸ்ரேலிய தூதரக கட்டிடத்திற்கு அருகில் நேற்று 3 பேர் துப்பாக்கியால் சுட்டு தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இதையடுத்து அவர்களுக்கு எதிராக போலீஸார் பதில் தாக்குதல் நடத்தினர். இதில் இருவர் உயிரிழந்தனர். ஒருவர் காயத்துடன் பிடிபட்டார். மேலும் இரு தரப்பு மோதலில் போலீஸ் அதிகாரி ஒருவர் காயம் அடைந்தார். இதைத் தொடர்ந்து தூதரக கட்டிடம் அமைந்துள்ள பகுதிக்கு போலீஸார் 'சீல்' வைத்து, தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தனர்.

இந்த சம்பவம் தொடர்பாக விசாரணை நடைபெற்று வருவதாக துருக்கியின் நீதித்துறை அமைச்சர் அகின் குர்லெக் தெரிவித்தார். தாக்குதல் நடத்தியவர்களின் அடையாளம் அல்லது அவர்களின் நோக்கம் குறித்து இது வரை எந்தத் தகவலும் வெளியிடப்படவில்லை.

ஹார்முஸ் ஜலசந்தியை திறப்பதற்கு ஈரானுக்கு அமெரிக்க அதிபர் ட்ரம்ப் நிர்ணயித்த காலக்கெடு நேற்று முடிவுக்கு வந்தது.

இந்நிலையில் காலக்கெடுவின் இறுதி நாளில் இந்த தாக்குதல் நடந்தது இஸ்தான்புல் நகரில் பதற்றத்தை ஏற்படுத்தியது.

## ஈரானுடன் போர் நிறுத்தம்: டிரம்பின் முடிவுக்கு இஸ்ரேல் ஆதரவு

**ஜெருசலேம், ஏப்.9:**

ஈரானுக்கு எதிரான தாக்குதல்களை நிறுத்தி வைக்கும் அமெரிக்காவின் முடிவுக்கு இஸ்ரேல் அரசு ஆதரவு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவின் அலுவலகம் வெளியிட்ட அறிக்கையில், "ஈரான் உடனடியாக ஹார்முஸ் நீரிணையை திறந்து, அமெரிக்கா, இஸ்ரேல் மற்றும் பிராந்திய நாடுகள் மீதான அனைத்துத் தாக்குதல்களையும் நிறுத்தும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு, ஈரான் மீதான தாக்குதல்களை இரண்டு வாரங்களுக்கு நிறுத்தி வைக்கும் ஜனாதிபதி டிரம்பின் முடிவை இஸ்ரேல் ஆதரிக்கிறது. மேலும், ஈரான் இனி அமெரிக்கா, இஸ்ரேல், ஈரானின் அண்டை அரபு நாடுகள் மற்றும் உலகிற்கு அணு, ஏவுகணை மற்றும் பயங்கரவாத அச்சுறுத்தலாக இருக்காது என்பதை உறுதி செய்வதற்கான அமெரிக்காவின் முயற்சியையும் இஸ்ரேல் ஆதரிக்கிறது. இருப்பினும், ஈரானின் ஆதரவைப் பெற்றுள்ள ஹிஸ்புல்லாவின் அச்சுறுத்தலை முறியடிக்கும் நோக்கில், தெற்கு லெபனானில் இஸ்ரேல் தாக்குதலை தொடரும். வரவிருக்கும் பேச்சுவார்த்தைகளில், அமெரிக்கா, இஸ்ரேல் மற்றும் இஸ்ரேலின் பிராந்திய நட்பு நாடுகள் பகிர்ந்து கொள்ளும் இந்த இலக்குகளை அடைவதில் உறுதியாக இருப்பதாக அமெரிக்கா இஸ்ரேலிடம் தெரிவித்துள்ளது. இந்த இரண்டு வார கால போர் நிறுத்தம் லெபனானை உள்ளடக்கவில்லை" என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு செய்வதற்கான காரணம் என்னவென்றால், ஈரானில் நாம் ஏற்கனவே அனைத்து ராணுவ இலக்குகளையும் அடைந்துவிட்டோம். மேலும், ஈரானுடனான நீண்டகால அமைதி மற்றும் மத்திய கிழக்கில் அமைதி தொடர்பான ஒரு திட்டவட்டமான உடன்படிக்கையை எட்டுவதில் வெகுதூரம் முன்னேறிவிட்டோம். ஈரானிடமிருந்து 10 அம்ச முன்மொழிவைப் பெற்றோம். அது பேச்சுவார்த்தைக்கு உகந்த அடித்தளமாக அமையும் என்று நாங்கள் நம்புகிறோம். அமெரிக்காவிற்கும், ஈரானுக்கும் இடையே கடந்த கால கருத்து வேறுபாடுகளின் பல்வேறு அம்சங்களும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளன. ஆனால் இந்த ஒப்பந்தத்தை இறுதிசெய்து நிறைவு செய்வதற்கு இரண்டு வார கால அவகாசம் தேவைப்படும்" என்று பதிவிட்டிருந்தார்.

## ஈரானைவிட்டு உடனடியாக வெளியேறுங்கள்! இந்தியர்களுக்கு தூதரகம் முக்கிய அறிவுறுத்தல்!



**தெஹ்ரான், ஏப்.9:**

அமெரிக்கா - ஈரான் இடையே இடைக்காலப் போர் நிறுத்தம் அமலுக்கு வந்திருக்கும் நிலையில், ஈரானில் உள்ள இந்தியர்கள் உடனடியாக நாடு திரும்ப தூதரகம் அறிவுறுத்தியுள்ளது.

ஹோர்முஸ் நீரிணையைத் திறக்கக் கோரி அமெரிக்கா விடுத்த எச்சரிக்கையை ஈரான் நிராகரித்தையடுத்து, ஈரானின் நாகரீகத்தையே இன்றிரவு அழைக்கப் போவதாக அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் செவ்வாய்க்கிழமை தெரிவித்திருந்தார். டிரம்ப்பின் எச்சரிக்கையை அடுத்து, ஈரானில் உள்ள இந்தியர்கள் அடுத்த 48 மணிநேரத்துக்கு பாதுகாப்பான இடத்தில் தாங்குமாறும், வெளியே வர வேண்டாம் என்றும் தெஹ்ரானில் உள்ள இந்திய தூதரகம் அறிவுறுத்தல் வழங்கியிருந்தது. இதனிடையே, கடந்த 40 நாள்களுக்கு மேலாக நீடித்து வந்த போர், பாகிஸ்தான் மத்தியஸ்தத்தின்பேரில் இரு வாரங்களுக்கு நிறுத்தப்படுவதாகவும், அமைதி ஒப்பந்தம் பற்றி பேச்சுவார்த்தை தொடங்கும் என்றும் டிரம்ப் நேற்று அறிவித்தார். இந்த நிலையில், தெஹ்ரானில் உள்ள இந்தியர்கள் உடனடியாக நாடு திரும்புமாறு இந்திய தூதரகம் புதன்கிழமை அறிவுரை வழங்கியுள்ளது.

இந்திய தூதரகத்தை தொடர்புகொண்டு, பரிந்துரைக்கும் வழித்தடங்களைப் பயன்படுத்தி ஈரானிலிருந்து வெளியேறுமாறும், கலந்தாலோசிக்காமல் சர்வதேச தரைவழி எல்லையைக் கடந்து செல்லும் முயற்சியில் ஈடுபட வேண்டாம் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

# ஈரான் - அமெரிக்கா போர் நிறுத்தத்தில் பாகிஸ்தான் மத்தியஸ்தம் செய்தது எப்படி?

**டெல் அவிவ், ஏப்.9:**



கடந்த பிப்.28-ம் தேதி ஈரான் மீது அமெரிக்காவும் இஸ்ரேலும் கூட்டாக இணைந்து தாக்குதல் மேற்கொண்டன. அதற்கு பதிலடி தரும் வகையில் இஸ்ரேல் மற்றும் வளைகுடாவில் உள்ள அமெரிக்க ராணுவ தளங்கள் மீது ஈரான் தாக்குதல் மேற்கொண்டது. இதோடு ஹார்முஸ் ஜலசந்தியை ஈரான் முடக்கியது. இதனால் சர்வதேச அளவில் கச்சா எண்ணெய் விநியோகம் பாதிக்கப்பட்டது. உலக நாடுகளில் எரிபொருள், எரிவாயு தட்டுப்பாடு ஏற்பட்டது.

பாகிஸ்தான் மத்தியஸ்தம்: "ஈரான் நாகரிகம் இன்றிரவு அழிக்கப்படும். அவர்களால் மீண்டெழ முடியாது. இதை நான் விரும்பவில்லை. ஆனால் இதை தவிர வேறு வழியில்லை. ஈரானில் முழுமையான ஆட்சி மாற்றம் ஏற்படும். மதவாத சக்திகள் அழிக்கப்படும். அந்த நாட்டில் புதிய புரட்சி மலரும். ஈரானின் 47 ஆண்டுகால அராஜகத்துக்கு நிரந்தரமாக முற்றுப்புள்ளி வைக்கப்படும்," என்று அமெரிக்க அதிபர் ட்ரம்ப் எச்சரிக்கை விடுத்திருந்தார்.

அந்த கெடு முடிய சுமார் 90 நிமிடங்கள் மட்டுமே இருந்தது. இந்திய நேரப்படி அதிகாலை 5.30 மணிக்கு ஈரான் மீது தாக்குதல் நடத்த அமெரிக்கா தயார் நிலையில் இருந்தது. 'என்ன நடக்கும்' என்ற பதைபதைப்பில் உலக மக்கள் இருந்தனர். ஈரான் அரசின் கோரிக்கையை ஏற்று தங்கள் நாட்டின் உள்கட்டமைப்பு வசதிகளுக்கு அருகே மனித சங்கிலி அமைத்து உயிர் தியாகத்துக்கு ஈரான் மக்கள் தயாராக இருந்தனர். அதை ஈரானின் அரசு ஊடகம் நேரலையில் ஒளிபரப்பியது.

அமெரிக்க அரசின் கெடுவுக்கு இணங்க மறுத்தது ஈரான் அரசு. மறுபக்கம் வழக்கமான தாக்குதலை அமெரிக்காவும் இஸ்ரேலும் தொடுத்தன. அமெரிக்கா கார்க் தீவையும், இஸ்ரேல் ஈரானில் உள்ள பாலங்கள் மீதும் தாக்குதல் நடத்தி கொண்டிருந்தன.

இந்த நிலையில் இடைக்கால போர் நிறுத்த முயற்சியில் பாகிஸ்தானின் இஸ்லாமாபாத் நகரில் தீவிரமாக செயல்பட்டார் அந்நாட்டு பிரதமர் ஷெபாஸ் ஷெரீப். அமெரிக்கா மற்றும் ஈரான் தலைவர்களுடன் தொலைபேசி வழியாக அவர் பேச்சுவார்த்தை மேற்கொண்டதாக தகவல்.

அதற்கு முன்பாக செவ்வாய்க்கிழமை அன்று இரண்டு வார கால இடைக்கால போர் நிறுத்த யோசனையை அவர் முன்மொழிந்தார். அதை எக்ஸ் தளத்தில் பகிர்ந்த அவர், அமெரிக்க அதிபர் ட்ரம்ப், துணை அதிபர் வான்ஸ் மற்றும் ஈரான் தலைவர்களை அதில் டேக் செய்திருந்தார். அதிபர் ட்ரம்ப் இரண்டு வார காலம் போர் நிறுத்தத்தை அறிவிக்க வேண்டும், அந்த காலகட்டத்தில் நல்லெண்ண நடவடிக்கையாக ஹார்முஸ் ஜலசந்தியை ஈரான் திறக்க வேண்டும் என அவர் கூறியிருந்தார். பாகிஸ்தானின் இந்த முன்மொழிவு அதிபர் ட்ரம்ப்பின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டதாக வெள்ளை மாளிகையின் செய்திப்பிரிவு செயலர் கரோலின் கூறியிருந்தார்.

பாகிஸ்தானின் இந்த முன்மொழிவானது, போரில் இருந்து அமெரிக்கா பின்வாங்கியது மற்றும் ஈரான் சரணடைந்தது என்ற கூற்றை இரு தரப்பும் தவிர்க்கும் வகையில் அமைந்தது. இதற்கிடையே போர் நிறுத்தம் சார்ந்த ஈரான் சில நிபந்தனைகளை முன்மொழிந்தது.

"பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப், ராணுவ தளபதி அசிம் முனீரின் கோரிக்கையை ஏற்று ஈரான் மீதான தாக்குதலை நிறுத்தி வைக்கிறேன் என்று அறிவித்தார் டிரம்ப்.

# தமிழக தலைமைச் செயலர் முருகானந்தம் அதிரடி மாற்றம்





# ஈரான் - அமெரிக்கா போர் நிறுத்தம்: இந்தியா வரவேற்பு

# இன்று முதல் 29-ம் தேதி வரை கருத்து கணிப்புகள் வெளியிடத் தடை

# தஞ்சாவூரில் பிற்கால கல்வெட்டு கண்டெடுப்பு

# ரெப்போ வட்டி விகிதத்தில் மாற்றமில்லை!


தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com

Tamilnaduepaper

சென்னை

09.04.2026 வியாழக்கிழமை

இலவச இ–பேப்பர்